வெளியீடு 6-1-2006 Issued 6-1-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 27, 2005—தொகுதி 85—எண் 2**

**Tuesday the 27th September, 2005 —Volume 85—No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V211 31'P03
P05. 85. 2
185241

[Price Rs. 3.00

570
21.2.06

27–9–2005

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **வினாக்கள்–விடைகள்—**

    உடுக்குறியிட்ட வினாக்கள் 273-308

2. **தகவல் கோரல்—**

    சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கக் கோருதல் 308-310

3. **விதி 110–ன்கீழ் அறிக்கை—**

    வனத் துறைப் பணியாளர்களுக்கு சலுகைகள் — மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 310-315

4. **மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி.டி. தண்டபாணி கையூட்டு பெற்றதற்கான ஆதாரங்கள் என மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அளித்தவை** 315-330, 333-334, 335, 340, 342

5. **திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள் வாழ்ந்த இல்லத்தை நினைவிடமாக்கி இலக்கமுறை நூலகம் அமைக்க அரசு எடுத்துள்ள முடிவும் – பாராட்டும்** 331-332, 337-340

6. **கவன ஈர்ப்பு—**

    சீர்காழி, எடமணல் மற்றும் திருநகரி கிராமங்களுக்கிடையே உப்பனாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல் 334, 335, 336

7. **அறிக்கைகள் அளித்தல்—**

    (அ) அரசு உறுதிமொழிக் குழு 340-341

    (ஆ) மனுக்கள் குழு 341

பக்கங்கள்

**8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும்வாக்கெடுப்பும்**—*தொடர்ச்சி* 341, 342-397

*திரு. எச். ராஜா* 342,343-350

**திரு. அ. அன்வர் ராஜா* 350-370

*திரு. வை. சிவபுண்ணியம்* 370-378, 380-384

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்* 384-386, 388-393, 396, 397

**9. அரசினர் தீர்மானம்**—

*விதி 32–ஐத் தளர்த்தல்* 397, 398

**10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— 398

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## புரட்டாசி 11, பார்த்திப—திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 செப்டம்பர் 27, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை*
*எண்ணி இடத்தால் செயின்"*

*வினை செய்வதற்குரிய வழிவகைகள் எல்லாம் குறைவில்லாதபடி அவற்றை எண்ணிப் பார்த்து, இடத்தொடு பொருந்த குறிப்பிட்ட வினையை ஒருவர் செய்தால், அவ்வினை வெற்றி பெற அஞ்சாமையைத் தவிர அவருக்கு வேறு துணை எதுவும் வேண்டுவதில்லை.*

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா எண் 61, திரு. டி.பி. பொன்னம்பலம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

**61—**

**சுற்று வட்டச் சாலை**

*** 30272—திரு. டி.பி. பொன்னம்பலம்:**

*மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சமயநல்லூர் தொகுதி, மேலூர் சாலையிலிருந்து திண்டுக்கல் சாலை வரை சுற்று வட்டச் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?*

[2005 செப்டம்பர் 27

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள இரண்டாம் கட்டச் சுற்றுச் சாலையானது, மதுரை மீனாட்சி மருத்துவமனைக்கு அருகில் பிரிந்து, மதுரை திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் இணையும் வகையில் அமைக்கக் கோரப்பட்டுள்ளது. தற்போது இரண்டாம் கட்டமாக ஊத்தங்குடி–சமயநல்லூரை இணைக்கும் வட்டச் சாலை அமைப்பதற்கான திட்டம் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பரிசீலனையில் உள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இரண்டாவது தலைநகரமாம் மதுரையில் சமயநல்லூர் தொகுதி அமைந்துள்ளது. சமயநல்லூர் தொகுதியில் திருச்சி–மெட்ராஸ்–மேலூர் வழியாகவும், சேலம்–தருமபுரி–திண்டுக்கல் வழியாகவும் வந்து இணையும் சாலையாகும் இது. அதனால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உண்டாகிறது. ஆகவே, சுற்று வட்டச் சாலையை அமைக்கும் கோரிக்கை பல நாட்களாக வைக்கப்பட்டுள்ளது. எனவே, இதனை மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அடுத்த ஆண்டாவது சுற்று வட்டச் சாலையை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சுற்று வட்டச் சாலை அமைக்கும் பணி மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பரிசீலனையில் தற்போது இருக்கின்றது. அந்தச் சாலைப் பணியை விரைந்து எடுப்பதற்கு மீண்டும் வலியுறுத்தப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமல் கொடுக்கும் அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் இந்தச் சாலையை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்ததற்கு அமைச்சர் அவர்களுக்கும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் மாவட்டத்தின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
186243
சென்னை 600 008



2005 செப்டம்பர் 27]

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச் சாலை என்பது மிகவும் அவசியமாக இருப்பதால், வளர்ந்து வரும் மதுரையில் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் பல்வேறு சுற்றுச் சாலைகளை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நன்றி. மதுரையிலிருந்து அழகர்கோவில் வரை 10½ கோடி ரூபாய் செலவில் சுற்றுச் சாலை அமைத்திருக்கிறார்கள். ஆனால், அழகர்கோவிலிலிருந்து மேலூர் வரைக்கும் அதை இணைத்தால்தான், சென்னையிலிருந்து வருகிற பக்தர்களும் மற்ற பயணிகளும் மேலூர் வழியாக அழகர்கோவில் போய், மதுரைக்குப் போவதற்கு வசதியாக இருக்கும்.

அதேபோல, ஒத்தக்கடையிலிருந்து திருவாதவூர் வரை 5½ கோடி ரூபாய் செலவிலே சுற்றுச் சாலை அமைத்துக் கொடுத்திருக்கின்றார்கள் அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில். அதை திருவாதவூர் வரை நிறுத்தினால் மட்டும் போதாது. மேலூரிலே வந்து இணைத்தால்தான், சுற்றுப்புறம் போவதற்கும், தேசிய நெடுஞ்சாலையில் ஏதாவது விபத்துகள்–accidents-ஆகிற நேரங்களிலே, மேலூர் வழியாக திருவாதவூர் சென்று மதுரை போவதற்கும், மேலூர் வழியாக அழகர்கோவில் போய் மதுரை போவதற்கும் அந்தச் சுற்றுச் சாலையில் நல்லமுறையில் போக்குவரத்து அதிகரிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகையால் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வதெல்லாம், பல கோடி ரூபாய்க்கு நீங்கள் சாலை போட்டுக் கொடுத்திருக்கிறீர்கள். இந்தக் குறையையும் நீக்கி அகலப்படுத்தி புதிய சாலையாக அமைத்துக் கொடுத்தால், போக்குவரத்து நெரிசலின்றி மதுரைக்கு செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகையால், அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை செய்து கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரங்களில் வாகன நெரிசலைத் தவிர்ப்பதற்காக வட்டச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. ஒரு நகருக்குள் செல்லாமல், வேறு நகருக்குச் செல்லவேண்டிய வாகனங்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்து, வட்டப் பாதையினால் ஆகும் செலவினத்தைவிட வாகனங்களின் எரிபொருள் சேமிப்பு, நேரக் குறைவு ஆகியவற்றால் ஏற்படக்கூடிய பயன் கூடுதலாக இருப்பின், வட்டச் சாலைகள் அமைக்கத் திட்டமிடப்படுகிறது. மாண்புமிகு மேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சாமி அவர்கள் கோருகின்ற அந்தச் சாலை இந்த வரையறைக்குள் அமைந்தால், அந்தப் பணி ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2005 செப்டம்பர் 27

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை நகரிலே ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு, பல்வேறு வட்டச் சாலைகள் மதுரை நகரைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தேசிய நெடுஞ்சாலையாகிய குமுளி–இராமேஸ்வரம் சாலையில் மதுரைக்கு மேல்புறம் இருக்கின்ற விராட்டிபத்து, அச்சபத்து என்கின்ற ஊர்களுக்குள் செல்கின்றபோது, அந்தச் சாலை மிகவும் குறுகலாக இருக்கின்ற காரணத்தினால், அங்கு பல்வேறு விபத்துகள் ஏற்படுகின்றன. அதோடு போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகிறது. அந்தப் பகுதியை மாற்றியமைத்து, சுற்றுச் சாலை அமைத்து மேற்குப் பகுதியிலே போக்குவரத்தை சீர் செய்வதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? அப்படி இல்லையென்றாலும், அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்தச் சுற்று வட்டச்சாலை தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு, மொடக்குறிச்சி, பெருந்துறை தொகுதி வழியாக சேலம், கோவை தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் புறவழிச்சாலைத் திட்டம், கடந்த 4 ஆண்டுகளாக அரசின் ஆய்வில் உள்ளது. மதிப்பீட்டுக் குழு, ஈரோடு மாவட்டத்திற்கு வருகைத் தந்த நேரத்திலேகூட பார்வையிட்டது. 68 கோடி ரூபாயிலே இந்தத் திட்டம் இருப்பதாகக் கூறப்பட்டது. இந்த ஆண்டு ஐம்பதாயிரம் கிலோமீட்டர் தார்ச் சாலைகளைத் தரமான சாலைகளாக அமைத்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அரசு, இந்த ஆண்டு



2005 செப்டம்பர் 27]

இந்த புறவழிச் சாலைத் திட்டத்தையும் நிறைவேற்றிக் கொடுக்குமா என்பதை உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கின்றது. விரைந்து நடப்பதற்கு வலியுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் சேலம் முதல் வாணியம்பாடி வரையிலான சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த சூழ்நிலையை மாற்ற தமிழக அரசு நிதியை ஒதுக்கிக் கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒதுக்கப்பட்ட இந்த நிதி, டெண்டர் விடப்பட்டு, அங்கொன்றும் இங்கொன்றுமாக பணி துவங்கப்பட்டது. ஆனால் பணி இதுவரை நிறைவேறவில்லை. தமிழகத்தில் இப்படி இந்தச் சாலை டெண்டர் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்ட சூழ்நிலையில் அநேகமாக இதுமட்டும் இதுவரை முடிக்காமல் குண்டும் குழியுமாக இருக்கிறது. அதனால் போக்குவரத்து கடுமையான முறையிலே பாதித்திருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக டெண்டர் விடப்பட்ட இந்தச் சாலைப் பணி இன்னும்கூட பணி முடிக்கப்படாமல் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. எனவே, உடனடியாக இந்தப் பணியை முடிப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்தச் சாலைப் பணியை விரைந்து முடிப்பதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 62, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

[2005 செப்டம்பர் 27

62—

## கிழக்குக் கடற்கரைச் சாலை

***64132—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, திருத்துறைப்பூண்டி, அதிராம்பட்டினம், மல்லிப்பட்டினம், தூத்துக்குடி வரையுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் முதல் நாகப்பட்டினம் வரையுள்ள சாலைப்பகுதி தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரை 335 கி.மீ. கிழக்குக் கடற்கரைச் சாலை உலக வங்கி நிதியுதவியுடன் செயலாக்கப்பட உள்ள தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளது, இச்சாலைப் பணி 3 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு, 2 சிப்பங்களுடைய வேலை துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மூன்றாம் சிப்பத்தின் பணி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தம் இறுதியாக்கப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கின்றது. அப்பணியும் விரைவில் செயல்படுத்தப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் முதல் நாகப்பட்டினம், தூத்துக்குடி வரை நடைபெறுகின்ற கிழக்குக் கடற்கரைச் சாலை பணி அநேகமாக இரண்டு கட்டப் பணிகள் என்னுடைய தொகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், அடுத்ததாக இன்னொரு திட்டப் பணி இன்னும் துவங்குவதற்கு அமைச்சர் அவர்கள், டெண்டர் விடப்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டு காலமாக கிழக்குக் கடற்கரைச் சாலை பராமரிப்பின்றி, இந்தத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதற்காக, பள்ளம் படுகுழிகள் நிறைந்து போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எல்லாம்கூட, சுனாமியால் பாதிக்கப்பட்டபோது அந்தச் சாலைகளில் வருகின்றபோது பெரிய



2005 செப்டம்பர் 27]

அளவிற்கு, அமைச்சர்களே போகமுடியாத அளவிற்கு, சாலை அமைந்திருந்தது. அந்தப் பெரும் திட்டப் பணிகள் நடைபெற்றாலும் இடைக்காலத்திலே அந்தப் பணியை, அந்தப் பள்ளம் படுகுழியான இடத்தை, நம்முடைய நெடுஞ்சாலைத் துறை மூலமாக சமப்படுத்தினால் போக்குவரத்துக்கு பாதிப்பு இல்லாமல் இருக்கும். ஏனென்றால் இரண்டு, மூன்று சுற்றுலா மையங்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்றன. தமிழ்நாடு முழுமைக்கும் இருக்கும் மக்கள் வேளாங்கண்ணி, நாகூர் போன்ற இடங்களுக்கும், கோடியக்கரை போன்ற பகுதிகளுக்கும் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆக இதற்குரிய முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்தச் சாலையின் முக்கியத்துவம் கருதித்தான் ஆற்காட்டிலிருந்து தூத்துக்குடி வரையிலான அந்தச் சாலையை உலக வங்கியினுடைய திட்டத்தில் சேர்த்து பணி துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது ஏற்படுகின்ற பழுதுகளை சரி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கோரியிருக்கிறார். உடனடியாக இருக்கின்ற பழுதுகளைப் பார்ப்பதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அநேகமாக அந்த road sector மூலமாக எடுத்திருக்கின்ற அந்தப் பணிகளுக்காக, சம்பந்தப்பட்டவர்களைப் பார்க்கிறபோது நாங்கள் extra-வாக வேலை செய்ய முடியாது என்று அவர்கள் மறுத்து வருகிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், தஞ்சாவூரிலிருந்து மன்னார்குடி வரை நல்ல சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று மன்னார்குடி முதல் கோடியக்கரை வரை இருக்கிற சாலைகள் மோசமான நிலைமையிலே பழுதடைந்த நிலைமையிலே இருக்கின்றன. வேதாரண்யம் கோடியக்கரை பகுதியிலேதான் ஆயிரக்கணக்கான லாரிகள், கனரக வாகனங்கள் வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் செல்லக்கூடிய அளவிற்கு உப்பு உற்பத்தியும், சவுக்கைகளும், பூக்களும் நிறைந்திருக்கின்றன. இரவு நேரங்களில் பார்த்தால் மிக அதிக அளவில் ஆயிரக்கணக்கான லாரிகள் செல்லுகின்றன. போக்குவரத்து என்பது

[2005 செப்டம்பர் 27

அங்கே குறுக்கே நடக்க முடியாத அளவிற்கு சென்று கொண்டிருக்கிற காரணத்தால், சாலைகளை அமைத்துக் கொடுக்க வேண்டும். அதேபோன்று, திருத்துறைப்பூண்டியைவிட்டு திருவாரூர் மாவட்டத்திலே பார்த்தோம் என்று சொன்னால் பெரும்பகுதி சாலைகள் மாவட்டச் சாலைகளே பராமரிப்பு இல்லாமல் இதுவரையிலும் இருக்கின்றன. நேரடியாக அமைச்சரிடத்திலே—இந்தக் கேள்வி மூலமாக இல்லை, நேரடியாக அமைச்சரிடத்திலே—நான் சொல்லி இருக்கிறேன். அந்தப் பணிகளையும் நிறைவேற்றித் தருவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து அந்தச் சாலைகள் சரி செய்யப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் தெரிவித்ததுபோல, அந்த கிழக்குக் கடற்கரைச் சாலைகள் உடனடியாக செப்பனிடப்படாததால், போக்குவரத்துக்கு மிகப் பெரிய அளவிலே பாதிப்பு ஏற்படுகிறது. குறிப்பாக திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை அதேபோல, அறந்தாங்கி, காரைக்குடி வழியாகச் செல்லுகின்ற அந்தப் பகுதியில் பல மணி நேரம் கடந்துச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அதை விரைவாக செப்பனிடுவதற்கு உரிய முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதோடு இப்போது குறிப்பிட்ட அந்த தஞ்சாவூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், கோடியக்கரை சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டு காலமாக வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது தஞ்சாவூர் வரையிலும் தேசிய நெடுஞ்சாலை இருக்கிறது. அந்த நெடுஞ்சாலையிருந்து மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், கோடியக்கரை வரை இணைத்தால் வேதாரண்யத்திலிருந்து திருச்சி இணைப்புச் சாலை என்பது ஒரு பிரதான சாலையாக மாற்றுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. பொருள் போக்குவரத்து மற்ற எல்லாவிதமான வசதிகளும் ஏற்படும் என்கிற காரணத்தாலே, அந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குவதற்குரிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.



2005 செப்டம்பர் 27]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குவதற்குரிய பிரேரணை மத்திய அரசுக்கு அனுப்பப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.கே. பெருமாள்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் முதல் தூத்துக்குடி வரையுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையில் என்னுடைய விளாத்திகுளம் தொகுதியில் வேம்பாறு முதல் தருவைக்குளம் வரை 43 கிலோ மீட்டர் வரை படுமோசமான சூழ்நிலையில் இருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அமைச்சர் அவர்களைக் கூடியவிரைவிலே அந்தப் பணி தொடங்கப்படுமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரை உள்ள 335 கிலோ மீட்டர் கிழக்குக் கடற்கரைச் சாலை மேம்படுத்தும் திட்டம் உலக வங்கி கடனுதவியுடன் செயலாக்கப்பட உள்ளது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் இந்தத் திட்டம் எடுக்கப்பட்டு மூன்று சிப்பங்களாக பணி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கடந்த 10-2-2005 அன்றுதான் இதனுடைய ஒப்பந்தப்புள்ளிகள் எல்லாம் இறுதியாக்கப்பட்டு அவர்களிடம் தளம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய ஒப்பந்தக்காலம் 36 மாதங்களாக இன்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இந்த இடைப்பட்ட காலத்தில் அவர்கள் செய்கின்ற பணிக்கு, போடப்படுகின்ற சாலைகளுக்கு இடையிலே ஏற்படுகின்ற பழுதுகளை அவ்வப்போது சரி செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பல்வேறு கோரிக்கைகளை விடுத்திருக்கின்றார்கள். அந்தச் சாலைகள் உலகத் தரம் வாய்ந்த சாலைகளாகவும் தமிழ்நாட்டில் இருக்கின்ற மற்ற சாலைகளைவிட தரம் உயர்ந்த நம்பர் 1 சாலைகளாகவும், மிகவும் உறுதியான சாலைகளாகவும் போடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. உலக வங்கியினுடைய வரையறையின்படி, 36 மாதங்கள் என்ற நிலை இருப்பதனால், இடையிலே ஏற்படுகின்ற பழுதுகளைச் சரி செய்வதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2005 செப்டம்பர் 27

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலையைப் பற்றி இப்போது நம்முடைய அமைச்சர் அவர்கள் சிறப்பான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே மூன்று பகுதிகளாகச் செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, முதற்கட்டமாக முடித்திருக்கிற பணி, சென்னையிலிருந்து கடலூர் வரை செல்லுகின்ற அந்தச் சாலையிலே, ஏராளமான வளைவுகள் இருக்கின்றன. அதனாலே தினந்தினம் விபத்துகள் அதிகமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. உயிர் இழப்புகள் அதிகமாக இருக்கின்றன. இதைச் சரி செய்ய அரசு முன்வருமா? இப்போது புதிதாகப் போடப்படுகிற சாலைகளிலும் விபத்துகளைத் தவிர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை, உலக வங்கியினுடைய திட்டத்தில் வராது. ஏற்கெனவே கிழக்குக் கடற்கரைச் சாலை எடுக்கப்பட்டபொழுது, அதனுடைய நொடிகளைச் சரிசெய்துதான் அந்தச் சாலையை எடுத்தார்கள். மீண்டும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில், எங்கெல்லாம் நொடி இருக்கிறது என்பதனைக் கண்டறிந்து, ஆய்வு செய்து அதைச் சரிசெய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடலூரிலிருந்து தூத்துக்குடி வரை இருக்கக்கூடிய சாலை, இப்பொழுது தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். ஏற்கெனவே, திருப்பதியிலிருந்து கடலூர் வரை இருக்கக்கூடிய சாலையையும் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கான முன்மொழிவினை, நம்முடைய அரசாங்கத்திடமிருந்து என்.ஓ.சி. கேட்டிருக்கிறார்கள். அதையும் நீங்கள் கொடுத்துவிட்டீர்கள் என்று சொன்னால், இப்பொழுது தமிழகத்தில் கிருஷ்டியான்பேட்டை என்கின்ற இடத்திலிருந்து தொடங்கி, கடலூர் போகக்கூடிய அந்தச்



2005 செப்டம்பர் 27]

சாலை — அதற்கு முன்னால் ஆந்திராவிற்குப் போய்விடுகிறது — இந்தச் சாலையையும் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு மத்திய அரசு தயாராக இருக்கிற காரணத்தினாலே — உங்களிடம் அவர்கள் கேட்பதே அந்த என்.ஓ.சி. அந்த என்.ஓ.சி.-யை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தந்தால், இந்தச் சாலையை கடலூர் சாலையோடு இணைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்தால், நிச்சயமாக தூத்துக்குடி வரை இந்த கிழக்குக் கடற்கரைச் சாலையோடு இணைந்து செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று கேட்டுக்கொண்டு, வேலூருக்கும் ஒரு வட்டச்சாலை, அதாவது ஒரு ring road ஒன்றுக்கு— ஏனென்றால், அரை மணி நேரமாகிறது வேலூரைக் கடக்க வேண்டுமென்று சொன்னால், மற்ற வண்டிகள்; ஆகவே, அதற்கும் ஒரு ring road போடுவதற்கு—proposal—முன்மொழிவினை ஏற்படுத்தி, உடனடியாக அந்த வசதியைச் செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில், மத்திய அரசினுடைய தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குக் கருத்துரு அனுப்பப்படும். வேலூரினுடைய சுற்றுச் சாலையைப் பற்றி இங்கு சொன்னார்கள். சுற்றுச் சாலையை அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள், வரையறைக்குள் அந்தப் பணி இருக்குமேயானால், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த சேலம்-திருப்பத்தூர்-வாணியம்பாடி சாலை — எஸ்.டி.வி. சாலை என்று சொல்வார்கள். அது 120 கிலோமீட்டர் கொண்ட சாலையாகும். ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாக, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள், road sector மூலமாக 34 கிலோமீட்டர் வரை பழுதுபார்ப்பதற்காக ரூ.17 கோடி நிதி ஒதுக்கித் தந்திருந்தார்கள். அந்த ஒப்பந்ததாரர்கள் சரியாக கவனம் செலுத்தாத காரணத்தினால், அந்தச் சாலை தற்போது போடப்படாமல் உள்ளது. ஆகவே, அரூர் சட்டமன்ற உறுப்பினர் கூறிய அதே சாலையைத்தான் நானும் குறிப்பிடுகிறேன். ஆகவே, என்னுடைய தொகுதியில் வருகிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் விரைவில் போட்டுத்தரப்படும் என்ற உறுதியை இங்கே

[2005 செப்டம்பர் 27

அளித்திருக்கிறார்கள். எனவே, கூடியவிரைவில் அந்தச் சாலை சீர்படுத்தப்படுமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக வங்கியினுடைய திட்டத்தின்கீழ், 15 சிப்பங்களாக தரம் உயர்த்தித் தருவதற்கான சாலைகள், 2000 கிலோமீட்டர் உள்ளடக்கிய அந்த சாலைப் பணிகள், முதற்கட்டமாக 15 சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அந்த 15 சாலைகளில்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தச் சாலையும் உள்ளடங்கி வருகின்றது. பணித்தளம் ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர் காலதாமதம் செய்து கொண்டிருப்பதாக இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது என்னுடைய ஆய்விலும் தெரிய வந்தது. அந்த ஒப்பந்தக்காரரிடம், சீக்கிரம் அந்தச் சாலையைப் போடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலை என்பது, கடலூர் நகரையும் கடந்து, கடலூர் சிப்காட் எல்லை வரையிலே கொண்டுபோய் நிற்பது, முதற்கட்டமாகும். கடலூர் சிப்காட் வரையிலே போவதற்கான அந்தச் சாலை, கடலூர் நகரினுள்ளே செல்கின்ற காரணத்தினால், போக்குவரத்தில் மேலும் கடுமையான நெருக்கடியை உருவாக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, எதிர்காலத்திலே இருக்கின்ற நன்மையையும் கருதி, கடலூருக்கு ring road என்று சொல்லும் by-pass என்ற அந்தச் சாலைத் திட்டத்தை இந்தத் திட்டத்தோடு இணைத்து செய்வதற்காக, சுற்றுச் சாலை–வட்டச் சாலை போடுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு பரிசீலனை செய்யுமா, உடனடியாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையான கடலூருக்கு புறவழிச் சாலையோ அல்லது சுற்று வட்டச் சாலையோ,



2005 செப்டம்பர் 27]

தேவைப்படுகிற, அந்தப் பணி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 63, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) கூப்பிடுவது என்னுடைய இஷ்டம் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**63—**

### தொழிற்சாலைகள்

***61695—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் சிப்காட் மூலம் தொழிற்சாலைகள் தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், ஓசூர், பர்கூர் ஆகிய இடங்களில் சிப்காட் நிறுவனம் தனது தொழில் வளாகங்களை உருவாக்கி வருகிறது. இருப்பினும் தேவையின் அடிப்படையில், மொரப்பூர் தொகுதியில், இந்த சிப்காட் வளாகங்கள் உருவாவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், தருமபுரி மாவட்ட மக்களுக்காக பல நல்ல திட்டங்களைத் தந்து, அதனை ஒரு முன்னேறி வருகிற மாவட்டமாக உருவாக்கி வருகிறார்கள். நிர்வாக நலன் கருதி, தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, கிருஷ்ணகிரியை தலைமையிடமாக வைத்து ஒரு மாவட்டத்தைப் பிரித்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பர்கூரிலே தொழிற்பேட்டை

இருக்கிறது என்றும், ஓசூரிலே தொழிற்பேட்டை இருக்கிறது என்றும் கூறியிருக்கிறார்கள். அந்த பர்கூர், ஓசூர் பகுதிகள் எல்லாம், மாவட்டம் பிரிந்ததன் காரணமாக, அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சார்ந்தேயிருக்கின்றன. தருமபுரி மாவட்டத்திற்கென தனியாக ஒரு தொழிற்சாலை இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், தருமபுரி மாவட்ட மக்கள் மீது அக்கறை கொண்டு, சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, அங்கே கல்விக்கூடங்கள், மருத்துவ வசதிகள், கிராமச் சாலைகள், நூலகங்கள், இளைஞர்களுக்கெல்லாம் விளையாட்டுப் பயிற்சிகள் போன்றவற்றை எல்லாம் உருவாக்கிக் கொடுத்து, அந்த மாவட்ட மக்கள் மீது அக்கறை கொண்டு முன்னேற்றி வருகிறார்கள்.

சமீபத்திலே டில்லியிலே நடந்த தேசிய ஒருமைப்பாட்டு குழுக் கூட்டத்தில்கூட மாண்புமிகு அம்மா அவர்கள் நக்சலைட்டுகளே தமிழகத்தில் இல்லையென்ற ஒரு கருத்தைச் சொல்லி தமிழகத்தினுடைய நிலையை இன்றைக்கு தலை நிமிரச் செய்திருக்கிறார்கள். அந்த தேசிய ஒருமைப்பாட்டு குழுக் கூட்டத்தில் பேசுகின்றபோதுகூட, பக்கத்திலே அண்டை மாநிலங்களிலே, ஆந்திராவிலே இருக்கக்கூடிய நக்சலைட்டுகள், கர்நாடகத்திலே இருக்கக்கூடிய நக்சலைட்டுகள் எல்லாம் அந்தப் பகுதியிலே ஊடுருவக்கூடாது என்பதற்காக தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காக, அந்த தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்திய அரசின் கட்டுபாட்டில் உள்ள இராணுவத் துறையில் ஒரு இட ஒதுக்கீட்டினை வழங்க வேண்டுமென்று அந்த தருமபுரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய படித்த இளைஞர்களுக்காக அங்கே தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்திலே பேசியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே, இன்றைக்கு தருமபுரி மாவட்ட மக்கள் பயன்பெறுகிற வகையிலும், அங்கே படித்த, தொழில் கல்வி பயின்ற இளைஞர்கள் பயன்பெறுகின்ற வகையிலும், அங்கே மொரப்பூர் தருமபுரி மாவட்டத்தினுடைய மையப்பகுதியாக இருப்பதாலும், மொரப்பூரிலே இரயில்வே நிலையம் இருப்பதாலும், மொரப்பூரிலே அதிகமான நிலங்கள் இருப்பதாலும், அந்த மாவட்டத்தினுடைய மக்கள் நலன் கருதி, அந்தத் தொழிற்சாலை இல்லை என்ற நிலையை மாற்றுவதற்காகவும், அங்கே வறட்சியாக இருக்கின்ற காரணத்தினால், அந்த மாவட்டத்தினுடைய மக்கள் மீது அக்கறை கொண்டு கூடியவிரைவில் இந்த ஆண்டிலேயே ஒரு புதிய தொழிற்சாலை உருவாவதற்கு மாண்புமிகு இதயதெய்வம் அம்மா



அவர்களுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே நிலங்களைக் கையகப்படுத்தி தொழில் வளாகங்களை உருவாக்குவதுதான் சிப்காட் நிறுவனத்தினுடைய பங்கு. தொழில்களைத் தொடங்குவதற்கு, தொழில் முனைவர்களை அழைத்துப் பேசி அதில் பங்கு வகித்து டிட்கோ நிறுவனம்தான் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு முன்வருகின்றன. ஆகவே, அப்படி தனியார் யாரேனும், தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு முன்வருவார்களேயானால், டிட்கோ நிறுவனம் மூலம் தனது பங்கினைச் செலுத்தி தொழிற்சாலை அமைப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் முன்வந்தால், அங்கே தொழிற்சாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே கொஞ்சம் வறட்சி. அங்கே மிகப் பெரிய செல்வந்தர்கள், தனியார்கள் ஆர்வம் இல்லாத காரணத்தினால், அரசாங்கத்தின் மூலமாகவே மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய அரசு, அங்கே தொழில் தொடங்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிப்காட் நிறுவனம், நிலம் ஆர்ஜிதம் செய்கின்றபோது, குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே, ஆதிதிராவிட மக்கள் வசிக்கக்கூடிய பகுதிகளை ஆர்ஜிதம் செய்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அவர்கள் புறம்போக்கிலே இல்லை. அரசாங்கம்

[2005 செப்டம்பர் 27

ஏற்கெனவே 30 ஆண்டுகளுக்கு முன்பாக ஒவ்வொரு குடும்பத்திற்குமென்று 3 சென்ட் பட்டா கொடுத்து, 100 குடும்பங்கள் அதிலே வசித்து வருகிறபோது, வீடு கட்டி வாழ்கின்ற அவர்களுடைய இடங்களை சிப்காட் நிறுவனம் நில ஆர்ஜிதம் செய்வதைத் தடுத்து நிறுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்த அரசும் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிப்காட் நிறுவனம், ஆதிதிராவிடர் வசிக்கின்ற பகுதிகளில் ஆதிதிராவிடர்களுக்கு ஏற்கெனவே பட்டா கொடுக்கப்பட்ட இடங்களில் அவ்வாறு நிலம் ஆர்ஜிதம் செய்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால், நிச்சயமாக அது தடுத்து நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை சம்பந்தப்பட்ட பிரச்சினை என்ற காரணத்தால், கன்னியாகுமரி மாவட்டத்தில், இரப்பர் தொழிற்சாலை ஆரம்பிப்பது சம்பந்தமாக, 1980 ஆம் ஆண்டு வாக்கில், இந்த மாமன்றத்திலே கோரிக்கை வைத்து, அன்றைய அரசு அதை ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டது. பின்னால் வந்த அரசு, அங்கே இரப்பர் பூங்கா அமைக்க இருப்பதாகச் சொன்னது. ஆனால், இதுவரையிலேயும், எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை. தேவையான மூலப் பொருள் இரப்பர் கிடைக்கின்றது, அந்த மாவட்டத்திலே. தரமான இரப்பர் கிடைக்கிறது. நம்முடைய மாவட்டத்திலே இருக்கின்ற அரசு வாகனங்களுக்குத் தேவையான டயரையும், டியூபையும் உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்சாலை அங்கே உருவானால், குறைந்தபட்சம் 500 பேருக்கு வேலைவாய்ப்பைத் தர முடியும். அந்தவகையிலே நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி தொகுதியில், செண்பகராமநல்லூர் பகுதியில் இரப்பர் தொழில் பூங்கா அமைப்பதற்கு ஏற்கெனவே திட்டமிடப்பட்டு, அதற்கான தொழில் முனைவோரும் கண்டறியப்பட்டு, அதற்கான முயற்சிகள் அனைத்தும் முடிவுறுகின்ற நிலையில், அந்தத் தொழில் முனைவோர் தொழில் தொடங்குவதற்குச் சற்றுக் காலதாமதம்



2005 செப்டம்பர் 27]

ஆகியிருக்கின்றது. இருந்தாலும், அதனைத் தொடங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில், துணைத் தலைவர் விருப்பப்பட்டால்தான் அனுமதி கொடுப்பேன் என்று சொல்வது எந்த வகையிலேயும் ஏற்க முடியாது. தலைவர் பொறுப்பிலே அந்த இருக்கையிலே இருக்கும்போது, பாரபட்சம் இல்லாமல் நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாரபட்சம் இல்லாமல்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அது நடக்கக்கூடிய ஒன்றுதான். பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, சொல்கிறேன். கேட்பதனால்தான் சொல்கிறேன். என் இஷ்டம் என்று சொன்னீர்களே. அங்கே ஒருவர் கேட்டதற்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** என் மாவட்டத்தின் பிரச்சினையைக் கேட்கிறேன். கையைத் தூக்கிக் கொண்டே இருக்கிறேன், ஏன் அனுமதியே தரவில்லை என்று சொல்லிக்கொண்டு. எல்லோருக்கும் கொடுத்துவிட்டு அப்புறம் கொடுக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் திரு. ஆறுமுகத்திற்கு கொடுத்திருக்கிறேன், உங்கள் கட்சியைச் சேர்ந்தவருக்கு.

**திரு. ஜி.கே. மணி:** இந்த நடவடிக்கை இந்தச் சட்டமன்றத்திலே கூடாது. ஆகவே, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..(குறுக்கீடு) மிரட்டுவதெல்லாம் இல்லை. சும்மா, நான் மிரட்டுகிறேன் என்பதுபோல ஏன் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) "மிரட்டுகிறேன், மிரட்டுகிறேன்" என்று பேசினீர்கள் என்றால், எப்படி? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சரி. நீங்கள் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அவ்வாறு பேசக் கூடாது. அதாவது... (குறுக்கீடு) நீங்கள் பொறுப்பாக இருக்க வேண்டும்.

[2005 செப்டம்பர் 27

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சரி, திரு. ஜி.கே. மணி பேசுங்கள். நீங்கள் கேள்வி கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதாவது, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ சத்தம் போட்டு, ஒரு சிலருக்குதான் பேசத் தெரியும் என்று நினைக்கக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இந்தச் சட்டசபையில் சில மாண்புகள் இருக்கின்றன; மரபுகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டும். எப்படி வேண்டுமானாலும் பேசக்கூடாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், தமிழகத்தினுடைய பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்திலே, அங்கே தனியார் தொழில் தொடங்குவதற்கு முன்வருவார்கள் என்று சொன்னால், இந்த அரசு பரிசீலிக்கும்; உதவி செய்யும் என்ற அந்த நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அங்கே தொழில் தொடங்குவதற்கு முன் வராத ஒரு காரணம். அதேவேளையில், மத்திய அரசாங்கம் மிகப் பின்தங்கிய மாவட்டங்களைத் தேர்வு செய்து, அந்த மாவட்டங்களினுடைய வளர்ச்சிக்காகப் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. அப்படிப்பட்ட அந்தப் பின்தங்கிய மாவட்டங்களின் பட்டியலிலே, இதுவரையிலேயும் தருமபுரி மாவட்டம் இடம் பெறவில்லை. அதற்குண்டான எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. இங்கே, மாநில அரசிடமிருந்து உரிய முன்மொழிவு வரவில்லை என்ற ஒரு வருத்தமான செய்தி சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த தருமபுரி மாவட்டம், பின்தங்கிய பட்டியலிலே சேர்க்கப்பட்டு, அந்த மாவட்டத்திலே தொழில் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தை பின்தங்கிய மாவட்டமாக



2005 செப்டம்பர் 27]

அறிவிக்கக் கோரி மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ஜி.கே. மணி அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அவருடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64, திரு. ஆ. ராஜகோபால், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**64—**

**கால்நடை மருத்துவமனை**

*** 25467—திரு. ஆ. ராஜகோபால்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், தொம்பக்குளம் கிராமத்திலுள்ள கால்நடை கிளை மருத்துவ நிலையத்தை கால்நடை மருத்துவமனையாக அரசு தரம் உயர்த்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சிவகாசி தொகுதியிலுள்ள தொம்பக்குளம் கிராமத்தில் இருக்கும் கால்நடை கிளை மருத்துவ நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆ) எழாது.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொம்பக்குளம் கிராமம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தினுடைய தென் பகுதியிலும், சிவகாசி சட்டமன்றத் தொகுதியினுடைய மேல் பகுதியிலும் இருக்கிறது. இந்தக் கிராமத்திலே கிளை மருத்துவமனை— கால்நடை மருத்துவ நிலையம்—ஆரம்பித்து 40, 45 ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஏறத்தாழ அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள 20, 25 கிராமங்களிலுள்ள கால்நடைகளுக்கு அது கிளை மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. ஆனால் கால்நடை மருந்தகத்திற்கு கால்நடைகளைக் கொண்டு செல்ல வேண்டுமென்று சொன்னால், 10 கிலோமீட்டருக்கு அதிகத் தொலைவிலுள்ள

பெருமாள்தேவன்பட்டி கால்நடை மருந்தகத்திற்கோ அல்லது 20 கிலோமீட்டர் தொலைவிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கோதான் கொண்டு செல்ல வேண்டியது இருக்கிறது. ஏற்கெனவே அந்தக் கிராமத்தில் கிளை மருத்துவ நிலையத்திற்கு கட்டட வசதிகளும், இட வசதிகளும் அதிக அளவில் இருக்கின்றன. ஏறத்தாழ அந்தப் பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான கால்நடைகளுக்கு சிகிச்சை தரவேண்டிய ஒரு நிலையமாக அந்தக் கிளை மருத்துவ நிலையம் இருக்கின்றது. மேலும், வேளாண்மையிலே போதிய வருமானம் இல்லாத நிலைமையில் அந்தப் பகுதியிலுள்ள கால்நடைகளைப் பேணி அபிவிருத்தி செய்வதன் மூலமாக கிராமப்புறங்களிலே விவசாயப் பெருமக்களுடைய, ஏழை எளிய மக்களினுடைய பொருளாதார நிலைமையை மேம்பாடு செய்யக்கூடிய ஒரு நிலைமை இருக்கின்றது. ஆகவே, இத்தகைய சூழ்நிலையைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நிதியாண்டிலாவது அந்தக் கிளை கால்நடை மருத்துவ நிலையத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த முன்வருவாரா என்பதனை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி தொகுதியில் ஸ்ரீவில்லிபுத்தூர், பெருமாள்தேவன்பட்டி மற்றும் மம்சாபுரம் ஆகிய ஊர்களில் கால்நடை மருந்தகங்கள் இருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் சீரிய ஆட்சியில், வாயில்லா ஜீவன்களின் வாட்டத்தைப் போக்கி சிறந்த சிகிச்சை பெற்றிட ஏதுவாக 306 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டன. நடப்பு ஆண்டில் கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை. இருப்பினும், கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்துவதற்கான செயற்குறிப்பு பரிசீலிக்கப்படும்போது, தொம்பக்குளம் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக உயர்த்துவது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்களினுடைய நீண்ட நாளைய கோரிக்கையைக் கருத்திற்கொண்டு இந்த ஆண்டு அந்தக் கோரிக்கையினை பரிசீலனை



செய்வதாக குறிப்பிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தோடு ஸ்ரீவில்லிபுத்தூர் கால்நடைத் துறை உதவி இயக்குநர் அவர்களினுடைய அதிகார வரம்பிற்குள் 34 கிளை கால்நடை மருத்துவ நிலையங்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றில் 6 மருத்துவ கால்நடை ஆய்வாளர்கள்தான் பணியாற்றுகின்ற ஒரு சூழ்நிலையில், அந்தக் கிளை மருத்துவ நிலையங்களிலே போதிய மருத்துவ வசதி செய்து தர இயலாத ஒரு சூழ்நிலையில் – அத்தகைய தடை ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலையைப் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருந்தகங்களில் கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் 250 கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களுக்கு அனுமதி அளித்துள்ளார்கள். இவை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் கால்நடை உதவி மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டு, காலியாக உள்ள இடங்களில் பணியமர்த்தப்படுவர் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல அவருடைய தொகுதிக்கும் கணிசமான அளவிற்கு கால்நடை மருத்துவர்களை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நியமனம் செய்து கொடுப்பார்கள் என்பதையும் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி தி. மைதிலி.

**திருமதி தி. மைதிலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயே, தமிழே, தமிழகத்தின் பொற்கால முதல்வரே, தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் தொண்டு செய்வதை தன் வாழ்வு என்று வாழ்ந்து வருகின்ற அரசியல் வானத்து ஆற்றல்மிகு ஒளிச்சுடரே, ஏழையெளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமே, அள்ளி அள்ளிக் கொடுக்கும் வள்ளல் மனம் படைத்தவரே, மகளிர் சுய உதவிக் குழுக்களை மலரச் செய்து மகளிரின் சுய வருவாய்க்கு வழிகண்டு, பெண்ணடிமைக் கொடுமைக்கு முடிவுகண்ட பேரரசியே, சாதாரண பெண்ணாகிய என்னையும் சட்டமன்ற உறுப்பினராக அமர வைத்துள்ள என்னுடைய இதய தெய்வமே, (மேசையைத் தட்டும் ஒலி) தங்களை வணங்கி என்னுடைய

நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். காஞ்சிபுரம் ஒன்றியத்தில் முசரவாக்கம் கிராமத்தில் கால்நடைகள் அதிகமாக இருக்கின்றன. அந்தக் கால்நடைகளுக்கு ஏதாவது நோய் வந்தால் 12 கிலோ மீட்டர் தூரமுள்ள காஞ்சிபுரம் மற்றும் 6 கிலோமீட்டர் தூரமுள்ள தாமல் மருத்துவமனைக்குப் போக வேண்டியுள்ளது. ஆகையால் அங்கிருக்கும் விவசாய மக்கள் பயன்பெறும் வகையில் முசரவாக்கத்தில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் ஒன்றியத்தில் உள்ள முசரவாக்கம் கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து இந்த நடப்பாண்டில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் குந்தா ஊராட்சிக்கு உட்பட்ட கிண்ணக்கோரை, மேலூர், அக்கட்டி, பிக்கட்டி, ஆடஹட்டி, ஓசஹட்டி, ஹிரியசீகை, இந்திரா நகர், காமராஜ் நகர், கீழ்தோட்டம், தணியாகண்டி போன்ற பகுதிகளில் ஆடு, பசு மாடு, எருமைகள் மிகவும் அதிகமாக இருக்கின்றன. மருத்துவமனைக்கு நாங்கள் செல்ல வேண்டுமென்றால் 34 கிலோ மீட்டர் தூரமுள்ள மஞ்சூருக்குச் செல்ல வேண்டும். ஆகவே, இதுவரைக்கும் கிளை மருத்துவமனை இல்லையென்றாலும்கூட, மாண்புமிகு அமைச்சர் மூலமாக நடமாடும் ஒரு மருத்துவமனையை வாரம் இரண்டு முறையாவது இந்த 11 ஊர்களுக்கும் அனுப்பி வைத்தால் அங்குள்ள விவசாயிகளுக்கு மிகவும் எளிதான வகையிலே இந்தக் கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை செய்ய முடியும். அந்தவகையிலே, நடமாடும் ஒரு மருத்துவமனையை அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்கட்டி, பிக்கட்டி, தெக்கட்டி ஆகிய கிராமங்கள் 20 கிலோ மீட்டர் தூரம் இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் ராஜு அவர்களுக்கு 82 இலட்சம் ரூபாயாக இருப்பதை இப்போது ஒரு கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்த அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், மாண்புமிகு உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து சுமார் 10 இலட்சம் ரூபாயை இந்த நடமாடும் கால்நடை மருத்துவமனை வசதி செய்வதற்கு ஒதுக்கித் தருவார்களேயானால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு நிச்சயமாக உடன் பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 65, திருமதி வளர்மதி ஜெபராஜ், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**65—**

## வேலைவாய்ப்பு

*** 46654—திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஈத்தை கிடைக்காததால், மூங்கில் கூடை செய்து வாழும் தொழிலாளர்கள் வேலையின்றித் தவிப்பதை அரசு அறியுமா?

(ஆ) அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் 1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைப்படுத்துவதால் காடுகளின் மூலம் கிடைத்துவந்த மூங்கில்கள் கிடைக்காமல் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். இருப்பினும் மூங்கில் கூடைத் தொழிலாளர்கள் தங்களது தேவைகள் குறித்து வனத் துறைக்குத் தெரிவித்தால், வனத் துறை மூலம் எழுப்பப்பட்ட மூங்கில் தோட்டங்களிலிருந்து அவர்களுக்கு மூங்கில் விநியோகம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்கின்றபோது, வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழே மூங்கில் வெட்டுவதற்கு தடை இருப்பதாகச் சொன்னார்கள். மகேந்திர மேதரா ஈத்தை மற்றும் மூங்கில்கள், கூடை வகைகள் உற்பத்தியாளர் நலச் சங்கத்தினர் இந்தக் கேள்வியை சட்டமன்றத்தில் எழுப்ப

வேண்டுமென்று என்னிடத்திலே வேண்டுகோள் விடுத்தபோது, நான் அவர்களிடத்திலே கேட்டேன், ஈத்தையும், மூங்கிலும் ஒன்றுதானே என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ஈத்தை வேறு, மூங்கில் வேறு என்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே பதில் சொல்லுகின்றபொழுது மூங்கில் வெட்டுவதற்குத் தடை இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த வனப் பாதுகாப்புச் சட்டம் ஈத்தை வெட்டுவதற்கும் பொருந்துமா என நான் அறிய விரும்புகிறேன்.

மதுரை மேற்கு தொகுதி தத்தனேரியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பரம்பரை பரம்பரையாக ஈத்தையைப் பயன்படுத்தி தக்காளிக் கூடை செய்தல், பழ வகைகளை வெளியூர்களுக்கு எடுத்துச் செல்வதற்குப் பயன்படுத்தக்கூடிய கூடை வகைகளைச் செய்தல் போன்ற பணிகளை அந்த மகேந்திர மேதரா பிரிவைச் சேர்ந்தவர்கள் என்னுடைய தொகுதியிலே செய்து கொண்டு வருகிறார்கள். தமிழகத்திலே ஈத்தை கிடைக்காத காரணத்தினால் அவர்கள் கேரள மாநிலம் எர்ணாகுளத்திலேயிருந்து இந்த ஈத்தையைப் பெற்று வருவதாகவும், அப்படிக் கஷ்டப்பட்டு வாங்கி வருகின்றபொழுது நம்முடைய தமிழ்நாட்டினுடைய எல்லையிலே Check Post--லே தடுக்கப்படுவதாகவும் என்னிடத்திலே சொன்னார்கள். எனவே, தமிழகத்திலே ஈத்தை கிடைக்காவிட்டாலும், நம்முடைய அரசாங்கம் கேரள அரசாங்கத்தோடு பேசி, கேரளாவிலேயிருந்து ஈத்தையைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்குமா அல்லது இந்தத் தொழிலைச் செய்கின்ற, ஈத்தையைப் பயன்படுத்தி கூடைகள் செய்கின்ற அந்தத் தொழிலாளர்கள் கேரளாவிலேயிருந்து ஈத்தையை வாங்கி வருகின்றபொழுது தமிழக எல்லையிலே தடுக்காமல் இருப்பதற்கு ஏதாவது தடையின்மைச் சான்றிதழ் வழங்கப்படுமா என நான் கேட்பதோடு, இந்தத் தொழிலை பரம்பரை பரம்பரையாகச் செய்து வருகின்ற அந்தப் பிரிவினர் வேறு தொழிலை அறியாதவர்கள். இந்தத் தொழில் குடிசைத் தொழிலாக இருக்கின்ற காரணத்தினால், வீட்டில் அமர்ந்து கொண்டே பெண்களும் இந்தக் கூடை செய்தல் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அமைச்சரின் பதில் என்ன என ஏக்கத்தோடு மதுரையிலே இருந்து பார்த்துக் கொண்டிருக்கின்ற அந்தத் தொழிலாளர்கள் பூரிப்பு அடையக்கூடிய வகையில், கடல் கடந்துகூட உலகத்தில் உள்ள அத்தனை தலைவர்களாலும் பாராட்டப்படக்கூடிய அளவிற்குக் கருணை ஆட்சியை நடத்திக் கொண்டு வருகின்ற நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்களுடைய





பொற்கால ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல பதிலைச் சொல்வாரா எனக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியில் ஈத்தை கிடைக்காததால் மூங்கில் கூடை செய்து வாழும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். அப்படி என்றால், ஈத்தைக் கூடை என்று கேள்வி கேட்டிருக்க வேண்டும். ஈத்தையும், மூங்கிலும் ஒன்றுதான். (குறுக்கீடுகள்) மேலும், உறுப்பினரவர்கள் வனத்தில் மூங்கில் வெட்டுவதற்குத்தான் தடை இருக்கிறது, ஈத்தை வெட்டுவதற்குத் தடை இருக்கிறதா என்று கேட்டார்கள். வனப் பாதுகாப்புச் சட்டப்படி, சரணாலயம், வனத்தில், உச்ச நீதிமன்ற ஆணைப்படி ஒரு புல், பூண்டைக்கூட அகற்றக்கூடாது. அதனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேரளாவிலிருந்து ஈத்தையை வரவழைத்து எங்களது தொகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று தக்க நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் வேலையின்றி இருப்பதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதுகாப்புச் சட்டத்தின்படி தடை இருப்பது உண்மை என்றால், இந்தியா முழுவதும் அந்தச் சட்டம் பொருந்தும் அல்லவா? அப்படி என்றால் கேரளாவில் மட்டும் வெட்டப்படுகிறதே? கேரளாவிலே Bamboo Corporation–க்கு அந்த அரசாங்கம் முழுவதுமாக ஈத்தையைக் கொடுத்து விடுகிறது. எனவே Bamboo Corporation–இடத்திலே நாம் பேச்சுவார்த்தை நடத்தி, அங்கேயிருந்து வாங்குவதற்கு முயற்சி செய்ய முடியுமா அல்லது அங்கேயிருந்து கஷ்டப்பட்டு வாங்கி வருகின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு ஏதாவது அடையாள கார்டு, தடையின்மைச் சான்றிதழ் கொடுக்கப்படுமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் வனப் பாதுகாப்புச் சட்டம் எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும். கேரளாவில் தனியார் தோட்டங்களில்

மூங்கிலிலிருந்து ஈத்தையை வாங்கி வருவதாக இருக்கலாம். ஆனால் தமிழ்நாடு வனத் துறையில் மூங்கில் தோட்டங்கள் எழுப்பப்பட்டு, தனியாருக்கு, கூடைத் தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டு வருகிறது. அப்படி இவர்கள் வாங்க விரும்பினால்— வனத் துறை மூலமாக மூங்கில் தோட்டங்கள் எழுப்பப்பட்டு, கிட்டத்தட்ட 1,400 ஏக்கரில் மூங்கில் தோட்டங்கள் எழுப்பப்பட்டு அதன் மூலமாக விநியோகம் செய்யப்படுகிறது— இவர்கள் கேட்டால், வனத் துறை கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய பதிலிலிருந்து, ஈத்தை, மூங்கில் இரண்டும் ஒன்றே என்ற பொருள்பட அவர் இப்பொழுது ஒரு விளக்கத்தை இந்த அவைக்கு அளித்திருக்கிறார். அதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. ஆகவே, தமிழ் அறிந்திருக்கின்ற நம்முடைய தலைவர் அவர்கள், இலக்கியங்களிலே மூங்கிலும், ஈத்தையும் ஒன்றே என்று இருக்கிறதா அல்லது, அது வேறு, இது வேறு, என்று இருக்கிறதா என்று அவைக்கு விளக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை ஆராய்வோம். வினா எண் 66, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**66—**

**வன வளர்ப்பு**

*** 65829–திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், உடுமலை, திருமூர்த்திமலை, அமராவதி வனச் சரகப் பகுதி கிராமங்களில் தமிழ்நாடு சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதி மூலம் வன வளர்ப்புப் பணிகளை மேற்கொள்ள அரசிடம் திட்டம் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், உடுமலை, திருமூர்த்திமலை, அமராவதி பகுதிகளுக்குள் வரும் சின்னக்குமாரபாளையம், லிங்கமாவூர் ஆகிய இரு கிராமங்கள் நடப்பாண்டில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் பகுதி-2-ன்கீழ் திட்டக் கிராமங்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அந்தத் திட்டக் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 29 இலட்சம் ரூபாய் செலவில் 250 ஹெக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்போது, இரண்டு கிராமங்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறினார்கள். உடுமலை வட்டம். அந்தத் தொகுதியைப் பொறுத்தவரை, திருமூர்த்திமலைச் சரகம், அமராவதிப் பகுதி வனச் சரகம் என்ற இரண்டு வனச் சரகப் பகுதிகள் உள்ளன. உடுமலைத் தொகுதியைப் பொறுத்தவரை 1/4 பங்கு மலைப்பகுதியாக உள்ள தொகுதியாகும். அந்த மலைச்சாரல்—நீண்ட பகுதியாக இருக்கக்கூடிய அந்த மலைப் பகுதியையொட்டி, அமைச்சர் கூறிய இரண்டு கிராமங்கள் அல்லாமல், கல்லாபுரம், கோபாலபுரம், பூச்சிமேடு, மாவிளம்பாறை, வேல்நகர், அமராவதி நகர், பெரும்பள்ளம், மானுப்பட்டி, ராமையகொண்டம்புதூர், சின்னக்குமாரபாளையம், வெங்கிட்டாபுரம், ஜல்லிபட்டி, சந்தனக்கருப்பூர், தளி, வல்லக்கொண்டாவரம், ஜே.என்.பாளையம், தீவாளப்பட்டி, இராமநாதபுரம், தேவனூர்புதூர், ஆண்டியூர் போன்ற பல்வேறு கிராமங்கள் அந்த மலைச் சாரலையொட்டி இருந்து வருகின்றன. அந்தப் பகுதி மிகவும் சரிவான நிலப்பரப்புள்ள பகுதியாக இருக்கின்றது. அங்கு ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், வன வளர்ப்பு, மண் வளர்ப்பு, நீர்வளப் பாதுகாப்பு ஏற்படுத்துவதன் மூலம், நீர்வளம் பெருகி, பொருளாதார ரீதியாக விவசாயிகள் பயன்படக்கூடிய வகையில் உள்ளது என்பதால், அந்தப் பகுதியை கருத்திலே எடுத்துக்கொண்டு, அந்தக் காடு வளர்ப்புத் திட்டத்தில் சேர்க்க, மற்ற கிராமங்களையும் சேர்க்க நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, அம்மா அவர்களுடைய அரசு, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

[2005 செப்டம்பர் 27

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருடம் 135 திட்டக் கிராமங்கள் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் இரண்டு கிராமங்கள் எடுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், அவரது தொகுதியில் கிராமங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் வைத்திருக்கின்றார். வருகின்ற ஆண்டில் இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அவருடைய தொகுதியில் மேலும் இரண்டு கிராமங்கள் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி கூறிக்கொண்டு, என்னுடைய பகுதியிலே இருக்கக்கூடிய வனப் பகுதியிலே மண் அரிப்பு அதிகமாக உள்ளது. இப்பகுதியில் தடுப்பணைகள் கட்டினால், அங்கிருக்கக்கூடிய வன விலங்குகளுக்குத் தண்ணீர் கிடைக்கக்கூடிய வகையிலும், நிலத்தடி நீர் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பும் இருக்கும். நிலம் சமன்படுத்தினால் அந்த வாய்ப்புகள் அதிகமாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். இந்தக் கேள்விக்கு ஒட்டிய கேள்வியாக என்னுடைய உடுமலைத் தொகுதியைப் பொறுத்தவரை, உடுமலையிலிருந்து சின்னாறு செல்லக்கூடிய பாதை, ஆறு கி.மீ. கேரளப் பாதையை அடையக்கூடிய இடத்திலே மலைப் பகுதியிலே இருக்கின்றது. அங்கு நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களால் உத்தரவு கொடுக்கப்பட்டு, ஒரு கோடி ரூபாயில் அங்கே சாலை பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலையிலே, வனத் துறையின் மூலம், objection தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அது Supreme Court-லே இருக்கின்றது. அனுமதி வாங்கித்தான் அதைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைத் துரிதப்படுத்தி, அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடு என்னுடைய பகுதியிலே 18 Settlement பகுதி உள்ளது. அங்கு மலைவாழ் மக்கள் அதிகமாக வசிக்கின்றார்கள். அங்கு மகளிர் சுய உதவிக் குழு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால்கூட பரிசுகள் பெற்றார்கள். அந்த அளவிற்கு அந்த வனப்பகுதியிலே இருக்கக்கூடிய அந்த மலைவாழ் மக்களுக்குக் கொடுக்கக்கூடிய அந்த நிலப்பரப்பு



2005 செப்டம்பர் 27]

போதிய அளவு அவர்கள் பயன்பாட்டுக்கு இல்லை. அங்கு போதம்புல் என்ற பயிர்களைச் சாகுபடி செய்கின்றார்கள். அங்கே வனத் துறையிலே அதிகமான நிலங்களை இன்னும் அவர்களுக்குக் கொடுத்தால் அவர்களுடைய வாழ்வு சிறக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதை அன்போடு கூறிக்கொள்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தேசிய வன வளர்ப்புத் திட்டத்தில் வன உற்பத்தி முகமை செயல்பாடு எவ்வாறு உள்ளது என்பதையும், காடு வளர்ப்புத் திட்டத்தில் கடந்த ஆண்டு, நடப்பாண்டு எத்தனை கிராமங்கள் பயன்பட்டு உள்ளன என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் 135 திட்டக் கிராமங்கள் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காடு வளர்ப்புத் திட்டம் என்ற ஒரு அருமையான திட்டத்தை 1994 ஆம் ஆண்டு கொண்டுவந்து சிறப்பாக முதல் கட்டத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றதால், ஜப்பான் கூட்டுறவு வங்கி இரண்டாவது திட்டத்திற்கு அனுமதி கொடுத்து, இன்றைக்கு இந்தத் திட்டம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரணாலயங்களில் சாலைகள் செப்பனிடுவதற்கு உச்ச நீதிமன்றத்தினுடைய அனுமதி பெற வேண்டும், அவர் அந்த ஒரு கோடி ரூபாய் திட்டத்தில் சாலையைச் செப்பனிட உச்ச நீதிமன்றத்தை அணுகி, அனுமதி பெற்றால் அவருக்கு நிச்சயமாக அந்தச் சாலையைச் செப்பனிட அனுமதி கொடுக்கப்படும், மேலும் காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலமாக தடுப்பணைகளும் கட்டிக் கொடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும், சுய உதவிக் குழுக்களுக்கு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எத்தனையோ திட்டங்களைச் செய்து, இன்றைக்கு சுய உதவிக் குழு தமிழ்நாட்டில் இந்தியாவுக்கே முன்னோடியாக திகழ்ந்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய தொகுதியில் – உடுமலைப்பேட்டையில் அந்த வனத்திலே இருக்கின்ற சுய உதவிக் குழுக்களுக்கு தேவையான உதவிகளைச் செய்ய தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கவனத்திற்குக் கொண்டு சென்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

186243

[2005 செப்டம்பர் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, திரு. கோவை தங்கம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**67—**

**மீன் எண்ணெய்த் தொழிற்சாலை**

***54687—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் ஆழியார் அணை, சோலையார் அணை, நீரார் அணை, பரம்பிக்குளம் போன்ற மிகப் பெரிய அணைகள் இருப்பதால், வால்பாறை தொகுதியில் மீன் எண்ணெய் தயாரிக்கின்ற மீன் சார்ந்த தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் மீன் எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை. சுமார் ஒரு இலட்சம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். 90 சதவீதம் பேர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். இருப்பது ஒரே ஒரு தொழில், தேயிலை பறிக்கின்ற தொழில். அந்த தேயிலைத் தோட்டத் தொழிலும் இப்போது பாதித்திருக்கிறது. ஏற்கெனவே பெற்றுவந்த சம்பளமும் ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் பிடித்துக்கொண்டிருக்கிறது நிர்வாகம். படித்துவிட்டு வேலையில்லாத பல்லாயிரக்கணக்கான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ன செய்வது, நம் எதிர்காலம் என்ன என்பது கேள்விக்குறியாகி இளைஞர்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே வால்பாறையிலுள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் குடும்பங்களும் விவசாயக் குடும்பங்களும் வறுமையில் இன்று வாடிக்கொண்டிருக்கின்றன. ஆகையால் வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் சோலையாறு அணை, நீரார் அணை, ஆழியாறு அணை, பரம்பிக்குளம் அணை போன்ற



2005 செப்டம்பர் 27]

அணைகள் இருப்பதால் இங்கு மிகவும் அதிகமாக மீன் உற்பத்தியாகிக்கொண்டிருக்கிறது. மேலும் மீன் உற்பத்தியை அதிகமாகவும் ஏற்படுத்தலாம். ஆகவே மீன் எண்ணெய் தயாரிக்கின்ற, மீன் சார்ந்த தொழிற்சாலையை ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா, அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-லே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்கள் தொகுதியிலோ மற்ற பகுதிகளிலிருந்து யாராவது தனியாரை வரவழைத்து தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், அரசு அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தாழ்த்தப்பட்ட தொகுதி என்று ஏற்கெனவே சொன்னேன். மிகவும் வறுமையில் இருக்கின்ற பகுதி. அங்கு தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு எந்த முதலாளிகளும் முன்வருவதில்லை. எந்த நிர்வாகமும் முன்வருவதில்லை என்பதைத் தெரிவித்து, வால்பாறை மக்கள் முன்னேற எந்தவிதமான தொழிற்சாலைகளும், கல்லூரிகளும் இல்லை, வால்பாறையிலே ஒரு ஆலை, மில் எதுவுமே இல்லை. அப்படிப்பட்ட பகுதிதான் வால்பாறை மலைப்பகுதி. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஒரு நாளைக்குக் கிடைக்கக்கூடிய 72 ரூபாயில் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீன் எண்ணெயைப்பற்றிக் கேளுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** ஆகவே, எந்தத் தொழிலும் செய்யமுடியாத அந்தப் பகுதியில் மீன் எண்ணெய் தயாரிக்கின்ற தொழிற்சாலையை ஏற்படுத்தினால் விவசாய மக்களும் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களும் பயனடைவார்கள். அதற்காக வால்பாறை கீழ்ப் பகுதியில் இருக்கின்ற மக்களும் மகிழ்ச்சியடைவார்கள், விவசாயக் கூலிகளும் மகிழ்ச்சியடைவார்கள். ஆகவே மீண்டும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வது, 100 வருடங்களாக எந்த முன்னேற்றமும் இல்லாத வால்பாறை மலைப்

[2005 செப்டம்பர் 27

பகுதியை முன்னேற்றுவதற்கு அங்கே மீன் எண்ணெய் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தினால் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மீண்டும் அவர்களுடைய குடும்பத்திற்கு எதிர்காலத்தில் அவர்களுக்கு ஒரு வாழ்வு கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக மீண்டும் வலியுறுத்தி அமைகின்றேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணெய்ச் சத்து அதிகமாக உள்ள சுறா மீன், சால மீன் போன்ற மீன்கள் உள்நாட்டு நீர்நிலைகளில் வளர்க்க இயலாது. கடற்பகுதியிலேதான் அதுபோன்ற மீன்கள் எல்லாம் வளரும். எனவே மீன் எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**68—**

### மீனவர் பயிற்சிப் பள்ளி

***60119—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பழையார் மீன்பிடித் துறைமுகம் மற்றும் சீர்காழி தொகுதி ஆகிய இடங்களில் மீனவர் பயிற்சிப் பள்ளி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பழையார் மீன்பிடித் துறைமுகம் மற்றும் சீர்காழி தொகுதியில் மீனவர் பயிற்சி நிலையம் தொடங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 செப்டம்பர் 27]

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி தொகுதியில் 14 மீனவ கிராமங்கள் உள்ளன. இதில் பழையார் மீன்பிடித் துறைமுகமும் உள்ளது. மேலும் கொடியம்பாளையம் தீவு என்ற பெரிய மீனவர் கிராமமும் உள்ளது. இக்கிராமங்களில் சுமார் 25 ஆயிரம் மீனவர்கள் மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் மீனவர்கள் பாதிக்கப்பட்டு அனைத்து உற்றார், உறவினர்கள் மற்றும் உடமைகளையும் இழந்துவிட்ட நிலையில் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணையால் சுனாமி வந்த சுவடே தெரியாமல் இன்று புது வாழ்வு பெற்றுள்ளார்கள். பழையார் துறைமுகத்திலிருந்தும் மற்றும் 13 மீனவ கிராமங்களிருந்தும் கட்டு மரங்கள் மற்றும் விசைப் படகுகளில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்கள் குறிப்பாக இளைஞர்கள் சரியான மீன்பிடிப் பயிற்சி இல்லாமல் பெரிதும் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். இதனைப் போக்கிடவும் நவீன முறையில் மீன்பிடித் தொழில் செய்திடவும் விசைப் படகுகளைப் பழுதுபார்க்கும் பணியைக் கற்றுக்கொள்ளவும் பழையார் மீன்பிடித் துறைமுகத்தில் மீனவர் பயிற்சி நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போது நாகப்பட்டினம், தூத்துக்குடி, மண்டபம் மற்றும் குளச்சல் ஆகிய 4 இடங்களில் மீனவர் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பழையார் மீன்பிடித் துறைமுகம் மற்றும் சீர்காழி போன்ற இடங்கள் எல்லாம் நாகப்பட்டினம் பகுதியிலேதான் இருக்கின்றன. எனவே அந்தப் பகுதியிலே பயிற்சி பெறுகின்ற அந்த மீனவ இளைஞர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருப்பதால் அந்தப் பகுதியிலே, நாகப்பட்டினம் பகுதியிலே அவர்களும் பயிற்சி பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியிலிருந்து நாகப்பட்டினம் தலைநகரத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய

சூழ்நிலை இருக்கிறது. மேலும் நாகப்பட்டினம் மாவட்டத்திலேயே பழையாரில்தான் மீன்பிடித் துறைமுகம் உள்ளது. அதனால் நாகப்பட்டினத்திலே இருக்கக்கூடிய மீனவர் பயிற்சிப் பள்ளியை சீர்காழியிலுள்ள பழையார் மீன்பிடித் துறைமுகத்திற்கு மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதிக்கு மீனவர் பயிற்சி நிலையம் வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு சென்று அதுசம்பந்தமாக ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 69, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**69—**

## சுற்றுலா மேம்பாடு

*** 48228—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குருசடைத் தீவில் சுற்றுச்சூழல் மாசுபடாமல் சுற்றுலாவை மேம்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14–11–2003 முதல் குருசடைத் தீவில் சுற்றுச்சூழல் மாசுபடாமல் சுற்றுலாவை மேம்படுத்த கண்ணாடி இழை அடித்தளப் படகுகள் வாங்கப்பட்டு அவை பயன்பாட்டில் உள்ளன.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிரியல் பாடப் பிரிவிலே பல்வேறு ஆராய்ச்சி மாணவர்கள் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் அந்தப் பகுதியிலே ஆய்வு செய்கின்ற ஒரு தீவாக இருந்து கொண்டிருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி இப்போது புதிய படகுகள் விட்டிருப்பதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே பவளப் பாறை





ஆய்வு, மீன்வள ஆய்வு போன்ற பல ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கும், விரிவுபடுத்துவதற்கும், அதேபோன்று இங்கே சுற்றுலாத் தளத்திற்கு, வருகிறவர்களின் பயன்பாட்டிற்கு...

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கான அமைச்சரின் பதில் முடிகிறவரை வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கே. ஆறுமுகம்:** அடிப்படை வசதிகள் செய்து தரப்படுமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குருசடைத் தீவு என்பது வனத் துறையினால் வன உயிரின பாதுகாப்பு சட்டத்தின்கீழ் மிகவும் பாதுகாக்கப்பட்ட பகுதியாக, தேசிய பூங்காவாக 1986 முதல் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பகுதியில் அத்து மீறி நுழைவதும், இந்தப் பகுதியிலிருந்து எந்த தடை செய்யப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்வதும் குற்றமாகும். இந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்படுத்தாத சில ஆராய்ச்சிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்க இந்தச் சட்டத்தில் இடம் உள்ளது. அந்த அனுமதியும் தலைமை வன உயிரின காப்பாளர், சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட வேண்டியது அவசியமாகும். 1998–1999 ஆம் ஆண்டு அரசு நிதி உதவி திட்டத்தின்கீழ் மண்டபம் மற்றும் குருசடைத் தீவில் சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 18.90 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, அடித்தளப் படகுகள், அடித்தள கண்ணாடி இழை 9 படகுகள் வனத் துறையினால் வாங்கப்பட்டு, 14–11–2003 முதல் பயன்பாட்டில் உள்ளன. இவை பாம்பன் பகுதியை ஒட்டியுள்ள 9 மீனவக் கிராமங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பயன் அடையுமாறு கிராம மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்கள் மூலம் இம்மையம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்படகுகள் மூலம் பவளப்பாறை மற்றும் வண்ண மீன்களை படகிலிருந்தபடியே பார்வையிடலாம். 1998–1999 ஆம் ஆண்டு அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் தேசிய புனிதத் தலம் இராமேஸ்வரம் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 57 இலட்சம் அனுமதிக்கப்பட்டு தார்ச் சாலைகள் அமைத்தல், அரசு விருந்தினர் மாளிகை முன்புறம் பூங்கா, பாம்பன் மற்றும் இராமேஸ்வரத்தில் மரக்கன்றுகள் நடுதல், பொதுக் கழிப்பிடம் போன்ற பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 18–07–2002 அன்று அறிவித்தபடி இராமநாதபுரத்தில்

[2005 செப்டம்பர் 27

ரூ. 35 இலட்சத்தில் சுற்றுலா விடுதியும், ரூ. 22 இலட்சத்தில் கடற்கரைப் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளன. 2003-2004 ஆம் ஆண்டு விவேகானந்தா சுற்றுலா சுற்றுச் சாலை அபிவிருத்தித் திட்டத்தில் இராமேஸ்வரம் மற்றும் இராமநாதபுரம் பகுதியில் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 168.24 இலட்சத்தில் ஒப்புதல் வழங்கி, முதல் தவணையாக ரூ. 54.47 இலட்சமும், இரண்டாவது தவணையாக ரூ. 84 இலட்சமும் அரசால் வழங்கப்பட்டிருக்கிறது. பணிகள் நடைபெற்று வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டு, இராமேஸ்வரத்தில் சுற்றுச்சூழல் சுற்றுலா மற்றும் பறவைகள் கூடம் ஏற்படுத்தும் திட்டத்திற்கு ரூ. 43 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கி, முதல் தவணையாக ரூ. 34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நடைமுறைகள் பின்பற்றப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்) என்ன, துரைமுருகன் என்ன?

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கக் கோருதல்

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, தங்களுடைய தீர்ப்பை நான் எதிர்ப்பார்க்கிறேன். இது ஒன்றும் தனிப்பட்ட வகையில் அல்ல. இந்த மன்றத்திற்கு, வருங்காலம் இந்த மன்றம் செம்மையாக நடைபெறுவதற்கு உதவுகிற வகையில், மன்றத்தில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி இரண்டும் உண்டு. நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகிறபொழுது, பலதரப்பு மக்கள் பாதிக்கப்படுகிறபொழுது, அவற்றைச் சட்டமன்ற உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். இப்படி சட்டமன்றம் நடக்கிறபொழுது, அந்தப் பிரச்சினையை மன்றத்திலே கிளப்புவார்கள், ஆளும் கட்சி அதுகுறித்து நடவடிக்கை எடுக்கலாம் என்ற ஒரு ஆசையின் காரணமாக. அப்படி எதிர்க் கட்சிகளாக இருக்கிற எங்களிடத்தில், ஆளும் கட்சியைவிட அதிகமான குறை சொல்லுகிறவர்கள் வருவார்கள். அந்தப் பிரச்சினையை நாங்கள் ஒரு



2005 செப்டம்பர் 27] [திரு. துரைமுருகன்]

பகுதி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று இந்த மன்றத்திலே வைக்கிறபொழுது, இந்த அமைச்சர் பெருமக்கள், அதைக் கூர்ந்து பார்த்து, சரியாக இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம். இல்லாவிட்டால் விடலாம். ஆனால், அதை விட்டுவிட்டு, சொல்லுகிற உறுப்பினர்களுக்கு ஒரு motive கற்பிப்பது என்பது ஜனநாயக முறைக்கு சரியல்ல. இந்த மன்றத்திற்கும் மரபல்ல. அதைத்தான் நேற்றையதினம் — நான் ஒன்று சொல்லுகிறேன். உடனடியாக வந்துவிடாதீர்கள். சாலைப் பணியாளர் பிரச்சினையை நாங்கள் சொல்லுகிறபொழுது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை நேற்றே அதெல்லாம் முடிந்து விட்டது. நேற்றே அதெல்லாம் முடிந்து விட்டது.

**திரு. துரைமுருகன்:** முடிந்துவிட்டது என்பதல்ல. ஒரு அமைச்சர் ஒரு குற்றச்சாட்டு சொல்கிறார் உடனடியாக நாங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை நேற்றே பேசி முடிவுபெற்றுவிட்டது. (குறுக்கீடு) துரைமுருகன், அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அவர் உங்களையோ அல்லது பொன்முடியையோ குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**திரு. துரைமுருகன்:** அந்த நிலைமை உருவாகுமானால், உடனடியாக, நாங்கள் எதிர்க்கட்சிகள், எப்படிப் பணியாற்றுவது? எங்களுக்கு நீங்கள்தானே? ஆயிரம் இருந்தாலும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது என்று பதில் சொல்லிவிட்டார்கள்.

**திரு. துரைமுருகன்:** அத்தோடு விட்டிருந்தால் நான் முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டிருப்பேன், "இந்தப் பிரச்சினை நீதிமன்றத்திலே இருக்கிறது என்று சொல்கிறீர்களே, முதல்வர் அவர்களே, அந்த நீதிமன்றத்திற்கு தாங்கள்தானே வழக்கைக் கொண்டு சென்றீர்கள்" என்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதற்குள், அந்தப் பிரச்சினைக்குள் போகாதீர்கள். துரைமுருகன், உங்களுடைய கோரிக்கை என்னவென்று புரிகிறது.

**திரு. துரைமுருகன்:** ஆகவே, அந்த வழக்கை நீங்கள் வாபஸ் வாங்கிக்கொண்டு, எத்தனையோ பேருக்கு அளிக்கும்போது, இவர்களுக்கு வாழ்வு அளியுங்கள் என்று நான் முதலமைச்சரிடத்திலே

என் வேண்டுகோளை வைத்திருப்பேன். காரணம் வழக்கை வாபஸ் வாங்கினால் தரலாம் அவர்களுக்கு, முதலமைச்சர் நினைத்தால். நான் கேட்டிருப்பேன். ஒருகால் முதலமைச்சர்கூட மனமிரங்கி நேற்றே அறிவித்திருப்பார்.

முற்பகல் *11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. இப்போது என்ன பிரச்சினை?

**திரு. துரைமுருகன்:** முதலமைச்சர் அவர்கள் செய்கிற பணிகூட இல்லாமல் – பிரச்சினைகள் ஒருவருக்கொருவர் போட்டி என்று வரும்போது – எல்லாவற்றிலும் வரலாம், எல்லாவற்றிலும் அரசியல் வரலாம். ஆனால் சில விஷயங்களிலாவது ஆளும் கட்சி, எதிர்க் கட்சி நாங்கள் சொல்வதை அவர்கள் ஏற்கிற வகையிலே இருக்க வேண்டும். நீங்கள் இப்படிப்பட்டப் பிரச்சினைகளுக்கு எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்காவிட்டால் நாங்கள் எப்படிப் பிரச்சினைகளைச் சொல்வது?.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதை நேற்றே நீங்கள் சொன்னீர்கள். அதற்குரிய விளக்கத்தை நான் நேற்றே சொல்லிவிட்டேன். நீங்கள் அதற்குப் பிறகு வெளிநடப்புச் செய்தீர்கள். மற்ற கட்சிகளும் வெளிநடப்புச் செய்தன. அதோடு பிரச்சினை முடிந்துவிட்டது. மறுபடியும் அதையே கிளப்புவது சரியல்ல. துரைமுருகன் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** வாபஸ் வாங்க வேண்டுமென்று நான் கேட்டிருப்பேன்.

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை

### வனத் துறைப் பணியாளர்களுக்கு சலுகைகள் – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் (குறுக்கீடு) இல்லை. மணி இன்றைக்கு நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பேசும்போது சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுகின்ற வாய்ப்பு இருக்கிறது, பேசும்போது சொல்லுங்கள். (குறுக்கீடு) பேசுகின்ற வாய்ப்பு உங்களுக்கு இன்றைக்கு இருக்கிறது. நீங்கள் பேசுகிறபோது சொல்லுங்கள். (குறுக்கீடு) ஏதாவது பிரச்சினை என்றால் பேசுகிறபோது சொல்லுங்கள். (குறுக்கீடு) பேசுகிறபோது சொல்லுங்கள். (குறுக்கீடு)



நீங்கள் பேசுகிறபோது சொல்லுங்கள், உட்காருங்கள் மணி. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் இன்றைக்குப் பேசக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. பேசுகிறபோது அதைச் சொல்லலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுகிறபோது அதைக் குறிப்பிடலாம். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். (குறுக்கீடுகள்) மற்றவற்றையெல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். அனுமதி அளிக்கப்படுகிறது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மணி, உட்காருங்கள். நீங்கள் பேசும்போது பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) பரிதி உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் முக்கியமான முயற்சியாக தமிழகத்திலுள்ள வனப் பகுதிகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் எனது அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. இந்திய வன அளவைத் துறையின் வன நிலை அறிக்கை 2003–ன்படி 2001 ஆம் ஆண்டு மதிப்பீட்டு அறிக்கையோடு ஒப்பிடும்போது நமது மாநிலத்தின் மொத்த வனப் பரப்பு 1,161 சதுர கிலோ மீட்டர் அதிகரித்துள்ளது. இது நமக்கு மகிழ்ச்சியளிக்கும் வகையில் இருந்தபோதிலும், தற்போது தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 17.58 விழுக்காடாக உள்ள வன நிலங்களின் பங்கை மேலும் உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன் பல்வேறு திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகின்றது. தமிழ்நாட்டில் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கி (Japan Bank of International Co-operation) உதவியுடன் 567.42 கோடி ரூபாய் செலவில் 1,77.5 சதுர கிலோ மீட்டர் வனப் பரப்பில் தமிழ்நாடு காடு வளர்ப்பு (நிலை 2) திட்டத்தினை 2005–2006 ஆம் ஆண்டு முதல் 2012–2013 ஆம் ஆண்டு வரை 8 ஆண்டுகள் செயல்படுத்த இறுதி ஒப்பந்தம் 31–3–2005 அன்று கையெழுத்திடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2005–2006 ஆம் ஆண்டில் பணிகளை மேற்கொள்ள 44.87 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள வனப் பகுதிகளில் மேலும் அடர்த்தியான காடுகள் உருவாக்க வழிவகை

செய்யப்பட்டுள்ளது. நான் துவக்கத்திலேயே குறிப்பிட்டதுபோல் வனப் பகுதிகளைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயப் பொறுப்பு நம்மிடமுள்ளது. இவ்வாறு வனப் பகுதிகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதும், புதிய வனப் பகுதிகளை உருவாக்குவதும் நமது வருங்கால சந்ததியினருக்கு நாம் வழங்குகின்ற மதிப்பிட முடியாத சொத்துக்களாகும். எனவே, வனப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டுள்ளது. இதன்படி *2001* ஆம் ஆண்டிலிருந்து ஜனவரி *2005* வரை ஏறத்தாழ *3* ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலான வன நிலங்கள் ஆக்கிரமிப்புதாரர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் வனவிலங்குகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு ஐந்து தேசிய பூங்காக்கள் (National Parks) எட்டு வன உயிரின சரணாலயங்கள் (Wildlife Sanctuaries) மற்றும் இரண்டு உயிர்ச்சூழல் காப்பகங்கள் (Biosphere Reserves) ஆகியவை தமிழகத்தின் வன உயிரின பாதுகாப்புப் பகுதிகளில் இயங்கி வருகின்றன. இவற்றுடன் காப்புக் காடுகளுக்கு வெளியே பறவைகளின் புகலிடங்களைப் பாதுகாக்கும்பொருட்டு *12* பறவைகள் சரணாலயங்களும் (Bird Sanctuaries) அமைக்கப்பட்டுள்ளன.

*முற்பகல் 11–10*

தாவர மற்றும் வன உயிரினப் பாதுகாப்பினை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு, சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள் மற்றும் உயிர்ச்சூழல் காப்பகங்கள் போன்றவற்றைத் தொடர்ந்து சிறந்த முறையில் பராமரிக்க, எனது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இந்த சிறப்பான நடவடிக்கைகளின் வாயிலாக தமிழக வனங்களில் உள்ள விலங்குகளின் எண்ணிக்கை, கணிசமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக, *2002* ஆம் ஆண்டில் *3,052* என்ற அளவில் இருந்த யானைகளின் எண்ணிக்கை, மே *2005*–ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, தற்போது *4,015* ஆக உயர்ந்துள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் நாடெங்கும் வனங்களில் உள்ள புலிகளின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது என்று தேசிய அளவில் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் கட்டத்தில், தமிழகத்தில் வனங்களில் உள்ள புலிகளின் எண்ணிக்கை குறையவில்லை என்ற செய்தி நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக வனங்களில் உள்ள புலிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் முறைகள் சிறந்தவை என்று, தேசிய அளவில் அமைக்கப்பட்ட சிறப்புப் பணி பிரிவு, (Tiger Task Force) பாராட்டுத் தெரிவித்துள்ளது.



வனங்களைப் பாதுகாப்பதிலும், வன உயிரினங்களுக்கு ஏற்ற உயிர்ச்சூழலை ஏற்படுத்துவதிலும். நாம் சிறந்த வெற்றியைக் கண்டுள்ளோம். வனப் பகுதிகளை ஒட்டியுள்ள கிராமவாழ் மக்களையும், இந்த இயக்கத்தில் ஈடுபாட்டுடன் பயன்படுத்துவதில் நாம் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளோம். இது, மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது. வன உயிரினங்களை வேட்டையாடுவதைத் தடுப்பதில், பழங்குடியினரை முழுமையாக ஈடுபடுத்தும் முயற்சி, தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனை இதர மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்று மத்திய அரசு பல்வேறு கூட்டங்களில் அறிவுரை வழங்கியுள்ளது.

வனப் பகுதிகள் மற்றும் வனங்களில் வாழும் உயிரினங்களுக்கு பாதுகாப்பு அளிப்பது, அதி முக்கியமான பணியாகும். இப்பணியில் எவ்வித தொய்வும் ஏற்படாமல் நாம் கண்காணிக்க வேண்டும். இந்த மாபெரும் பணியில் ஈடுபடும் யானை துணைப் பாகன்கள் (Cavady), யானைப் பாகன்கள் (Mahout), வனத் தோட்டக்காரர்கள் (Mali), வனக் காவலர்கள் (Forest Watchers), வனக் காப்பாளர்கள் (Forest Guards), வனவர்கள் (Foresters), வனச் சரகர்கள் (Forest Rangers) ஆகியோர் ஊக்கத்தோடும், உத்வேகத்தோடும், மிகுந்த துணிவோடும் செயல்படவேண்டும்.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு காட்டுக் கொள்ளையன் வீரப்பனைப் பிடிப்பதற்கான தேடுதல் வேட்டையில் அதிரடிப் படையினருடன் இணைந்து பணி புரிந்த வனப் பணியாளர்கள் *59* பேருக்கு தலா *1* இலட்சம் ரூபாய் வெகுமதியும், *43* பே:ருக்கு தலா *50* ஆயிரம் ரூபாயும், *46* பேருக்கு ஒருபடி பதவி உயர்வும் நான் வழங்கினேன்.

காட்டுப் பகுதிகளில் உயிரைத் துச்சமாக மதித்து. பல்வேறு ஆபத்துகளை எதிர்கொண்டு, இடையூறுகளை வெற்றி கண்டு, கடுமையாகப் பணியாற்றுகின்ற வனக் களப் பணியாளர்களின் பணியின் தன்மையைக் கருத்திற்கொண்டு அவர்களை மேலும் ஊக்குவிப்பதற்கான திட்டம் வகுக்கப்படும் என்றும், அவர்களுக்கு ஊர்தி மற்றும் செல்லிடத் தொலைபேசி போன்ற நவீன கருவிகள் வழங்கப்படும் என்றும், இந்த அவையில் *23–09–2005* அன்று நான் உறுதி அளித்தேன். இதற்கான ஆக்கபூர்வமான திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை இந்த அவையில் அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 செப்டம்பர் 27

வனத் துறை களப் பணியாளர்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருள்கள் காவல் துறையினருக்கு மலிவான விலையில் ஒவ்வொரு மாதமும் தேவைப்படும் உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதைப் போலவே, வனத் துறையின் களப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒவ்வொரு மாதத்திற்கு 20 கிலோ அரிசி 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்படும், 2 கிலோ சர்க்கரை 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்படும், 2 கிலோ கோதுமை 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்படும், 1 கிலோ பாமாயில் 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்படும். 4 கிலோ துவரம்பருப்பு கிலோ ஒன்றுக்கு 10 ரூபாய் மானியத்துடன் வழங்கப்படும், 4 கிலோ உளுத்தம்பருப்பு, கிலோ ஒன்றிற்கு 10 ரூபாய் மானியத்துடன் வழங்கப்படும், 3 கிலோ ரவா அல்லது மைதா கிலோ ஒன்றிற்கு 3 ரூபாய் மானியத்துடன் வழங்கப்படும்.

இதன்படி, ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒவ்வொரு மாதமும் மொத்தம் 440.90 ரூபாய் மதிப்புள்ள இந்த உணவுப் பொருட்களுக்கென 162.25 ரூபாய் மானியம் வழங்கப்படும். இதனால் 5,705 வனக் களப் பணியாளர்கள் பயன் பெறுவார்கள். இதற்காக ஆண்டு ஒன்றிற்கு எனது அரசு ஒரு கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவு செய்யும்.

முற்பகல் 11–15

**வனச் சரகர்களுக்கு ஜீப் வாகனங்கள்.**

வனப் பாதுகாப்புப் பணி சரகர்கள் (Territorial Forest Rangers) 225 பேர்களுக்கு ஜீப் வாகனங்கள் வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நடப்பு ஆண்டிலேயே இந்த வாகனங்கள் அனைத்தும் வழங்கப்படும். இவ்வாகனங்களை இயக்குவதற்கு ஓட்டுநர் உரிமம் பெற்ற வனக் காப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்படுவார்கள். இவ்வகையில், இவ்வாகனங்களை வாங்கிட 10.13 கோடி ரூபாயும், அந்த வாகனங்களைப் பராமரிப்பதற்காகவும் எரிபொருளுக்காகவும் மற்றும் வாகன ஓட்டுநர்களுக்கான சம்பளச் செலவின வகையிலும், ஆண்டுதோறும் 2.9 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 13.03 கோடி ரூபாயை இதற்கென எனது அரசு செலவு செய்யும்.

**வனச் சரகர்களுக்கு செல்லிடத் தொலைபேசி (Cell Phone).**

வனத் துறையின் வனச் சரகர்கள் வன மேம்பாட்டுப் பணிகளை முனைப்புடன் மேற்கொள்ளவும், வனப் பகுதிகளையும், வன உயிரினங்களையும் பாதுகாக்கும் பணியில் மிக விரைவாகவும்,



2005 செப்டம்பர் 27] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எளிதாகவும் தொடர்பு கொண்டு செயலாற்றவும் ஏதுவாக 626 வனச் சரகர்களுக்கும் தலா ஒரு செல்லிடத் தொலைபேசி வழங்கப்படும். இதற்கென தொடராச் செலவினமாக 21.91 இலட்சம் ரூபாயும், தொடர் செலவினமாக ஆண்டு ஒன்றுக்கு 37.56 இலட்சம் ரூபாயும் எனது அரசு செலவிடும்.

**வனச் சரகர்களுக்கு இரட்டை தொலைநோக்காடிகள் (Binoculars).**

வனச் சரணாலயங்களில் பாதுகாப்புப் பணி மேற்கொள்ளும் வனச் சரகர்களின் பணியை மேம்படுத்தும் வகையில் 9 இலட்சம் ரூபாய் செலவில் 60 இரட்டை தொலைநோக்காடிகள் (Binoculars) வழங்கப்படும். வனப் பகுதிகளையும், வன உயிரினங்களையும் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள வனக் களப் பணியாளர்கள் மேலும் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணியாற்றிட அவர்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் 14.82 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டங்களை அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் விலைமதிப்பற்ற நமது வன வளங்களைக் காப்பதில் வனக் களப் பணியாளர்கள் மேலும் அதிக ஈடுபாடு கொண்டு கடமையாற்றுவார்கள் என்பது உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி.டி. தண்டபாணி கையூட்டு பெற்றதற்கான ஆதாரங்கள் என மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அளித்தவை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாமல் அவையில் குற்றச்சாட்டுகளைக் கூறக்கூடாது என்ற அவையின் கருத்தை நாம் மதித்தாக வேண்டும். நேற்று சாலைப் பணியாளர்களிடம், கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கையூட்டு பெற்றுக்கொண்டு அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கான ஆதாரங்களை அவர் தற்போது வைத்திருக்கிறார். அவையில் அவற்றைப் படிப்பதற்கும், அவைத் தலைவர், அவற்றை ஏற்று விசாரிக்கவும் ஆணையிடுமாறு நான் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடம் கொடுத்திருக்கிறார். படிப்பதாக இருந்தால் படியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** இந்த அவையில் குற்றச்சாட்டைச் சொல்வதற்கு முன்னால்...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நேற்றே இதை பேசியாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)* நேற்றே பேசி விவகாரம் வந்திருக்கிறது. *(குறுக்கீடுகள்)* நேற்றே பேசியாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் விளக்கம் சொல்வதற்கு நீங்கள் அனுமதிக்கவில்லை. *(குறுக்கீடுகள்)* சரி சொல்லுங்கள்.

***மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டபடி *(குறுக்கீடுகள்)* ஆதாரத்தை இப்போது இந்த அவையில் நான் தாக்கல் செய்கிறேன். *(குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றுகொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். *(குறுக்கீடுகள்)* முடித்துவிட்டும்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** பொள்ளாச்சி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையில் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும். அதற்குப் பிறகு விளக்கம் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** திரு. B. திருமூர்த்தி, முன்னாள் சாலைப் பணியாளர்... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அமைச்சர் பேசி முடிக்கட்டும். அதற்குப் பிறகு விளக்கம் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். *(குறுக்கீடுகள்)*



**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** *எண் 134, அர்ஜின காலனி, தாமரைக்குளம் போஸ்ட், பொள்ளாச்சி தாலுகா, கோவை மாவட்டம்...(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அவர் பேசி முடிக்கட்டும், பிறகு விளக்கம் கேளுங்கள் என்று நான் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** பெறுநர், திரு. வி. ஜெயராமன், சட்டமன்ற உறுப்பினர், பொள்ளாச்சி. *(குறுக்கீடுகள்)* "ஐயா, வணக்கம். கடந்த தி.மு.க. ஆட்சியில் சாலைப் பணியாளர் பணிக்கான தேர்வில் கலந்துகொண்டேன்." *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிக் கொண்டிருக்கிறார். *(குறுக்கீடுகள்)* அவர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** "நான் எனது பணி நியமனத்திற்காக தி.மு.க.வை சார்ந்த சி.டி. தண்டபாணி, எம்.பி., அவர்களிடம் ரூ. *25,000/-* (இருபத்தி ஐந்தாயிரம்) கொடுத்து பணியில் சேர்ந்தேன்" *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அவர் பேசி முடிக்கட்டும். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** "பிறகு வந்த அரசு பணி நீக்கம் செய்துவிட்டதால் எனக்கு வேலை இல்லாமல் குடும்பம் நடத்தவே கஷ்டப்படுகிறேன்." *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர் பேசி முடிக்கட்டும். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** "எனவே எனது குடும்பம் பிழைக்க ஐயா அவர்கள் ஏதேனும் எனக்கு அரசு வேலை வழங்கி எனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன என்பதைக் கேளுங்கள். பேசிக் கொண்டிருக்கிறார். அதைக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** P. கதிரவன், சாலைப் *பணியாளர், 23 அன்னை கஸ்தூரிபாய்...(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) ஒரு குற்றச்சாட்டை இந்த அவையில் கூறும்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதாரம் இருக்கிறதா, ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது என்று இங்கே கூறுகிறார்கள். (குறுக்கீடுகள்) பின்னர், ஆதாரத்தை இங்கே வெளியிடும்போது அதை வெளியிடக்கூடாது என்கிறார்கள். (குறுக்கீடுகள்) தன்னிடம் இருக்கின்ற ஆதாரத்தை அமைச்சர் இங்கே தெரிவிக்கட்டும். அதன் பின்னர் வேண்டுமானால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதன்மீது பேசலாம். அமைச்சரும் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கூட்டுறவுத் துறை அமைச்சர் ஆதாரத்தைச் சொல்லுங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) துரைமுருகன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆதாரத்தை இப்போது சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) அதற்கு மேலே விளக்கம் இருந்தால் நீங்கள் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுப்புநர் P. கதிரவன், சாலைப் பணியாளர், 23, அன்னை கஸ்தூரிபாய் வீதி, பொள்ளாச்சி. பெறுநர் திரு. வி. ஜெயராமன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர், பொள்ளாச்சி. (குறுக்கீடுகள்) "ஐயா, வணக்கம். (குறுக்கீடுகள்) கடந்த தி.மு.க. ஆட்சியில் சாலைப் பணியாளர் பணிக்கான தேர்வில் கலந்துகொண்டேன்." (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு கூப்பிடுகிறேன் நான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** "நான் எனது பணி நியமனத்திற்காக தி.மு.க.–வைச் சேர்ந்த சி.டி. தண்டபாணி, எம்.பி. அவர்களிடம் ரூபாய் 25,000 கொடுத்து (குறுக்கீடுகள்) பணியில் சேர்ந்தேன். பிறகு வந்த அரசு பணி நீக்கம் செய்துவிட்டதால் (குறுக்கீடுகள்) எனக்கு வேலை இல்லாமல் குடும்பம் நடத்தவே கஷ்டப்படுகிறேன். (குறுக்கீடுகள்) எனவே, எனது குடும்பம் பிழைக்க ஐயா அவர்கள் ஏதேனும் எனக்கு அரசு வேலை வழங்கி (குறுக்கீடுகள்) எனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்." (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். அப்புறம் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, அனுப்புநர் T. பரமசிவம், சாலைப் பணியாளர், 24, திருநீலகண்டர் வீதி, பொள்ளாச்சி. பெறுநர் திரு. வி. ஜெயராமன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர், பொள்ளாச்சி. "வணக்கம். கடந்த தி.மு.க. ஆட்சியில் (குறுக்கீடுகள்) சாலைப் பணியாளர் பணிக்கான தேர்வில் கலந்துகொண்டேன். நான் எனது பணி நியமனத்திற்காக தி.மு.க.–வைச் சேர்ந்த சி.டி. தண்டபாணி, எம்.பி. அவர்களிடம் 25,000 ரூபாய் கொடுத்து பணியில் சேர்ந்தேன். (குறுக்கீடுகள்) பிறகு வந்த அரசு பணி நீக்கம் செய்துவிட்டதால் (குறுக்கீடுகள்) எனக்கு வேலை இல்லாமல் குடும்பம் நடத்தவே கஷ்டப்படுகிறேன். (குறுக்கீடுகள்) எனவே, எனது குடும்பம் பிழைக்க ஐயா அவர்கள் ஏதேனும் எனக்கு அரசு வேலை வழங்கி எனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்." (குறுக்கீடுகள்)

(தி.மு.க. உறுப்பினர்கள் திரு. பரிதி இளம்வழுதி, திரு. ஜெ. அன்பழகன், டாக்டர் க. பொன்முடி, திரு. அ. அசோகன் ஆகியோர் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் வந்து சத்தமிட்டனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால் வெளியேற்ற வேண்டிய நிலைமை வரும். (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதியை எச்சரிக்கிறேன். திரு. ஜெ. அன்பழகனை எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) டாக்டர் பொன்முடியை எச்சரிக்கிறேன். அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால் வெளியேற்றவேண்டிய நிலைமை வரும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, அனுப்புநர் திரு. A. வெள்ளிங்கிரி, தகப்பனார் பெயர் திரு. ஆறுச்சாமி, 12/28, வீரமாச்சி அம்மன் கோயில் வீதி, கோவை. "ஐயா, நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன்." (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிப்பவர்களான திரு. பரிதி இளம்வழுதி, திரு. பொன்முடி, திரு. அன்பழகன், திரு. புகழேந்தி, திரு. அசோகன் ஆகிய அனைவரையும் அவையிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

*(தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து எழுந்து நின்று சத்தமிட்டுக்கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** "நான் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவன். நான் எனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் வறுமையில் வசித்து வருகிறேன். *(குறுக்கீடுகள்)* பொள்ளாச்சிக் கோட்டம், பல்லடம் உட்பிரிவில் சாலைப் பணியாளராகப் பணியாற்றி வந்தேன். கடந்த 7–9–2003 ஆம் தேதி பணியிலிருந்து நீக்கப்பட்டேன். *(குறுக்கீடுகள்)* நான் இப்பணியில் சேர கோவை மேற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், தி.மு.க. மாவட்டச் செயலாளர் சி.டி. தண்டபாணிக்கு 40,000 ரூபாய் உறவினர்களிடம் கடன் வாங்கிக் கொடுத்து பணியில் சேர்ந்தேன். *(குறுக்கீடுகள்)* தற்சமயம் பணியில்லாமல் நான் மிகவும் வறுமையில் வாடுகிறேன். ஐயா அவர்கள் கருணை கூர்ந்து *(குறுக்கீடுகள்)* ஐயா அவர்கள் கருணை கூர்ந்து தாங்கள் இப்பணியோ அல்லது வேறு ஏதாவது பணியையோ வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்." *(குறுக்கீடுகள்)* பணியாளர்கள் அவர்களுக்குரிய அடையாள அட்டையை இங்கே ஆதாரமாக வழங்கியிருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்)* பணியாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டையை . . . *(குறுக்கீடுகள்)*

*(தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து எழுந்து நின்று சத்தமிட்டுக்கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றுமாறு கட்டளையிடுகிறேன். திரு. பொன்முடி போன்றவர்களை அவையிலிருந்து வெளியேற்றுமாறு கட்டளையிடுகிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** பணியாளர்கள் அவர்களாகவே என்னிடத்தில் சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையில் கடந்த காலத்தில் கொடுத்திருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்)* கடந்த காலத்தில் *(குறுக்கீடுகள்)* கடந்த காலத்தில் *(குறுக்கீடுகள்)* கடந்த காலத்தில் நடைபெற்ற முறைகேடுகளுக்காக *(குறுக்கீடுகள்)* பணியாளர்கள் அவர்களாகவே அவர்களுடைய கைப்பட எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்)* அவர்களாகவே அவர்களுடைய கைப்பட எழுதிக் கொடுத்த கடிதங்களை இங்கே தாக்கல் செய்கிறேன். *(குறுக்கீடுகள்)* கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்



காலத்தில் கையூட்டு கொடுத்து பணியில் அமர்ந்த பணியாளர்கள் அவர்கள் கைப்பட எழுதிக்கொடுத்த கடிதங்களை இந்த அவையிலே தாக்கல் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, திரு. பரிதி இளம்வழுதி, திரு. ஜெ. அன்பழகன் ஆகியோர் பேரவைத் தலைவரையே நேரடியாகத் தாக்கக்கூடிய உள்நோக்கத்தோடு இங்கே வந்தார்கள். இங்கே வந்து முற்றுகையிட்டார்கள். பேரவைத் தலைவரைத் தாக்க முற்பட்டார்கள். *(குறுக்கீடுகள்)* ஆகவே, அவர்களை அவையை விட்டு வெளியேற்றுமாறு நான் கட்டளையிடுகிறேன். *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** கடந்த கால ஆட்சியில் வேலையில் சேர்ந்த சாலைப் பணியாளர்கள் அவர்கள் கைப்பட கையூட்டுக் கொடுத்ததற்கான கடிதங்களையும் *(குறுக்கீடுகள்)* அவர்களே கைப்பட எழுதிக் கொடுத்த கடிதங்கள். இதை நீங்கள் *(குறுக்கீடுகள்)* அவர்களுடைய அடையாள அட்டை என்னிடம் உள்ளது. இதை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதியை அவையைவிட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். திரு. பரிதி இளம்வழுதியை அவையை விட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இந்தக் கடிதங்கள் அனைத்தும் என்னுடைய பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த சாலைப் பணியாளர்கள் கொடுத்த கடிதங்கள். அவர்கள் கைப்பட எழுதிக் கொடுத்த கடிதங்கள். அவர்களுடைய அடையாள அட்டைகளை என்னிடத்திலே வழங்கியிருக்கிறார்கள். இந்தக் கடிதங்களில் . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே மீண்டும் குறிப்பிடுகிறேன். திரு. பரிதி இளம்வழுதி, திரு. பொன்முடி, திரு. ஜெ. அன்பழகன் ஆகியோர் பேரவைத் தலைவரைத் தாக்க முற்படக்கூடிய முயற்சியோடு இங்கே வந்து முற்றுகையிட்டார்கள். அவர்களை அவையைவிட்டு உடனடியாக அகற்றுமாறு உத்தரவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இந்தக் கடிதங்களில் உள்ள கையெழுத்துகள் அவர்களுடைய கையெழுத்துகள்தானா என்று பரிசோதனைசாலைக்கு அனுப்பி அவற்றைச் சோதனையிட்டுக் கொள்ளலாம். இந்தக் கையெழுத்துகள் பாதிக்கப்பட்ட

பணியாளர்களுடைய கையெழுத்துகள்தானா என்பதைப் பரிசோதனைக்கு அனுப்பி அவற்றைச் சோதனை செய்துகொள்ளலாம். (குறுக்கீடுகள்) இந்தக் கடிதங்களை, அவர்களுடைய அடையாள அட்டைகளை இங்கே நான் தாக்கல் செய்கிறேன். (குறுக்கீடுகள்) அவர்கள்...(குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–25*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரியாதது அல்ல. ஒருவர்மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டுமானால்,... (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் துரைமுருகன், உங்களுடைய உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய தகுதியோ, யோக்கியதையோ உங்களுக்கு இருக்குமானால், உங்களுடைய உறுப்பினர்களை முதலிலே கட்டுப்படுத்துங்கள். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே, நீங்கள் பேச எழுந்தபோது நானே சொன்னேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் விளக்கம் கேளுங்கள் என்று சொன்னேன். அதை உங்களால் கொஞ்சம்கூட ஏற்றுக்கொள்ள முடியவில்லை. (குறுக்கீடுகள்) உங்களுடைய உறுப்பினர்கள் கட்டுப்பாட்டை மீறி, (குறுக்கீடுகள்) அவர்கள் இங்கே வந்து பேரவைத் தலைவரையே தாக்க முற்படுகிறார்கள். ஆகவே, உங்களுக்கு (குறுக்கீடுகள்) வாய்ப்புக் கொடுக்க நான் தயாராக இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்... (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசுவது எதுவாக இருந்தாலும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இந்தக் கடிதங்கள் அனைத்தும் பாதிக்கப்பட்ட சாலைப் பணியாளர்கள் அவர்களுடைய கைப்பட எழுதிக்கொடுத்த கடிதங்கள். இந்தக் கடிதங்கள் அனைத்தும் அவர்களே கையெழுத்துப் போட்டு — அவர்களே எழுதி, அவர்களே கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை Xerox copy. Original நான் வைத்திருக்கிறேன். இது Xerox copy.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



(குறுக்கீடுகள்) இல்லை, இல்லை கடந்த தேதியில் எழுதப்பட்டிருக்கிறது. 25–12–2003 (குறுக்கீடுகள்) கடந்த காலத்தில் (குறுக்கீடுகள்) "வணக்கம், கடந்த தி.மு.க. ஆட்சியில் சாலைப் பணியாளர் பணிக்கான தேர்வில் கலந்துகொண்டேன். நான் என் பணி நியமனத்திற்காக தி.மு.க. கட்சியைச் சேர்ந்த ..." (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் காவலர்கள் குழப்பம் செய்யக்கூடியவர்களை அவையை விட்டு அகற்றுமாறு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்களுக்கு மீண்டும் உத்தரவிடுகிறேன். குழப்பம் செய்யக்கூடியவர்களை அவையைவிட்டு அகற்றுமாறு உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** "சி.டி. தண்டபாணி, எம்.பி., அவர்களிடம் ரூபாய் 25,000 கொடுத்து பணியில் சேர்ந்தேன். பிறகு வந்த அரசு பணி நீக்கம் செய்து விட்டதால், எனக்கு வேலையில்லாமல் குடும்பம் நடத்தவே கஷ்டப்படுகிறேன். (குறுக்கீடுகள்) எனவே, எனது குடும்பம் பிழைக்க (குறுக்கீடுகள்) வேலையில்லாமல் குடும்பம் நடத்த கஷ்டப்படுகிறேன். எனவே என் குடும்பம் பிழைக்க ஐயா அவர்கள் ஏதேனும் எனக்கு அரசு வேலை வழங்கி அல்லது தனியாரிடத்தில் வேலை வாங்கிக் கொடுத்து எனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்." (குறுக்கீடுகள்) P. கதிரவன், சாலைப் பணியாளர், 23, அன்னை கஸ்தூரிபாய் வீதி, பொள்ளாச்சி. (குறுக்கீடுகள்) "வணக்கம், கடந்த தி.மு.க. ஆட்சியில், சாலைப் பணியாளர் பணிக்கான தேர்வில் கலந்து கொண்டேன். நான் என் பணி நியமனத்திற்காக தி.மு.க.-வைச் சார்ந்த சி.டி. தண்டபாணி, எம்.பி., அவர்களிடம் ரூபாய் 25,000 கொடுத்து பணியில் சேர்ந்தேன். (குறுக்கீடுகள்) பிறகு வந்த அரசு பணி நீக்கம் செய்து விட்டதால், எனக்கு வேலை இல்லாமல் குடும்பம் நடத்தவே கஷ்டப்படுகிறேன். எனவே, எனது குடும்பம் பிழைக்க ஐயா அவர்கள் ஏதேனும் எனக்கு அரசு வேலை வழங்கி, எனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்." (கூச்சல்–குழப்பம்) B. திருமூர்த்தி, 134, அர்ஜின காலனி, தாமரைக்குளம் போஸ்ட், பொள்ளாச்சி தாலுகா, கோவை. "வணக்கம். கடந்த தி.மு.க. ஆட்சியில் சாலை பணியாளர் பணிக்கான தேர்வில் கலந்துகொண்டேன். (குறுக்கீடுகள்) நான் எனது பணி நியமனத்திற்காக தி.மு.க.-வைச் சேர்ந்த சி.டி. தண்டபாணி, எம்.பி. அவர்களிடம் (குறுக்கீடுகள்) 25,000 ரூபாய் கொடுத்து, பணியில் சேர்ந்தேன். பிறகு வந்த அரசு பணி நீக்கம் செய்து விட்டதால், எனக்கு வேலையில்லாமல் குடும்பம் நடத்தவே கஷ்டப்படுகிறேன். (குறுக்கீடுகள்)

எனவே, எனது குடும்பம் பிழைக்க ஐயா அவர்கள் ஏதேனும் எனக்கு அரசு வேலை வழங்கி எனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று.." *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஏற்கெனவே கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், இது தொடர்பான ஆதாரங்களை என்னிடத்திலே ஏற்கெனவே தந்திருக்கிறார்கள். கொடுத்திருக்கிற ஆதாரங்களைத்தான் அவர்கள் படிக்கிறார்கள் ஆகவே, அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. (கூச்சல்–குழப்பம்) அவர்கள் படித்து முடிக்கலாம். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** கடந்த காலத்திலே அரசாங்கம் கொடுத்த அடையாள அட்டையைப் படிக்கிறேன். T. பரமசிவம், *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, பேரவைத் தலைவர் இருக்கைக்கு வந்து பேசுவது முறையற்றது. துரைமுருகனுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** Designation Gang Mazdoor, த.பெ. திருமூர்த்தி, 24, திருநீலகண்டர் வீதி, கோட்டூர் ரோடு, பொள்ளாச்சி. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோஷமிடக்கூடிய உறுப்பினர்கள் அத்தனை பேரையும் அவையை விட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் கோஷமிடக்கூடிய உறுப்பினர்கள் அத்தனை பேரையும் அவையை விட்டு அகற்றுமாறு உத்தரவிடுகிறேன். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** T. பரமசிவம், Gang Mazdoor, த.பெ. திருமூர்த்தி, 24, திருநீலகண்டர் வீதி, கோட்டூர் ரோடு, பொள்ளாச்சி. *(குறுக்கீடுகள்) (தி.மு.க. உறுப்பினர்கள் கோஷமிட்டனர்)* B. திருமூர்த்தி, 134, அர்ஜின காலனி, தாமரைக்குளம் போஸ்ட், பொள்ளாச்சி தாலுகா. மீண்டும் ஒரு முறை, எழுதிக் கொடுத்த பணியாளர்களுடைய குற்றச்சாட்டை இங்கே படிக்க விரும்புகிறேன். B. திருமூர்த்தி, சாலைப் பணியாளர், 134, அர்ஜின காலனி, தாமரைக்குளம் போஸ்ட், பொள்ளாச்சி தாலுகா, கோவை மாவட்டம்.



பெறுநர் வி. ஜெயராமன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர், பொள்ளாச்சி, தேதி 25–1–2004. "வணக்கம். கடந்த தி.மு.க. ஆட்சியில் சாலைப் பணியாளர் பணிக்கான தேர்வில் கலந்து கொண்டேன். *(கூச்சல்–குழப்பம்)* நான் என் பணி நியமனத்திற்காக தி.மு.க.–வைச் சேர்ந்த சி.டி. தண்டபாணி, எம்.பி. அவர்களிடம் 25 ஆயிரம் ரூபாய் கொடுத்து பணியில் சேர்ந்தேன். பிறகு வந்த அரசு பணி நீக்கம் செய்து விட்டதால், எனக்கு வேலை இல்லாமல் குடும்பம் நடத்தவே கஷ்டப்படுகிறேன். எனவே எனது குடும்பம் பிழைக்க ஐயா அவர்கள் ஏதேனும் எனக்கு அரசு வேலை வழங்கி குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்." *(குறுக்கீடுகள்)* A. வெள்ளிங்கிரி, தகப்பனார் பெயர் ஆறுச்சாமி, 12/28, *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அமைச்சர் பேசி முடிக்கட்டும் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். அவர் முடித்தவுடனே உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** வீரமாச்சி அம்மன் கோயில் வீதி, செட்டிப்பாளையம் போஸ்ட், கோவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அமைச்சர் பேசி முடிக்கட்டும் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், எம்.எல்.ஏ., பொள்ளாச்சி *(கூச்சல் குழப்பம்)* ஆறு பேர் கொடுத்திருக்கிறார்கள், என்னுடைய தொகுதியில். "நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அமைச்சர் பேசி முடித்தவுடன் விளக்கம் சொல்வதற்கு அனுமதிக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெரிவித்திருக்கிறார்கள்.*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** "நான் இந்து அருந்ததியர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். நான் எனது மனைவி, ஒரு பெண் குழந்தையுடன் குடித்தனம் நடத்தி வருகிறேன். நான் பொள்ளாச்சி கோட்டம், பல்லடம் உட்பிரிவில் சாலைப் பணியாளராகப் பணியாற்றி வந்தேன். 7–9–2003 ஆம் தேதி

பணியிலிருந்து நீக்கப்பட்டேன். நான் இப்பணிக்குச் சேர கோவை மேற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தி.மு.க. மாநகர மாவட்டச் செயலாளர் சி.டி தண்டபாணிக்கு 40 ஆயிரம் ரூபாய் எனது உறவினர்களிடம் கடன் வாங்கிக் கொடுத்து பணியில் சேர்ந்தேன். தற்சமயம் பணி இல்லாமல் நான் மிகவும் வறுமையில் வாடி வருகிறேன். ஆகவே, தாங்கள் தயவுகூர்ந்து, கருணைகூர்ந்து, தாங்கள் இப்பணியோ அல்லது வேறு பணியோ வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்." சாலைப் பணியாளர்கள் எங்களிடத்திலே கொடுத்த அடையாள அட்டைகளை இங்கே அவையில் காட்டுகிறேன். (குறுக்கீடுகள்)

*(அடையாள அட்டைகளை அவையில் காண்பித்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கூட்டுறவுத் துறை அமைச்சர் முடித்துவிடட்டும். (குறுக்கீடு) கூட்டுறவுத் துறை அமைச்சர் முடிக்கட்டும். (கூச்சல் குழப்பம்) முடித்தவுடனே கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இருக்கிறதை தானே காட்டுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கூட்டுறவுத் துறை அமைச்சர் முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** T. பரமசிவம், Designation, Gang Mazdoor, S/o. திருமூர்த்தி, திருநீலகண்டர் Street, கோட்டூர் ரோடு, (குறுக்கீடு) T. பரமசிவம், Gang Mazdoor, S/o. திருமூர்த்தி, 24, திருநீலகண்டர் Street, கோட்டூர் ரோடு, பொள்ளாச்சி (குறுக்கீடுகள்) நான் மீண்டும் ஒரு முறை அந்தக் கடிதங்களை... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் அவையை விட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆதாரங்களை எல்லாம் படித்து முடித்ததற்குப் பிறகு பொறுமையாக இருந்து விளக்கம் கேட்பதற்குத் தயாராக இருக்கிற உறுப்பினர்கள் இருக்கலாம். அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்துக் கொண்டிருக்க வேண்டும் என்கிற முடிவிலே இருந்தால் அவர்கள் அவையை விட்டு அகற்றப்படுவார்கள். அவைக் காவலர்களுக்கு அகற்றுமாறு கட்டளையிடுகிறேன். (கூச்சல்-குழப்பம்)



**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் கொடுக்கப்பட்ட கடிதம் சாலைப் பணியாளர்கள் அவர்களாக கைப்பட எழுதிக் கொடுத்த புகார் மனு. என்னுடைய பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த சாலைப் பணியாளர்கள்தான் இந்த மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். மனுக்களுடைய விவரங்களை நான் மீண்டும் ஒரு முறை இங்கே படிக்க விழைகிறேன். (குறுக்கீடுகள்) அனுப்புநர் A. வெள்ளிங்கிரி, தகப்பனார் பெயர் ஆறுச்சாமி, 12/28, வீரமாச்சி அம்மன் கோயில் வீதி, செட்டிப்பாளையம், கோவை. "நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் இந்து அருந்ததியர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். நான் என் மனைவி, ஒரு பெண் குழந்தையுடன் குடித்தனம் நடத்தி வருகிறேன். நான் பொள்ளாச்சி கோட்டம், பல்லடம் உட்பிரிவில் சாலைப் பணியாளராகப் பணியாற்றி வந்தேன். 7-9-2003 ஆம் தேதி பணியிலிருந்து நீக்கப்பட்டேன். நான் இப்பணிக்குச் சேர கோவை மேற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தி.மு.க. மாவட்டச் செயலாளர் சி.டி. தண்டபாணிக்கு 40 ஆயிரம் ரூபாய் எனது உறவினர்களிடம் கடன் வாங்கிக் கொடுத்து பணியில் சேர்ந்தேன். தற்சமயம் பணியில்லாமல் நான் மிகவும் வறுமையில் வாடி வருகிறேன். ஆகவே தாங்கள் தயவுகூர்ந்து அரசுப் பணியிலோ அல்லது வேறு ஏதேனும் பணியிலோ என்னை சேர்த்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

*(தி.மு.க.-வைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)*

"T. பரமசிவம், சாலைப் பணியாளர், திருநீலகண்டர் வீதி, பொள்ளாச்சி. வி. ஜெயராமன், சட்டமன்ற உறுப்பினர். ஐயா கடந்த தி.மு.க. ஆட்சியில் சாலைப் பணியாளர் பணிக்கான தேர்வில் கலந்து கொண்டேன். நான் என் பணி நியமனத்திற்காக தி.மு.க-வைச் சேர்ந்த சி.டி. தண்டபாணி, எம்.பி. அவர்களிடம் ரூபாய் 25 ஆயிரம் கொடுத்து பணியில் சேர்ந்தேன். பிறகு வந்த அரசு பணி நீக்கம் செய்து விட்டதால் எனக்கு வேலை இல்லாமல் குடும்பம் நடத்தக் கஷ்டப்படுகிறேன். எனவே, எனது குடும்பம் பிழைக்க ஐயா அவர்கள் ஏதேனும் எனக்கு அரசு வேலை வழங்கி எனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்."

"P. கதிரவன், சாலைப் பணியாளர், 23, அன்னை கஸ்தூரிபாய் வீதி, பொள்ளாச்சி, வணக்கம். கடந்த தி.மு.க. ஆட்சியில் சாலைப்

பணியாளர் பணிக்கான தேர்வில் கலந்து கொண்டேன். நான் என் பணி நியமனத்திற்காக தி.மு.க.–வைச் சேர்ந்த சி.டி. தண்டபாணி, எம்.பி. அவர்களிடம் 25 ஆயிரம் ரூபாய் கொடுத்து பணியில் சேர்ந்தேன். பிறகு வந்த அரசு பணி நீக்கம் செய்து விட்டதால் எனக்கு வேலை இல்லாமல் குடும்பம் நடத்தவே கஷ்டப்படுகிறேன். எனவே, எனது குடும்பம் பிழைக்க ஐயா அவர்கள் ஏதேனும் எனக்கு அரசு வேலை அல்லது எனது குடும்பத்தைக் காப்பாற்ற வேறு ஏதேனும் வேலை வாங்கித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறாக வந்த கடிதங்கள் அனைத்தும் அந்தந்தத் தேதிகளில் சாலைப் பணியாளர்களே அவர்களுடைய கையொப்பமிட்டு, அவர்களாகவே எழுதிக்கொடுத்தக் கடிதங்கள். அவர்களுடைய அடையாள அட்டையையும், அரசாங்கத்தால் அப்போது சாலைப் பணியாளர்கள் என்பதற்காக வழங்கப்பட்ட அடையாள அட்டையையும் இங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே தாக்கல் செய்கிறேன்.

முற்பகல் *11–35*

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order. Allow me to speak. (Interruptions) Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் துணை மானியக் கோரிக்கையின்மீது விவாதத்தைத் தொடக்கி வைத்து திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் அமைச்சர் அவர்கள் எழுந்து இந்தக் குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இந்தக் குற்றச்சாட்டைச் சொல்கின்ற நேரத்தில் அவர்களிடத்திலே ஆதாரம் இருந்திருக்குமேயானால், முன்னமே உங்களிடத்திலே கொடுத்துவிட்டு, பிறகு ஆதாரத்தை வெளியிடச் சொல்லியிருக்கலாம். தவறில்லை. ஆனால் யாரைப்பற்றி எந்தக் குற்றச்சாட்டுச் சொன்னாலும், நீங்கள் ஏற்கெனவே — விதிகளிலே இருக்கிறது. இது எப்படி குற்றச்சாட்டிற்கு ஆதாரமாகும்? ஆதாரத்தை கொடுத்திருக்க வேண்டும். அவர்களிடம் கொடுத்திருக்க வேண்டும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள், இல்லை, பிரச்சினையை பொன்முடிதான் ஆரம்பித்தார். பிரச்சினையை பொன்முடிதான் ஆரம்பித்தார். சாலைப் பணியாளர்கள் பிரச்சினையை பொன்முடி ஆரம்பித்தார். ஆரம்பித்தவுடனே கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே கையூட்டு பெற்றுக்கொண்டு இதுபோல பணிகளிலே அமர்த்தியிருக்கிறார்கள் என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் குற்றச்சாட்டைச் சொன்னார். அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டுத்தான் தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். இன்றைக்கு அவர் ஆதாரத்தை என்னிடத்தில் ஏற்கெனவே தாக்கல் செய்துவிட்டு, அதனுடைய நகல்களைத்தான் இங்கே வாசிக்கிறார். ஆகவே இது ஒன்றும் தவறு அல்ல.

**திரு. சி. ஞானசேகரன்:** கொடுத்திருந்தால்கூட it is not at all an evidence. It is an after thought.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஒன்றும் தவறாகக் கேட்ட மாதிரி எனக்குத் தெரியவில்லை. அவர் கேட்டது கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டார். அவர் கேட்டது கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டார். (குறுக்கீடுகள்) அதிலே என்ன தவறு? கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்பதற்குத்தான் இவ்வளவு பேச்சா? கனிவோடு அவர்களுடைய (குறுக்கீடுகள்) — சாலைப் பணியாளர்களை மீண்டும் பணிக்கு அமர்த்துவது குறித்து இந்த அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டும் அல்லது முதலமைச்சர் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு இதுதான் பதிலா? இது எப்படி நியாயமாக இருக்க முடியும்? 4½ வருடங்களாக நீங்கள்தான் இருக்கிறீர்கள். இந்த 4½ வருடங்களாக என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? இந்த 4½ வருடங்களாக என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் லாபியில் இருந்துகொண்டு கோஷமிட்டுக் கொண்டேயிருந்தார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற வளாகத்திற்குட்பட்ட பகுதிகளில் இருந்து கொண்டு கோஷம் போடக்கூடாது. கோஷம் போடக்கூடிய உறுப்பினர்களை வெளியேற்ற வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. திடீரென்று சட்டமன்றத்திலே வந்து ஓர் இறந்துபோன உறுப்பினர், சி.டி. தண்டபாணி உயிரோடவே இல்லை. சி.டி. தண்டபாணி, எம்.பி., சி.டி. தண்டபாணி, எம்.பி., என்று அவர் பெயரைச் சொன்னால், என்ன நியாயம் அது? அவர் தன்னைத் தற்காத்துக்கொள்ள முடியாது. இந்த அவையிலே உறுப்பினர் இல்லை. உயிரோடும் இல்லை. உயிரோடு இல்லாத ஒருவரை, உயிரோடு இல்லாத ஒருவரை, தாழ்த்தப்பட்ட, தலித் வகுப்பைச் சேர்ந்த ஒருவரை இவ்வளவு இழிவுபடுத்துவது முறையல்ல. இது நியாயமல்ல. இதுபோன்று நீங்கள் ஒரு குற்றச்சாட்டு என்று சொல்வதோ...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆதாரமற்றது இது.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இந்தக் குற்றச்சாட்டுகளை எழுதிக் கொடுத்தவர்கள் சாலைப் பணியாளர்கள்தான். (குறுக்கீடுகள்) பாதிக்கப்பட்ட சாலைப் பணியாளர்கள்தான். பணம் கொடுத்து, ஏமாந்த, பாதிக்கப்பட்ட சாலைப் பணியாளர்கள்தான் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். அப்போது சி.டி. தண்டபாணி அவர்கள் உயிரோடுதான் இருந்தார். அப்போது தி.மு.க.-வினுடைய மாவட்டச் செயலாளராகத்தான் இருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எதைப் பாதுகாப்பதற்காக – – இதை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? பாதிக்கப்பட்ட சாலைப் பணியாளர்களே அவர்கள் கையொப்பமிட்டு, கடந்த தேதியில் கொடுத்தக் கடிதங்களைத்தான் நான் இங்கே ஆதாரமாகத் தாக்கல் செய்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) அரசாங்கம் தந்த அடையாள அட்டையையும் அதற்குச் சான்றாகத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அரசாங்கம் தந்த அடையாள அட்டையையும் சான்றாகத் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு ஒன்றை வெளியிட இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** நேற்றைக்கே கொடுத்திருந்தால் பரவாயில்லை. இப்போது கொடுப்பதை எப்படி ஏற்றுக்கொள்ளலாம்?



## 5. திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள் வாழ்ந்த இல்லத்தை நினைவிடமாக்கி இலக்கமுறை நூலகம் அமைக்க அரசு எடுத்துள்ள முடிவும் – பாராட்டும்

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தினத்தந்தி' தமிழ் நாளிதழின் நிறுவனரும், முன்னாள் அமைச்சரும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் பேரவைத் தலைவருமான திரு. சி.பா. ஆதித்தனார் அவர்களின் 101 ஆவது பிறந்த நாளான இன்று (27–9–2005) அன்னாரை கௌரவிக்கும் வகையில் அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவிடமாக்க எனது அரசு முடிவெடுத்துள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள் வாழ்ந்த இல்லம், தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ளது. இந்த இல்லத்தில் அரசு நினைவிடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு தரப்பினரிடமிருந்தும் அரசுக்கு வரப்பெற்றுள்ளது. இதனை நிறைவேற்றுவது தமிழ் சமுதாயத்திற்கு ஆற்றுகின்ற சிறந்த பணி என்ற அடிப்படையில் எனது அரசு இந்தக் கோரிக்கையை ஏற்று அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவிடம் ஆக்க முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நினைவிடத்தில், இலக்கமுறை நூலகம் (Digital Library) ஒன்று அமைக்க சில அமைப்புகள் முன்வந்துள்ளன. இதனையும் ஏற்று, இந்த நினைவிடத்தில் இலக்கமுறை நூலகம் (Digital Library) ஒன்று உருவாக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

*முற்பகல் 11–40*

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் அறிவிப்பு ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். நானே இன்று கேட்டுக்கொள்ளலாம் என்று

நினைத்தேன். திரு. சி.பா. ஆதித்தனாருக்கு 101-வது பிறந்த நாள். பத்திரிகை உலகத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்திய பாமரனும்கூட தினசரி காலையிலே பத்திரிகை படிக்கின்ற ஒரு நல்ல நிலையை உருவாக்கிய சி.பா. ஆதித்தனார் அவர்கள் இங்கே பேரவையிலே பணியாற்றியிருக்கிறார்கள். பேரவைத் தலைவராக பணியாற்றியிருக்கிறார்கள். அவர் பேரவைத் தலைவராக இருந்த நேரத்திலே தமிழுக்கு, இங்கே தமிழை அறிமுகப்படுத்துவதிலே பல புதிய அணுகுமுறைகளை அவர்கள் ஏற்படுத்தினார்கள். தமிழிலே சட்டமன்ற நடவடிக்கை குறித்த கையேடு வரக் காரணமாக இருந்தார்கள். தமிழிலே விதிமுறைகள் நல்ல முறையிலே இங்கே வருவதற்கும் அவர்கள் காரணமாக இருந்தார்கள். அந்த வகையிலே சிற்பி சி.பா. ஆதித்தனார் அவர்கள் வாழ்ந்த இல்லத்தை, ஸ்ரீவைகுண்டத்திலே வாழ்ந்த இல்லத்தை நினைவிடமாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைக்கவேண்டுமென்று பலரும் சொல்லியிருந்தார்கள். என்னிடத்திலேயும் அந்தக் கோரிக்கை வந்திருந்தது. நானும் சொல்லலாமென்று இருந்தேன். அவருக்கு அந்த இடத்தை நினைவிடமாக தமிழக அரசு அறிவிக்கிறது என்பதிலே நாங்கள் எங்களுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு முன்பாக அவரது துணைத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். திரு. ஜி.கே. மணி அவர்களும் இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். இந்தக் கோரிக்கை வைத்த பலரில் இவர்களும் உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த . . .



## 4. மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி.டி. தண்டபாணி கையூட்டு பெற்றதற்கான ஆதாரங்கள் என மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அளித்தவை—தொடர்ச்சி

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரங்கள் இருந்திருக்குமேயானால் நேற்றே ஆதாரத்தை அவர் கொடுத்திருக்க வேண்டும் உங்களிடத்திலே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, பழையபடி . . .

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது ஆதாரம் ஆகாது. இது ஆதாரம் ஆகாது. இன்றையதினம் இது after thought. இது ஆதாரமே ஆகாது. எப்படி ஆதாரம் ஆகும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதித்தனார் வாழ்ந்த இல்லத்தை நினைவிடமாக ஆக்குகின்ற பிரச்சினைக்கு வந்தாகி விட்டது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது வெறும் வெற்றுக் காகிதம். வெற்றுக் காகிதத்திலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழைய விஷயத்திற்கு போகாதீர்கள். மணி அவர்கள் நன்றி சொல்வதற்கு எழுந்திருக்கிறார்கள். உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவை அனைத்தும் வெற்றுக் காகிதங்கள் அல்ல. பாதிக்கப்பட்ட சாலைப் பணியாளர்கள், அவர்களாகவே கையால் எழுதிக் கொடுத்த மனுக்கள் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் கொடுத்த அடையாள அட்டையுடன் அந்தச் சாலைப் பணியாளர்களே கொடுத்த மனுக்கள் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அவர்களாகவே கொடுத்த கடிதங்களாகத் தெரியவில்லை, engineered. சொல்லி ஒரே மாதிரி எழுதி எல்லோரும் கொடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக இது ஆதாரம் ஆகாது. இது ஆதாரம் என்றால் ஒரு விசாரணைக்கு அவர் தயாராக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது. பிரச்சினை முடிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டு அதற்கு நீங்கள் நன்றியும் சொல்லியாகி விட்டது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, These are all statements given by the aggrieved, then Government employees. They are affected people. They have given the statements. They have enclosed along with their written statements, signed statements, also the identity cards issued by the Government. More than this no more evidence is required to prove that they are all genuine. (குறுக்கீடுகள்)

## 6. கவன ஈர்ப்பு

### சீர்காழி, எடமணல் மற்றும் திருநகரி கிராமங்களுக்கிடையே உப்பனாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. சந்திரமோகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சந்திரமோகன். (குறுக்கீடுகள்)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)



## 4. மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சிடி. தண்டபாணி கையூட்டு பெற்றதற்கான ஆதாரங்கள் என மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அளித்தவை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, இந்தப் பிரச்சினை முடிந்து விட்டது. திரு. சந்திரமோகன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது statement ஆகாது. It is only on a piece of paper.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இப்போது விவாதம் கிடையாது இது. அவர் ஏற்கெனவே குற்றச்சாட்டிற்கான ஆதாரத்தைக் கேட்டார்கள். ஆதாரத்தைக் கொடுத்து விட்டார். ஆதாரத்தினுடைய நகலை என்னிடத்திலேயும் கொடுத்திருக்கிறார். அது முடிந்துவிட்ட பிரச்சினை. இனிமேல் இதில் விவாதத்திற்கு இடமில்லை. திரு. சந்திரமோகன். (குறுக்கீடுகள்) அடுத்த நிகழ்ச்சிக்கு போயாகிவிட்டது.

## 6. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### சீர்காழி, எடமணல் மற்றும் திருநகரி கிராமங்களுக்கிடையே உப்பனாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்—தொடர்ச்சி

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழி தொகுதி எடமணல் மற்றும் திருநகரி கிராமங்களுக்கு இடையே வெள்ளப்பள்ளம் உப்பனாற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும். (குறுக்கீடு) பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**அறிக்கை**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி-திருமுல்லைவாயில் சாலையில் (மாவட்ட முக்கிய சாலை) கி.மீ. 8/6-ல் எடமணல் கிராமம் அமைந்துள்ளது. சீர்காழி வட்டம், மங்கைமடம்-திருநகரி (இதர மாவட்டச் சாலை) சாலையில் கி.மீ. 1/4-ல் திருநகரி கிராமம் உள்ளது. இவ்விரு கிராமங்களுக்கும் இடையில் உப்பனாறு குறுக்காகச் செல்கிறது. இவ்விரண்டு கிராமங்களையும் இணைக்க உப்பனாற்றில் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டுவது அவசியமாகும். ஆற்றின் குறுக்கே 10 கண்கள் கொண்ட 8.6 மீ. அகலமுள்ள உயர்மட்ட பாலம் மற்றும் அணுகு சாலைகள் இருபுறமும் அமைக்க ரூபாய் 425 இலட்சம் செலவாகும். இப்பணியினை சுனாமி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்திட உரிய செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அவர் பேசி முடித்து விடட்டும்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். 4.25 கோடி ரூபாய் செலவிலே புதிய பாலம் அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக தமிழகத்தில் சாலை வசதி இல்லாத கிராமங்களே இல்லையென்று நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைமூலம் பல புரட்சிகளைச் செய்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் சீர்காழி தொகுதி, எடமணல் கிராமத்திற்கும், திருநகரி கிராமத்திற்கும் இடையில் உள்ள வெள்ளப்பள்ளம் உப்பனாற்றின் மேல், ரூபாய் 4.25 கோடி மதிப்பில் போக்குவரத்துப் பாலம் கட்டப்படும் என்று அறிவித்து, பல ஆண்டுகளாக கழுத்தளவு நீரில் ஆற்றைக் கடந்து சென்று கொண்டிருந்த இரண்டு கிராம மக்களின் வயிற்றில் பாலை வார்த்த தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது சீர்காழி தொகுதி மக்களின் சார்பில் கோடானுகோடி நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.



முற்பகல் 11-45

## 5. திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள் வாழ்ந்த இல்லத்தை நினைவிடமாக்கி இலக்கமுறை நூலகம் அமைக்க அரசு எடுத்துள்ள முடிவும்—பாராட்டும்—தொடர்ச்சி

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, என்ன ?

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மரியாதைக்குரிய சி.பா. ஆதித்தனார் அவர்களுக்கு...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சி.பா. ஆதித்தனார்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய பெரியவர் அமரர் சி.பா. ஆதித்தனார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை இன்று தமிழ்நாட்டிலே பல்வேறு இடங்களில் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிற ஒரு நல்ல நாள். இன்று 101-வது பிறந்த நாள். அவர் 'உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு' என்று வாழ்ந்து மறைந்தவர். தமிழுக்காக அருந்தொண்டாற்றியவர். இந்த மாமன்றத்திலே பேரவைத் தலைவராக, அமைச்சராக, சட்டமன்ற உறுப்பினராக, மேலவை உறுப்பினராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

அதுமட்டுமல்லாமல், அவர் தமிழுக்காற்றிய தொண்டுகளில் இந்த மாமன்றத்தில் அவை தொடங்குவதற்கு முன்பு குறளைப் படித்து, அவை தொடங்குகிற ஒரு நல்ல முன்னுதாரணத்தை ஏற்படுத்திய பெருமைக்குரியவர்.

அதுமட்டுமல்லாமல் சட்டமன்ற விதியை தமிழாக்கம் செய்து தமிழில் வெளிவர முதலில் வழிகாட்டியவர். இப்படி தமிழுக்கு அரும்பணியாற்றிய நம்முடைய பெரியவருக்கு இன்று அரசு மரியாதை செய்ய வேண்டுமென்ற ஒரு வேண்டுகோள் பல்வேறு தரப்பிலேயிருந்து வந்திருக்கிறது. நாங்கள்கூட அதை எழுத்து மூலமாகக் கொடுத்திருந்தோம். காலையிலேகூட அலுவலுக்கு ஒதுக்கப்படாத நேரத்திலே நான் அதைப் பற்றிப் பேசுவதற்காக எழுந்து கேட்டேன்.

தாங்கள் மறுத்திருந்தாலும்கூட முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று, இங்கே அரசுத் தரப்பிலே ஸ்ரீவைகுண்டம், திருவைகுண்டத்திலே அவர் வாழ்ந்த அவருடைய இல்லத்தை நினைவிடமாக மாற்றி, அதிலே ஆசியா கண்டத்திலே போற்றுதலுக்குரிய வகையிலே கணினிமய நூலகமாக ஆக்குவதற்கு இந்த அரசு எடுத்த முயற்சியை உள்ளபடியே நாங்கள் வரவேற்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

இந்த ஆண்டு பல்வேறு முன்னோர்களுக்கு மணிமண்டபம், பல்வேறு நினைவுச் சின்னங்களை எழுப்புகின்ற இந்த வேளையில், இந்த நல்ல செய்தியை அறிவித்ததற்கு மீண்டும் ஒரு முறை வரவேற்று, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மீண்டும், மீண்டும் வரவேற்கிறோம் என்ற செய்தியையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுபட்ட பழைய திருநெல்வேலி மாவட்டம், காயாமொழி கிராமத்தில் பிறந்து, திருச்சியிலே பட்டம் பெற்று, சென்னையிலே வழக்கறிஞராகப் பட்டம் பெற்று, லண்டன் சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்று, மதுரையிலே முதன் முதலாக 'தினத்தந்தி' நாளிதழைத் தொடங்கி, மிகச் சிறப்பாக தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் தொண்டாற்றியவர் திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள்.

இந்தச் சட்டமன்றத்திலே இப்போது நடைபெறுகின்ற தமிழ் நடவடிக்கைகளை முதன் முதலாகக் கொண்டு வந்தவர். இங்கே மேலவையிலே உறுப்பினராக இருந்திருக்கின்றார். இந்த அவையிலேயும் உறுப்பினராக, விவசாயத் துறை அமைச்சராக, ஏன் மாண்புமிகு பேரவைத் தலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றி, தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்தவர். ஆகவே, அவருடைய, அவர் பிறந்து, வாழ்ந்த வீடான ஸ்ரீவைகுண்டம் இல்லத்தை அரசு நினைவில்லமாக ஆக்கி, அந்த இடத்தில் நம்முடைய மண்ணின் மைந்தர், இந்தியத் திருநாட்டினுடைய ஜனாதிபதி மேதகு அப்துல் கலாம் அவர்களுடைய எண்ணமான Digital நூலகம் ஒன்று அதே இடத்தில் அமைப்பதற்கும் முதன் முதலாக இந்த சட்டமன்றத்திலே— நான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கோரிக்கை வைத்தேன். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்லவில்லையோ



என்று எண்ணியிருந்தேன். ஆனால், சரியான வேளையில் இன்று அவருடைய 101-வது பிறந்த தினத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நம்முடைய சி.பா. ஆதித்தனார் அவர்களுக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் அவர் வாழ்ந்த வீடான ஸ்ரீவைகுண்டம் இல்லத்தை நினைவில்லமாக அறிவித்ததோடு அதே இடத்தில் நம்முடைய ஜனாதிபதி அவர்களுடைய எண்ணமான Digital நூலகம் திறப்பதற்கும் அனுமதி அளித்திருக்கின்றார்கள்.

என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள நம்முடைய தமிழுக்காக வாழ்ந்த சி.பா. ஆதித்தனாரின் நினைவில் வாழ்கின்ற அத்தனை பேர் சார்பாகவும், ஏன் அவருடைய குடும்பத்தாரான சின்ன அய்யா சிவந்தி ஆதித்தனார், பெரிய அய்யா ராமச்சந்திர ஆதித்தனார் அவர்களுடைய குடும்பத்தின் சார்பாகவும் இந்த நல்ல வேளையிலே இந்த நன்றியை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு இந்த Digital நூலகமும் உடனடியாக அதிலே தொடங்கவும், அதற்கு உதவி செய்வதற்கும் பல பேர் இருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள். உடனடியாக அந்தப் பணி விரைவாக நடப்பதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன், நன்றி.

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.பி. சண்முகநாதன். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் நன்றி சொல்லி விடட்டும்.

**திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதியில் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து, இந்த அவையில் பேரவைத் தலைவராகவும், அமைச்சராகவும், சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு ஒரு வழிகாட்டியாகவும் இருந்து, உயிர் தமிழுக்கு என்று வாழ்ந்த அமரர் சி.பா. ஆதித்தனார் அவர்களை கௌரவப்படுத்தும் வண்ணமாக, மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவு இல்லமாகவும், அதில் Digital நூலகம் — ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் உள்ள அந்த வீட்டில் இன்றைக்குச் சிறந்ததொரு நூலகமாக — அமைக்கவிருப்பது, அனைத்துச் சமுதாயத்திற்கும், அனைத்துச் சமுதாய மக்களுக்கும் பெருமை சேர்க்கும்.

குறிப்பாக ஸ்ரீவைகுண்டம் தொகுதி மக்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வாழ்த்தி இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்குமே புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அந்தச் சமுதாய மக்கள் உறுதியாக, அவர்களுக்குத் துணையாக எந்த நேரத்திலும் இருப்பார்கள் என்பதை நன்றியுணர்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சிடி. தண்டபாணி கையூட்டு பெற்றதற்கான ஆதாரங்கள் என மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அளித்தவை—தொடர்ச்சி

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் ஆதாரமற்ற குற்றச்சாட்டை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. ஜி.கே. மணி, எல்லாம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. தலைவர் அவர்களே, நான் சொல்லி விடுகிறேன், சொல்லி விடுகிறேன். எங்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள்.

## 7. அறிக்கைகள் அளித்தல்

### (அ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) இப்போது குழுக்களின் அறிக்கைகள் அளித்தல்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. லா. சந்தானம். (குறுக்கீடுகள்) திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற...





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. சந்தானம், குழுக்களின் அறிக்கைகளை அளித்தல்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை, இல்லை. நானும் ஒரு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, சொல்லுங்கள். அறிக்கையை அளித்துவிட்டு பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. லா. சந்தானம், அறிக்கைகள் அளித்தல்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2006 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 38-வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 2003-2006 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 123, 124 மற்றும் 125 ஆகிய 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005-2006 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கைமீது விவாதம். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, அது ஏற்கெனவே சொல்லி முடிந்து போய் விட்டது. முடிந்த பிரச்சினை அது. (குறுக்கீடு) திரு. எச். ராஜா. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே இதுபற்றி விவாதித்து முடிவு செய்யப்பட்டுவிட்டது. முடிந்துவிட்டது அது. (குறுக்கீடுகள்) அது முடிந்து, அடுத்த நிகழ்ச்சி எல்லாம். நன்றி எல்லாம் சொல்லி முடிந்தாகி விட்டது. (குறுக்கீடு) என்ன, திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

## 4. மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சிடி. தண்டபாணி கையூட்டு பெற்றதற்கான ஆதாரங்கள் என மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அளித்தவை—*தொடர்ச்சி*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் பணியாளர்கள் பிரச்சினையிலே மிகப் பெரிய சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் வேலையில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை. அதுபற்றி இனிமேல் பேசுவதற்கு அனுமதியில்லை. (குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** *இல்லை, இல்லை.*

## 8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எச். ராஜா. (குறுக்கீடுகள்) துணை நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம். திரு. எச். ராஜா. (குறுக்கீடுகள்)*

*(பின்னர், திருமதி வி. சிவகாமி, திரு. க. முருகவேல் ராஜன் ஆகியோரைத் தவிர, எஞ்சிய பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**திரு. எச். ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

*(இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

*(பின்னர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*







**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, திரு. ஜே. ஹேமச்சந்திரன் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அவர் அனுமதி வாங்கிப் பேசவில்லை.*

**திரு. எச். ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் துணை மானியக் கோரிக்கையின்மீது பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக என் கருத்துகளை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தத் துணை மதிப்பீடுகளில் 1,919.25 கோடி ரூபாயை, சமீபத்திலே அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களுக்காக ஒதுக்க வேண்டுமென, இங்கே துணை மதிப்பீடுகளை அவையின் முன்பாக வைத்திருக்கிறார்கள். இந்த 1,919 கோடி ரூபாய்— ஏற்கெனவே மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட Budget-லே பற்றாக்குறையாக 260.11 கோடி ரூபாயானது விடப்பட்டிருக்கிறது. அதோடு சேர்த்து பார்க்கும்போது 2,179.66 கோடி ரூபாய் பற்றாக்குறை அதிகரிக்குமோ என்கின்ற ஐயப்பாடானது இருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இதற்கான நிதி இரண்டு வகைகளில் ஈடுசெய்யப்படும் என துணை மதிப்பீட்டிலும் Review Statement-லும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே மாநில வரி வருவாயில் ஏற்பட்ட உயர் வளர்ச்சி மற்றும் வருவாய்க் கணக்கில் செலவினங்களைச் சிறந்த முறையில் நிர்வாகம் செய்தல் ஆகிய இரண்டின் மூலமாக இந்த அதிகப்படியான செலவினங்களானது ஈடுசெய்ய முடியுமென்று அவர் அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு bold initiative என்றுதான் சொல்கிறேன் நான். அதாவது ஒரு welfare State-லே மக்கள் நலப் பணிகளை நாம் புறந்தள்ளி விடமுடியாது என்றாலுங்கூட இந்த additional 1,919 கோடி ரூபாய் இந்த இரண்டு வகைகளிலே வருமா என்பதைப் பார்க்கும்போது ஐயப்பாடு ஏற்படுகிறது. முதல் முதலாக உயர் வருவாயின் மூலமாக என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கு Review Statement-லே முதல் காலாண்டில் இதுவரை வரி வசூல் 26.96 சதவிகிதம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது கிட்டத்தட்ட காலாண்டிலே கால் பங்கு வந்திருக்கிறது. இது சென்ற ஆண்டு இதே காலாண்டிலே இருந்த வரி வருவாயைவிட 18 சதவிகிதம் அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 2005-2006-க்கான வரவு-செலவுத் திட்டத்தில் மொத்த வருவாய் வரவுகள் 30,251 கோடி ரூபாய். இது 2004-2005-க்கான மொத்த வருவாய் வரவுகளைவிட 12 சதவிகிதம் அதிகம். எனவே, இந்த முதல் காலாண்டிலே சென்ற ஆண்டு இதே அளவு இருந்த வரி வருவாயைவிட இது 18 சதவிகிதம் அதிகம்*

என்று நம்மால் எடுத்துக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் in real terms it will be only 6% increase. எனவே, இதன்மூலமாக இந்த 2,179 கோடி ரூபாய் ஈடு செய்யமுடியுமா என்ற கேள்வியானது எழுகிறது.

*முற்பகல் 11–55*

அதேபோல இரண்டாவதாக வருவாய்க் கணக்கில் செலவினங்களைச் சிறந்த முறையில் நிர்வாகம் செய்வதன்மூலம் ஈடுசெய்ய முடியும் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் Review Statement-இல் 9-வது பக்கத்திலே 2005–2006 ஆம் ஆண்டுக்கான முதல் காலாண்டில் வருவாய்க் கணக்கில் செலவு சென்ற ஆண்டு இதே காலாண்டில் இருந்ததைவிட 12.5 சதவிகிதம் செலவினங்களும் அதிகரித்திருக்கின்றன. எனவே, இது ஒரு uncovered deficit-ஐ உருவாக்கிவிடுமோ என்கின்ற சந்தேகமானது எழுகிறது.

பொதுவாக, இந்த uncovered deficit, inflationary என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விஷயம். இதன்மூலமாக, விலைவாசி உயருமேயானால் அது பாமர மக்களை, சாதாரண ஏழை மக்களைப் பாதிக்கும். இல்லையென்று சொன்னால், இந்த மக்கள் நலத் திட்டங்களுக்காக செலவு செய்யும்போது Developmental Expenditure நாம் செலவு செய்யமுடியாமல் போகலாமென்று நான் கருதுகிறேன்.

23–9–2005 அன்று, இங்கு கூட்டுறவுச் சங்கங்களுடைய செயல்பாட்டினைப் பற்றி பேசும்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1996–2001 வரையிலான காலகட்டத்திலே, கூட்டுறவுச் சங்கங்களிலே நடைபெற்ற ஊழலைப் பற்றி இங்கு பட்டியல் போட்டு ஒரு புத்தகமே வெளியிடமுடியும் என்று சொன்னார்கள். ஆனால், இதே காலகட்டத்திலே காரைக்குடியிலே, சூடாமணி கூட்டுறவுச் சங்க ஊழல் பற்றி ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாகவே நான் இரண்டு புத்தகங்கள் போட்டு அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் ஏற்கெனவே அனுப்பி வைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர்களிடமும் நான் கொடுத்திருக்கிறேன். கடந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கும் வந்திருக்கிறது. நானும் படித்துப் பார்த்தேன்.

**திரு. எச். ராஜா:** ஐந்து ஆண்டுகளிலே ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே மாத்திரம் 20 கோடி ரூபாய்க்கு ஊழல் நடந்திருக்கிறது. அதிலும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இதுபற்றி 15 மாதங்களுக்கு முன்பாக 2004 ஆகஸ்ட் மாதம் 5, 6 தேதிகளிலே, நான்



காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்தபொழுது, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நடவடிக்கையின் மூலமாக அங்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் R.D.O. அவர்களும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு வாரத்திற்குள்ளாக அரசு நிலங்களை பொது நிலங்களை Municipality-க்கு எழுதிக் கொடுத்த இடங்களை, அதற்கு தவறாகப் பொய்யான பட்டா பெற்றிருக்கிறார்கள். என்னுடைய முதல் கோரிக்கையாக அந்தப் பட்டாவை cancel செய்யவேண்டுமென்று இருந்தது. ஆனால், அதை இதுவரை செய்யவில்லை என்பதை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலும், நீதிமன்றத்தில் அவர்கள் Society-யை ஒரு பார்ட்டியாக சேர்க்காமலேயே, தவறு செய்தவர்கள் சென்று, நகராட்சியில் இப்போது Survey Map-யே மாற்றியிருக்கிறார்கள். 429 சர்வே நம்பரிலே 49 ஏக்கர் என்று இருந்ததை அதிகப்படியாக 29 ஏக்கர் இருக்கிறது என்று சொல்லி அதுவெல்லாம் இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சேராது என்பதுபோல ஒரு தோற்றத்தை உருவாக்குவதற்கான மிகப் பெரிய மோசடியானது அங்கு நடந்து கொண்டிருக்கிறது. எனவே, இது தொடர்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களும் குறிப்பிட்ட அந்த இலாகாவைச் சார்ந்த அமைச்சரும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் தவறு செய்துவிட்டு தப்பிக்க முடியும் என மார்தட்டுபவர்களுக்கு நிச்சயமான ஒரு கடும் நடவடிக்கையின் மூலமாக பாடம் கற்பிக்க வேண்டும் என்பதை நான் இங்கு ஒரு கோரிக்கையாக வைக்கிறேன்.

*நண்பகல் 12–00*

மேலும் நகராட்சிகளிலே கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக எண்ணற்ற பல ஆயிரக்கணக்கானவர்கள் ஒவ்வொரு நகராட்சியிலும் பொது இடங்களிலே வீடுகள் கட்டி குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். சமீபத்திலே உயர் நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பானது வந்திருக்கிறது நகராட்சிப் பகுதிகளிலே இருக்கின்ற நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலே குடியிருப்பவர்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டுமென்று. இப்போது கூட மயிலாடுதுறையிலே, சேலத்திலே, அறந்தாங்கியிலே இதுபோன்ற பகுதிகளிலே அங்கு மக்கள் நீக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. Eviction work நடந்து கொண்டிருக்கிறது. என்னுடைய கோரிக்கை நிச்சயமாக restoring water bodies என்பதிலே முழுமையான உடன்பாடு எனக்கு உண்டு. ஆனால் நகராட்சிப் பகுதிகளிலே எங்கு விவசாயம் இல்லையோ, விளை நிலங்களே இல்லையோ அங்கு 50 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கானவர்கள் பக்கா

வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். நகராட்சி அதற்கு வரி வசூல் செய்து கொண்டிருக்கிறது. சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. தொலைத் தொடர்பு இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இம்மாதிரியாக 50 ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் 102 municipalities-களிலும் 6 corporations-களிலும் இருக்கிறார்கள். இதிலே உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினை அப்படியே நாம் செயல்படுத்துவோமேயானால் பல்லாயிரக்கணக்கானவர்களுடைய வீட்டுப் பிரச்சினையை இது உருவாக்கும். ஒரு social tension-ஐ இது உருவாக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே ஒரு G.O. மூலமாக இனிமேல் மேற்கொண்டு ஆக்கிரமிப்பு நடக்காமல் அரசாங்கம் கடுமையாக நடவடிக்கை எடுப்பதை பாரதிய ஜனதா கட்சி முழுமையாக ஆதரிக்கும். ஆனால் இதுவரை பல ஆண்டுகளாக, for decades, அங்கு குடியிருக்கக்கூடிய மக்களுக்குப் பட்டா கொடுப்பதன்மூலம் அவர்களுக்குக் குடியிருப்புப் பற்றிய நிச்சயமற்ற தன்மையிலிருந்து ஒரு விமோசனத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல engineering admissions ஐப் பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேசும்போது 23,000 பொறியாளர்களுக்கான இடங்கள் காலியாக இருக்கின்றன என்று இங்கே அறிவித்தார்கள். AICTE-யும் 5,600 additional seats-க்கு ஏற்கெனவே பல கல்லூரிகளுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் உச்ச நீதிமன்றம் இப்போது தீர்ப்பு கொடுத்திருக்கிறது. இதற்கான மாணவர் சேர்க்கைக்கு பிளஸ் 2 தேர்வினுடைய மார்க்குகளுடைய அடிப்படையிலே admission செய்யலாம் என்று கூறியிருக்கிறது. ஆனால், அதிலே ஒரு rider-ம் இருக்கிறது. அது இந்த ஆண்டுக்கு மாத்திரமே பொருந்தும் என்று. ஏற்கெனவே செப்டம்பர் மாதம் இறுதியிலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம். இன்னமும் அந்தக் கல்லூரிகளுடைய நிர்வாகிகள் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு மற்றும் AICTE-யுடைய additional seats-க்கான sanction அடிப்படையிலே அட்மிஷன் செய்வதற்கு இன்னும் ஒரு மாதம் கேட்கிறார்கள். ஆனால் நவம்பரிலே semester exam வரும். ஆகவே அந்த மாதிரியான சூழ்நிலையிலே மாணவர்களுடைய படிப்பு மிக வெகுவாக பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்ப்பது பற்றி இப்போது உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கி இருக்கிறது.



அந்தத் தீர்ப்பை இங்கு இருக்கின்ற ஒரு தனியார் அமைப்பைச் சேர்ந்தவர்கள் திருத்தி தவறான ஒரு முறையிலே அதைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். உச்ச நீதிமன்றத்திலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காலியாக இருக்கின்ற இடங்களைப் பூர்த்தி செய்வதற்கு அந்த அரசு நடத்துகிற நுழைவுத் தேர்விலோ, இல்லை அந்த பொறியியல் கல்லூரிகள் சங்கங்கள் நடத்தியிருக்கின்ற நுழைவுத் தேர்வு மூலமாகவோ தேர்வு எழுதியிருக்கிற மாணவர்களுடைய பட்டியல் அந்த சங்கத்திடம் கொடுக்கப்பட வேண்டும். அதில் இருக்கின்ற மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம். அதில் இல்லையென்றால் அடுத்தகட்டமாக அந்தத் தேர்வு எழுதாத மாணவர்கள் நுழைவுத் தேர்வு, பிளஸ் 2 மதிப்பெண்கள் அடிப்படையிலே சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அதிலும் ஏதாவது மாநிலத்திலே அந்த நுழைவுத் தேர்வு எழுதுவதற்கு அந்த cut off mark வைத்திருந்தால் அந்த மதிப்பெண்கள் அடிப்படையிலேதான் சேர்க்கப்பட வேண்டுமென்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே நம்முடைய அரசு நுழைவுத் தேர்விலே அந்த பிளஸ் 2 மார்க் 35 சதவீதம் வெற்றி பெற்றாலே சேர்த்துக்கொள்ளலாம் என்று நாம் வைக்கவில்லை. பொறியியல் கல்லூரிகளில் சேர்க்க வேண்டுமென்றால் அதற்கு சில அடிப்படைத் தகுதிகளை நாம் வைத்திருக்கிறோம். அந்தத் தகுதியின் அடிப்படையிலேதான் மாணவர்கள் கண்டிப்பாகச் சேர்க்கப்படுவார்கள். அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த தனியார் பொறியியல் கல்லூரி கூட்டமைப்பு ஒரு தவறான தகவலைச் சொல்லி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதிலே, standard-லே dispute-டே பண்ணவில்லை. என்னுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், ஒவ்வொரு ஆண்டும் இம்மாதிரியான ஒரு நிச்சயமற்ற சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தினாலே, நீதிமன்றத்தினுடைய ஒப்புதல் மூலமாகவோ அல்லது A.I.C.T.E. அனைவருமாகச் சேர்ந்து நீதிமன்றத்திடம் ஒரு மனுவைச் சமர்ப்பிப்பதன் மூலமாகவோ, நாம் வருகின்ற ஆண்டுகளில் ஒரே மாதிரியான தேர்வு முறையினைக் கொண்டு வந்து, அது ஜூன், ஜூலை மாதங்களிலேயே முடிகின்ற அளவிற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஒவ்வொரு வருடமும் இந்த மாதிரியாக, செப்டம்பர், அக்டோபர் வரை ஒரு

நிச்சயமற்ற தன்மை சென்றுகொண்டிருக்கின்ற காரணத்தினாலே. மேலும், பல சுயநிதிக் கல்லூரிகள் தரம் வாய்ந்ததாக இருக்கிறது என்று சொல்ல முடியாது. எனவே, இங்கு நாம் தரமான கல்வியை வழங்குவதற்கும், அதே சமயத்தில் தக்க தருணத்தில் மாணவர்கள் சேர்க்கப்படுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் சட்டமன்றப் பேரவைத் தலைவராகவும், முன்னாள் அமைச்சராகவும் இருந்த மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார் அவர்களுடைய வாழ்விலலத்தை இன்று நினைவில்லமாகவும், அங்கு ஒரு Digital Library கொண்டுவருவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பதற்கு பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக நான் என்னுடைய மனமார்ந்த நன்றியினையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல காரைக்குடியிலே, கர்நாடக சங்கீத ரத்னாகரம், பத்மபூஷன் விருதுபெற்ற திரு. அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் அவர்கள் வாழ்ந்த இல்லமானது இருக்கிறது. பர்மா, மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று, அவர் அங்கு நடத்திய கச்சேரியின் மூலமாக, பரிசாகப் பெற்ற தேக்கு மரங்களைக் கொண்டு வந்து, அங்கே வீடு கட்டி, அவர் வாழ்ந்த இல்லமானது மேலவூரணி வாய்க்கால் தெருவில் இருக்கிறது. மறைந்த முன்னாள் முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களே, அவருடைய இல்லத்தை நினைவில்லமாக அறிவிப்பதற்கான முயற்சிகளை அப்பொழுது மேற்கொண்டபொழுது, வீட்டிலே இருப்பவர்கள் தராத ஒரு சூழ்நிலை இருந்தது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், திரு. அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் அவர்களுடைய இல்லத்தையும் நினைவில்லமாக அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) காரைக்குடியிலே, டி.எஸ். நம்பர் 128/பி.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் அவர்கள், காலத்தால் அழியாத புகழ் பெற்றவர். அவர் வரலாறு போற்றும் ஒரு கலைச் செல்வம். ஆகவே, காரைக்குடியில் அவர் வாழ்ந்த இல்லத்தை தமிழக அரசு நினைவிடமாக ஆக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எச். ராஜா:** திரு. டி.எம். சவுந்திரராஜன், செம்மங்குடி சீனிவாச ஐயங்கார் போன்ற நூற்றுக்கணக்கான ...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா, ஒரு நன்றி சொல்லிவிட வேண்டாமா?

**திரு. எச். ராஜா:** அதுதான், அதற்காகத்தான் வருகிறேன். சங்கீத மேதைகளை உருவாக்கிய திரு. அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் வாழ்ந்த இல்லத்தை, காரைக்குடியிலே அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவில்லமாக இங்கு அறிவித்திருக்கின்ற முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலே விளையாட்டுப் பல்கலைக்கழகம் அமைக்க, கடந்த மாதம் குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். முதன்முதலிலே இதைப்பற்றிப் பேசும்பொழுது, 2001–லேயே இந்தப் பல்கலைக்கழகத்தை காரைக்குடியிலே அமைக்க வேண்டுமென நான் ஒரு கோரிக்கை வைத்திருந்தேன். இது ஸ்ரீபெரும்புதூரிலே 100 ஏக்கர் நிலத்திலே அமைக்கப்படுவதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. இப்பொழுதுங்கூட, அதை re-consider பண்ணி, காரைக்குடிக்கு கொடுப்பார்களேயானால், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, காரைக்குடி நகர மற்றும் தொகுதி மக்களின் சார்பாக நன்றியுள்ளவனாக இருப்பேன். அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்திலே, இராஜாக்கமங்கலம் என்ற ஊரிலே, 107 ஏக்கர் அரசு நிலத்தில் இந்திய விளையாட்டு ஆணைய துணைப் பயிற்சி மையத்திற்கு ஏற்கெனவே அரசு ஒப்புதல் அளித்து, 29 ஏக்கர் நிலமானது வழங்கப்பட்டது. 27-6-2002-ல், S.A.I. அலுவலகமும் அங்கு திறக்கப்பட்டது. மேற்படி S.A.I. sub centre-க்கு அடிக்கல் நாட்டுவிழா 11-2-2004 அன்று நடைபெற்றது. ஆனால், 30-4-2003 அன்று தனியார் சிலர் தொடுத்த வழக்கில், நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையிலே, அரசு அந்நிலத்தை விளையாட்டு ஆணையத்திற்குத் தந்தது. ஆனால், இப்போது அடிக்கல் நாட்டிய பிறகு, மீண்டும் சில தனியார் அங்கு தொடர்ந்த வழக்கில், மாவட்ட நிர்வாகம் அரசு சார்பாக ஆஜராகாத காரணத்தால், அரசுக்கு எதிராக ex-parte தீர்ப்பானது வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இது விஷயமாக அரசு உடனடியாக நீதிமன்றத்தை அணுகி, அந்தத் தீர்ப்பினை மாற்றச் செய்து, மீண்டும் அங்கு விளையாட்டு ஆணைய துணைப் பயிற்சி மையம் ஏற்படுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே Central Water Commission, அங்கு நாம் நீர் தேக்குகின்ற அளவினுடைய

[திரு. எச். ராஜா] [2005 செப்டம்பர் 27

உயரத்தை 136 அடியிலிருந்து 115 அடியாக உயர்த்தலாம் என்று சொன்னபிறகு கேரள அரசாங்கம் வேண்டுமென்றே அங்கு ecology problem உருவாகலாம் என்று சொல்லி மீண்டும் பிரச்சினையைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். இது மத்தியிலே இருக்கின்ற சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சராக தமிழகத்தைச் சார்ந்த திரு. ராஜா அவர்கள் இருக்கிறார்கள். அவரும் அதற்கான நடவடிக்கையை, எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரையில் எடுக்காமல் இருந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், தமிழக அரசு மத்திய அரசை நிர்பந்தித்து, கேரள அரசாங்கம் முல்லை-பெரியாறு அணையிலே நீர் தேக்குகின்ற அளவின் உயரத்தை 136 அடியிலிருந்து 115 அடியாகவாவது – ஏனென்றால் 1979-லே இதை தமிழக அரசானது தற்காலிகமாகக் குறைத்துக்கொள்ளத்தான் சம்மதித்தது. அதற்குப் பிறகு அணையினைப் பலப்படுத்துகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே, நீர் தேக்குகின்ற அளவின் உயரம் 152 அடியாக இல்லாவிட்டாலும் முதற்கட்டமாக 115 அடியாக உயர்த்துவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல அறந்தாங்கி தொகுதியிலே 40 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் கல்லணை கால்வாய்ப் பாசன பகுதியாக இருக்கிறது. மேட்டூர் அணை நீர் நிரம்பியிருந்தும் இந்தப் பாசனப் பகுதிக்கு இன்னமும் தண்ணீர் வராத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதன் காரணமாக அங்கு விவசாயப் பணிகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, அறந்தாங்கி தொகுதியினுடைய பகுதிக்கு தண்ணீர் வருவதற்குத் தேவையான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பிற்கு 1,011 ரூபாய் அடிப்படை விலை வழங்கியிருப்பதை பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல சம்பா அறுவடை நெல்லுக்கும் தமிழக அரசு முன்னமே கொடுத்திருந்த ஊக்கத் தொகையோடு சேர்த்து 100 ரூபாயாக ஊக்கத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அன்வர் ராஜா.

***திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உயிரினும் மேலாக நாங்கள் நேசிக்கின்ற, எங்கள் நெஞ்சங்களில் வைத்துப் பூஜிக்கின்ற, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.



2005 செப்டம்பர் 27] [திரு. அ. அன்வர் ராஜா]

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

என்றான் வள்ளுவன். இது தனி மனிதனுக்கு மட்டுமல்ல, ஒரு நாட்டிற்கேகூட பொருந்தும். அறிவு வளர்ச்சியில மிகச் சிறந்த நாடாக இருக்கின்ற காரணத்தினால்தான் அமெரிக்காவும், அதைத் தொடர்ந்து ஜப்பானும், அதைத் தொடர்ந்து இப்போது சீனாவும் முன்னணியில் நிற்கின்றன. இந்த அறிவு என்பது மூன்று வகைப்படும். ஒன்று, நுண்ணறிவு, இன்னொன்று நூல் அறிவு, இன்னொன்று பட்டறிவு. நுண்ணறிவு என்பது பிறவியிலேயே வருவது. ஒரு மனிதன் பிறவியிலேயே அறிவுள்ள மனிதனாக இருக்கிறான். நூல் அறிவு என்பது புத்தகங்களை அதிகமாகப் படிப்பதால் நமக்குக் கிடைக்கின்ற அறிவு. பட்டறிவு என்பது அனுபவ ரீதியாக நமக்கு வருகின்ற அறிவு. சிலர் அனுபவ ரீதியான அறிவில் திறமையானவர்களாக இருப்பார்கள். சிலர் மிக அதிகமாக நூல்களைப் படிப்பதால் அறிவுள்ளவர்களாக இருப்பார்கள். சிலர் Born Intelligent -ஆக இருப்பார்கள். அதாவது, நுண்ணறிவு பெற்றவர்களாக இருப்பார்கள். ஆனால் நுண்ணறிவு, நூல் அறிவு, பட்டறிவு ஆகிய மூன்றையும் முழுமையாகப் பெற்றுத் திகழும் அறிவுச் சுடராக நம் அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நாம் பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த அறிவுச் சுடர், அம்மா அவர்களின் அறிவு வெளிச்சம் தமிழகத்தில் இருக்கின்ற, கிராமப்புறங்களில் இருக்கின்ற அறியாமை இருட்டை எப்படியெல்லாம் போக்கியிருக்கிறது என்பதை மிகச் சுருக்கமாக விளக்குகின்ற கையேடுதான் இன்று நம்முடைய நிதியமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற முதல் துணை மதிப்பீடுகள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மதிப்பீட்டில் நான் மிகவும் விரும்பி நெகிழ்ந்து போன ஒரு திட்டம் உழவர் பாதுகாப்புத் திட்டம். உலகத்தின் தலைசிறந்த தொழில் விவசாயம்தான். எனவேதான், "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்றான் வள்ளுவன். ஆனால், அந்த விவசாயம், எல்லாக் காலங்களிலும் இலாபகரமானதாக இருந்ததில்லை.

பிற்பகல் 12–15

"உழுவார்கள்; விதைப்பார்கள்; இறைப்பார்கள்; அறுப்பார்கள்; ஆனால், உண்ண மட்டும் உணவு இல்லாமல் தவிப்பார்கள்" என்று 'நாடோடி மன்னன்' திரைப்படத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஓரிடத்திலே கூறுவார்கள். ஏராளமான வளங்கள் இருக்கும்.

நீர் நிறைந்திருக்கும். நெல் விளைந்திருக்கும். இருந்தாலும், விவசாயி பட்டினி கிடப்பான் என்பதையும், அதற்கு ஒரு வகையான மாற்றம் இந்த உலகத்திலே வேண்டும் என்பதையும், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்வார்கள்:

"தேனாறு பாயுது, செங்கதிரு சாயுது
ஆனாலும் மக்கள் வயிறு காயுது
வகையான மாற்றம் வந்தாலன்றி ஏது சீருகள்"

என்று கேட்பார். எனவே, அந்த வகையான மாற்றம், விவசாயிகளின் வாழ்விலே முன்னேற்றம் என்ற கருத்தில் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற திட்டம்தான் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக 100 கோடி ரூபாய் இன்று இப்போது ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது எதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை தயவுசெய்து கொஞ்சம் நாம் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாம் சட்டை அணிந்திருக்கிறோம். இந்தச் சட்டையை உருவாக்குகின்ற தொழிலாளி, இதை எவ்வளவுக்கு விற்க வேண்டுமென்று நிர்ணயிக்கின்ற உரிமையைப் பெறுகின்றான். கையில் கடிகாரம் அணிந்திருக்கிறோம். இந்தக் கடிகாரத்தை உருவாக்குகின்ற தொழிலாளி, நாம் கடைக்குப் போனால், ஷோ-ரூமிலே பார்க்கிறோம். அது என்ன விலை என்பதை அதிலே ஒரு சீட்டில் எழுதிப்போட்டு வைத்திருக்கிறான். செருப்புத் தைக்கிற ஒரு தொழிலாளி, தான் தைக்கின்ற செருப்பு என்ன விலை என்று தீர்மானிக்கும் உரிமையைப் பெற்றிருக்கின்றான். ஆனால், "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்கிறார்களே, அந்த உயிரைக் கொடுக்கின்ற, உணவைத் தருகின்ற உழவன் விளைவிக்கின்ற அந்த நெல்லுக்கு உரிய விலையை நிர்ணயிக்கின்ற உரிமை அவனுக்கு இல்லை. அந்த உரிமையை நாம் அவனுக்கு வழங்கவில்லை. ஏன் வழங்கவில்லை என்றால், பொது நன்மை கருதி நாம் அவனுக்கு வழங்கவில்லை. அப்படி வழங்கவில்லை என்கின்ற காரணத்திற்காகத்தான், பல்வேறு நேரங்களில், தற்காலிகமாக பல சலுகைகளை அவனுக்கு நாம் அளிக்கிறோம். இலவச மின்சாரம் அளிக்கிறோம். சில நேரங்களில், விளையாத காலங்களில் தள்ளுபடி என்கிறோம். கூட்டுறவு வட்டியை, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தள்ளுபடி செய்ததைப்போல, தள்ளுபடி செய்கிறோம். இப்படி ஏராளமான சலுகைகளைத் தரவேண்டுமென்று நினைக்கிறோம். யுகம் யுகமாக,



இதுதான் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இது ஒரு தற்காலிக ஏற்பாடு. இதற்கு ஒரு நிரந்தர ஏற்பாடு என்ன? நெல்லை உருவாக்குகிறவன், என்ன விலைக்கு விற்க வேண்டுமென்று அவன் இலாபம் வைத்துக் கூடுதலாக விற்றிருந்தால் அவனுக்கு எவ்வளவு வருமானம் வந்திருக்கும்? அதை வைத்துக்கொண்டு அவன் எப்படியெல்லாம் வாழ்க்கையை அமைத்திருப்பான்? அப்படியெல்லாம் அவன் வாழ்க்கையை அமைத்திருப்பானோ, அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை அவனுக்கு நிரந்தரமாக அமைத்துக் கொடுக்க வேண்டும் என்கின்ற எண்ணம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உள்ளத்திலே தோன்றியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் உழவர் பாதுகாப்புத் திட்டமாக இப்போது உருவாகியிருக்கிறது.

"பசிக்கிறது" என்று சொல்கிறவனுக்கு ஒரு ரொட்டித் துண்டைக் கொடுப்பது – தற்காலிகத் தீர்வு. பசிக்கிறது என்று சொல்கிறவனுக்கு அந்த ரொட்டியை எப்படி உருவாக்குவது என்று கற்றுத் தருவதுதான் நிரந்தரமானத் தீர்வு. காலங்காலமாக, உரிமை மறுக்கப்பட்டு வந்த அந்த ஏழை விவசாயிகளின் வாழ்க்கையில், நிரந்தரமான ஒரு தீர்வினை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான், இந்த 'உழவர் பாதுகாப்புத் திட்டம்' என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது சாதாரணமான திட்டமல்ல. 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள். 51 இலட்சம் சிறு, குறு விவசாயிகள். 60 வயதைக் கடக்கிறபோது, 200 ரூபாய் அவர்களுக்கு ஊதியம் - ஓய்வூதியம் - என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது சாதாரணமான திட்டம் அல்ல. விபத்தில் இறந்தால் ரூபாய் ஒரு இலட்சம் குடும்பத்திற்கு நிதி. விபத்தில், உடல் உறுப்பு இழந்தால், ரூபாய் ஒரு இலட்சம் வரை நட்ட ஈடு. இயற்கை மரணத்திற்கு 10 ஆயிரம் ரூபாய். ஈமச் சடங்கு செலவிற்கு ரூ. 2,500. மகன் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றால், ஆயிரம் ரூபாய். மகள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றால், ரூ. 1,250. மகன் பிளஸ் 2 தேர்ச்சி பெற்றால், ரூ. 1,500. மகளுக்கு பிளஸ் 2 தேர்ச்சி பெற்றால், ரூ. 1,750. இளங்கலை படிக்கும் மாணவனுக்கு ஓராண்டிற்கு ரூ. 1,500. இளங்கலை படிக்கும் மாணவிக்கு ஓராண்டிற்கு ரூ. 2,000. விடுதியில் தங்கிப் படிக்கும் இளங்கலை மாணவனுக்கு ரூ. 1,750. விடுதியில் தங்கிப் படிக்கும் இளங்கலை மாணவிக்கு ரூ. 2,250. முதுகலை படிக்கும் மாணவனுக்கு ரூ. 2,000. முதுகலை படிக்கும் மாணவிக்கு ரூ. 2,500. விடுதியில் தங்கி முதுகலை படிக்கும் மாணவனுக்கு ரூ. 3,000. விடுதியில் தங்கி முதுகலை படிக்கும் மாணவிக்கு ரூ. 3,500.

சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம், அதனைச் சார்ந்த தொழில் கல்வி படிக்கும் மாணவனுக்கு ரூ. 2,000. அதனைச் சார்ந்த தொழில் கல்வி படிக்கும் மாணவிக்கு ரூ. 2,500. இவர்களுள் விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவனுக்கு ரூ. 4,000. விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவிக்கு ரூ. 4,500, தொழிற் கல்வியில் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவருக்கு ரூ. 4,000, தொழிற் கல்வியில் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவிக்கு ரூ. 4,500, விடுதியில் தங்கி தொழிற் கல்வி பட்ட மேற்படிப்பு படிக்கும் மாணவனுக்கு 6 ஆயிரம் ரூபாய், விடுதியில் தங்கி தொழிற் கல்வி பட்ட மேற்படிப்பு படிக்கும் மாணவிக்கு 6,500 ரூபாய், தொழிற் கல்வி நிலையங்கள், I.T.I., Polytechnic போன்றவற்றில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய், அதிலே படிக்கின்ற மாணவிகளுக்கு 1,200/- ரூபாய், இதிலே விடுதியிலே தங்கிப் படிக்கும் மாணவனுக்கு 1,200/– ரூபாய், விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவிக்கு 1,700/– ரூபாய். திருமண உதவித் தொகை ஆண்களுக்கு 3 ஆயிரம் ரூபாய், பெண்களுக்கு 5 ஆயிரம் ரூபாய், உறுப்பினராக உள்ள தாய்மார்களுடைய மகப்பேறு உதவி 2 ஆயிரம் ரூபாய், தாமாகவோ அல்லது மருத்துவரின் ஆலோசனைப்படியோ கருக் கலைப்பு மேற்கொண்டால் மருத்துவச் செலவு 2 ஆயிரம் ரூபாய் இவ்வளவும் பாதுகாப்புக்காக, உழவர்களுடைய பாதுகாப்புக்காக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–20*

இது தவிர, இந்தத் துணை மானிய மதிப்பீட்டில் கல்விக்கு என்று 3 திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு தேசத்தினுடைய முன்னேற்றத்தில் கல்விக்கு பெரும் பங்கு உண்டு. சமுதாயத்தின் வாழ்வுக்கும், தாழ்வுக்கும் காரணமாக அமைந்திருப்பது கல்விதான். இது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று. "கற்காமல் இருப்பதைவிட, பிறக்காமல் இருப்பதே நல்லது. ஏனெனில், அறியாமைதான் துன்பத்தின் மூலவேர்" என்றான் பிளாட்டோ. எனவே, கல்வியைத் தந்து, அதன்மூலம் மனித வளத்தை, மனித ஆற்றலைப் பெருக்கி, இந்த நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டுவர வேண்டுமென்று டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு திட்டமிட்டிருக்கிறார் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக இலவசப் பாடப் புத்தகங்கள்



வழங்கிட 23.52 கோடி ரூபாய், இலவச மற்றும் சலுகை விலையில் பஸ் பாஸ் வழங்குவதற்கு, போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கிட 108 கோடி ரூபாய்; பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச சைக்கிள் வழங்கிட 80 கோடி ரூபாய் இதிலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதை நான் மனமார வரவேற்கின்றேன். அதைப்போல் கிராமப்புறங்களில் சைக்கிளைக் கொடுத்தாகிவிட்டது. நல்ல சாலைகளில் அதை ஓட்டிச் செல்ல வேண்டும் அல்லவா? அதற்குரிய கட்டமைப்பு வசதிகளைப் பெருக்க வேண்டும் என்பதற்காக கிராமப்புறங்களில், மாநகராட்சியில், நகராட்சிப் பகுதிகளில் சாலை வசதிகளை மேம்படுத்துவதற்காக கூடுதலாக 75 கோடி ரூபாய் அனுமதிக்கப்படுகிறது. அதைப்போல் ஊரகப் பகுதிகளில் கூடுதலாக 115 கோடி ரூபாய் இதில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

மக்களின் தேவையை அறிந்து, நிறைவேற்றுகின்ற அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகக் குடும்ப அட்டைகள் கூடுதலாக வழங்கப்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. மக்களிடமிருந்து ஏராளமான கோரிக்கைகள் வருகின்றன. எனவே, அதற்காக குடும்ப அட்டைகள் வழங்குவதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்குவதற்காக 200 கோடி ரூபாய் இதிலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மக்களின் அடிப்படை வசதிகளை உறுதி செய்வதற்கான திட்டத்திற்கு 250 கோடி ரூபாய் இதிலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. காலம் காலமாக கேட்டுவரப்பட்ட கோரிக்கை, சொல்லப்பட்ட கோரிக்கை, கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் வேண்டும் என்றுதான் கேட்டார்கள். ஆனால் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று 1,014 ரூபாய் கரும்புக்கு வழங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இவ்வளவுதான் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறதா? காங்கிரஸ் காரர்கள் எதிர்க்கிறார்களா? எதிர்க்க வேண்டுமென்றால் சொல்ல வேண்டும். அதுதான் நியாயம். அதை விட்டுவிட்டு வெளியிலே இருக்கிறார்கள். அவர்களும் வெளியிலே இருக்கிறார்கள்; அவர்களின் தலைவரும் வெளியில் இருக்கிறார். தினசரி அறிக்கைகளை தந்துகொண்டே இருக்கிறார். அவர் அறிக்கைகளை எப்படித் தருகிறார் என்று நீங்கள் பார்க்க வேண்டும். இந்த அரசு மைய அரசை சரியாகப் பயன்படுத்தவில்லை. டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்படியெல்லாம் மைய அரசிடம் என்னென்ன திட்டங்களையெல்லாம்

எந்தெந்தக் காலக் கட்டங்களில் நாங்கள் கேட்டுப் பெற்றிருக்கிறோம், உரிமைக்கு எப்படி குரல் கொடுத்திருக்கிறோம் என்று விளக்கி இருக்கிறார்.

நான் அன்போடு இங்கே தெரிவிக்க விரும்புவது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி அவர்களைப்போல மத்திய அரசாங்கத்தைப் பயன்படுத்த எங்களுக்குத் தெரியாது. எங்கள் அம்மா அவர்களுக்குத் தெரியாது. இதுதான் அவர்களுக்கு நான் சொல்லுகின்ற பதில். சரி, அவர் எப்படியெல்லாம் பயன்படுத்தினார்? எப்படியெல்லாம் பயன்படுத்தினார் என்பதை தயவுசெய்து நான் விளக்க விரும்புகிறேன். ஒருவர் அமைச்சராக இருந்தால் சுறுசுறுப்பாக இருப்பார், busy-ஆக இருக்கிறார் என்று சொல்லுவார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்கூட படுத்துக்கொண்டே ஜெயிப்பேன் என்றுதான் சொன்னார்களே தவிர, நான் படுத்துக்கொண்டே இருப்பேன் என்று சொல்லவில்லை. படுத்துக்கொண்டே ஓராண்டுகளுக்கு மேல் இருந்த ஒருவர் தொடர்ந்து மத்தியில் அமைச்சராக இருக்க வேண்டும் என்பதற்காக தனக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தியவர்தான் கருணாநிதி என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஓராண்டுக்கு மேல் இலாகாவே இல்லாத அமைச்சராக தன்னுடைய மருமகன் மாறன் அவர்கள் நீடிக்க வேண்டுமென்பதற்காக மத்தியில் ஒரு போலியான உறவை வைத்திருந்தவர்தானே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர். ஓராண்டுக்கு மேல் இலாகாவே இல்லாத அமைச்சராக இருந்தாரா? இல்லையா? இலாகா இல்லாத அமைச்சர்களாக பலபேர் பலகாலங்களில் இருந்திருக்கிறார்கள், நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், அதற்கெல்லாம் தகுந்த காரணங்கள் இருந்தன.

*பிற்பகல் 12-25*

நேரு அவர்கள் பிரதமராக இருந்தார். அவர் அமைச்சரவையில் கோபால்சாமி அய்யங்கார் இலாகா இல்லாத அமைச்சராக நியமிக்கப்பட்டார். என்ன காரணம்? காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, காஷ்மீர் பிரச்சினையைப் பற்றி முழு கவனம் செலுத்தி, அந்தப் பிரச்சினையில் ஆழமான கவனம் செலுத்தி, அதைத் தீர்க்கின்ற முயற்சிகளில் ஈடுபட வேண்டும், ஒரு இலாகாவையும் சேர்த்துக் கொடுத்தால் அதைப் பார்க்க முடியாது என்பதற்காக நேரு அவர்கள் கோபால்சாமி அய்யங்கார் அவர்களை இலாகா இல்லாத அமைச்சராக வைத்திருந்தார்கள். கிருஷ்ணமேனன் அவர்களை நேரு தன்னுடைய





அமைச்சரவையிலே சேர்த்துக்கொண்டார். சேர்த்துக்கொள்கிறபோது, மிகப் பெரிய எதிர்ப்பு வந்தது. கிருஷ்ணமேனன் அவர்களுக்கு எதிர்ப்பு வருகிறது. எனவே, அவர்களுக்கு இலாகா வழங்கவில்லை. கொஞ்சநாள் நிறுத்தி வைத்திருந்தார். இரண்டு மாதங்கள் கழித்து, கிருஷ்ணமேனன் அவர்களைப் பாதுகாப்புத் துறை அமைச்சராக நியமித்தார். அது நேரு அவர்கள் ஆட்சிக் காலத்திலே நடந்தது. நேருவின் ஆட்சியினுடைய இறுதிக் காலத்தில் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் இலாகா இல்லாத அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதற்கு என்ன காரணம்? பிரதமராக இருக்கிற நேரு அவர்களுக்கு உதவ வேண்டும், அவர்களால் அந்தப் பணியைச் சரியாகச் செய்ய முடியவில்லை. எனவே, நேரு அவர்களுக்கு உதவ வேண்டுமென்பதற்காக லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் இலாகா இல்லாத அமைச்சராக நியமிக்கப்பட்டார். இதுதான் இலாகா இல்லாத அமைச்சர்களாக நியமிக்கப்பட்டதினுடைய வரலாறு. அதற்கு ஒரு நோக்கம் இருந்தது. புனிதமான காரணம் இருந்தது. ஆனால், கடந்த காலங்களில் இலாகா இல்லாத அமைச்சராக நம்முடைய மம்தா பானர்ஜி அவர்களும் இருந்திருக்கிறார். அதற்கு அரசியல் காரணம். எனக்கு இந்த இலாகாதான் வேண்டும் என்று கேட்டார், அதைக் கொடுக்க முடியவில்லை, நான் இலாகா இல்லாமல் இருக்கிறேன் என்று வீம்புக்காக இருந்தார். அது வேறு. அதுபோல டி.ஆர்.எஸ்.-னுடைய தலைவர், தெலுங்கானா ராஷ்டிரிய சமிதியினுடைய தலைவர் சந்திரசேகர ராவ், அவரும் இலாகா இல்லாத அமைச்சராக இருந்தார். பாவம், அவருக்குக் கொடுத்த மந்திரி பதவியை, இலாகாவைப் பிடுங்கிக்கொண்டார். அவரைக்கூட பிரதமர் பாராட்டினார், இவரைப்போல் ஒரு தியாகியை நான் பார்த்ததில்லை என்று பிரதமர் பாராட்டினார். இலாகா இல்லாமலேயே அவர் அமைச்சராக இருந்தார். இலாகா இல்லாமல் இவ்வளவு பேர் அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன், மாறன் இலாகா இல்லாத அமைச்சராக இருந்தாரே, என்ன காரணம்? அதற்கு என்ன காரணம் இருக்கிறது, உங்களிடம் என்ன காரணம் இருக்கிறது? சுயநலம் ஒன்றுதான் காரணம். சுயநலம் ஒன்றுதானே காரணம். மாறன் அவர்கள் மரித்தார். மாறன் அவர்கள் மரித்தார். மரபுகளை மீறி பிரதமர் இங்கு வரவில்லையா? மாறன் மரித்துப்போனார். இந்த நாட்டினுடைய பிரதமர் வந்தார், இந்த நாட்டினுடைய துணைப் பிரதமர் வந்தார், இந்த நாட்டினுடைய பாதுகாப்பு அமைச்சர் வந்தார். வந்தார்களா, இல்லையா?

நான் அன்போடு கவனப்படுத்த விரும்புகிறேன்; பேரறிஞர் அண்ணா அவர்கள் மரித்தார்கள். இரண்டு நாட்கள் கழித்துதான் இந்திரா காந்தி

[திரு. அ. அன்வர் ராஜா] [2005 செப்டம்பர் 27

அவர்கள் வந்தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மரித்துப் போனார்கள். இரண்டு நாட்கள் கழித்துதான் ராஜிவ் காந்தி அவர்கள் வந்தார்கள். நான் இதை எதற்காகத் தெரிவிக்க விரும்புகிறேன் என்றால், எவ்வளவு சுயநலத்திற்காக தன்னுடைய அதிகாரத்தை, மத்தியில் இருக்கிற அதிகாரத்தை, மத்திய ஆட்சியை மிரட்டி தி.மு.க. தலைவர் பணிய வைத்திருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குக் கவனப்படுத்த விரும்புகிறேன். இது நடந்ததா? இல்லையா? தன்மீது போடப்பட்ட வழக்கைத் திரும்பப் பெற வேண்டும், டி.ஆர். பாலுவின் மீது போடப்பட்ட வழக்கைத் திரும்பப் பெற வேண்டும், முரசொலி மாறன்மீது போடப்பட்ட வழக்கைத் திரும்பப் பெற வேண்டும். இதற்காக மத்திய அரசாங்கத்தைப் பயன்படுத்தினாரா, இல்லையா? சுயநலத்திற்காகப் பயன்படுத்தினாரா? இல்லையா? அதுமட்டுமல்ல, டி.ஆர். பாலுவினுடைய இலாகாவைப் பயன்படுத்தி தமிழக அரசுக்கு எவ்வளவு தொந்தரவுகளைக் கொடுத்தார்கள்? எவ்வளவு இக்கட்டான சூழ்நிலைகளை உருவாக்கினார்கள்?

கடந்த 2001 ஆம் ஆண்டு தேர்தல், மக்களினுடைய ஏகோபித்த முடிவின்படி, அரசியல் சட்டப்படி நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, அன்றைய கவர்னர் பாத்திமா பீவி அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்கள். அவரே சொன்னார், "நான் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக இருந்தவள், அரசியல் சட்டம் எனக்குத் தெரியும், அரசியல் சட்டத்தின் நுணுக்கங்களை நான் படித்திருக்கிறேன். அதன்படிதான் நான் பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறேன்" என்று சொன்னாரே; அவரை எப்படியாவது கவர்னர் பதவியிலிருந்து நீக்கிவிட வேண்டும், எப்படியாவது விரட்டிவிட வேண்டும் என்பதற்காகத் தன்னுடைய அதிகாரத்தை கருணாநிதி பயன்படுத்தவில்லையா? ஆக, இப்படியெல்லாம் மத்திய அரசைப் பயன்படுத்த டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை அவர்கள் விரும்பவும் மாட்டார்கள். இது எங்களுக்குப் புரியாது என்பதை நான் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்கள் நேற்றையதினம் சொல்லி இருக்கிறார். 'முதல் நாள் முறுக்கினோமாம், மறுநாள் முறுக்கு முறிந்துவிட்டதாம்', ஒரு அறிக்கையிலே சொல்கிறார். பல்கலைக்கழகம் சம்பந்தமான மசோதாவைத் தாக்கல் செய்தோம். அதுதான் முறுக்காம். மறுநாள் முறுக்கு முறிந்து விட்டதாம். பெரிய அறிக்கை. சட்டசபைக்கு அவர் வரவில்லை. வந்தால் பேசி இருப்பார். அதனாலே வெளியே இருந்து



2005 செப்டம்பர் 27] [திரு. அ. அன்வர் ராஜா]

அறிக்கை விடுகிறார். அதற்கு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிக அழகாக, எளிமையாக, எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய அளவில் ஒரே வரியில் பதில் சொல்லியிருக்கிறார். 'மக்களின் விருப்பப்படி நடப்பதுதான் எங்கள் அரசு.' இதைவிட என்ன வேண்டும்? (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிட என்ன விளக்கம் வேண்டும்? (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிட எளிமையாக எப்படிச் சொல்வது? 'மக்களின் விருப்பப்படி நடப்பதுதான் எங்கள் அரசு' என்று டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதற்கு விளக்கம் சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12–30

நான் தெரிவிக்க விரும்புவது, இதே மன்றத்தில் பல்வேறு நேரங்களில், பல்வேறு சட்டங்கள் வந்திருக்கின்றன. அவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. திரும்பவும் பெறப்பட்டிருக்கின்றன. இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மிகப் பெரிய எதிர்ப்பு அதற்கு இருந்தது. அதற்காக அவருடைய பதவியையே அவர் துறக்க வேண்டிய சூழ்நிலை வந்தது. இராஜாஜி அவர்கள் பதவியைத் துறந்தார்கள். முதலமைச்சராக இருந்த இராஜாஜி அவர்கள் இராஜினாமா செய்தார்கள். ஆனால், இராஜாஜி அவர்களுக்குப் பிறகு முதலமைச்சர் பொறுப்பேற்ற பெருந்தலைவர் காமராசர் அவர்கள், குலக் கல்வித் திட்டத்தைத் திரும்பப் பெற்றார்கள். நடந்ததா, இல்லையா? இது வரலாறா, இல்லையா?

அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். மிகப் பெரிய, உயரிய சிந்தனையோடு, பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு என்ற ஓர் இட ஒதுக்கீட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். கம்யூனிஸ்ட்டுகள் எல்லாம் அப்போது அதை ஆதரித்தார்கள். கம்யூனிஸ்ட்டுகள் என்ன திருத்தம் சொன்னார்கள் என்றால், அதற்குப் பொருளாதார உச்சவரம்பு 9 ஆயிரம் ரூபாய் என்றிருப்பதை 12 ஆயிரம் ரூபாய் என்று கூட்ட வேண்டும்; கூட்டினால் போதும், இது அருமையான திட்டம் என்று சொன்னார்கள். ஆனால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்கள் அதற்குப் பிறகு ஆழமாகச் சிந்தித்ததற்குப் பிறகு அதை மறுபடியும் திரும்பப் பெற்றுக் கொண்டார்களா, இல்லையா? திரும்பப் பெற்றுக் கொண்டதோடு மட்டுமல்ல, அவர்கள் அதிலே ஆழமாகச் சிந்தித்திருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக, 50 சதவிகிதமாக பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று உயர்த்தித் தந்தார்களா, இல்லையா?

அதை அதற்குப் பிறகு 69 சதவிகிதம் என்று அரசியல் சட்டத்தில் அதற்கு ஒரு நிரந்தர இடத்தை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றுத் தந்தார்களா, இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) இது நடந்திருக்கிறதா, இல்லையா?

ஆக, ஒரு சில நேரங்களில், ஒரு சில சட்டங்களைக் கொண்டு வருகின்றோம். அவற்றைத் திரும்பப் பெறுகின்றோம். நான் அன்போடு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், உங்கள் ஆட்சிக் காலத்தில் நீங்கள் குடும்ப அட்டை கொண்டு வந்தீர்கள். வண்ண, வண்ண அட்டைகள். நாடு முழுவதும் அந்த அட்டைகளை விநியோகம் செய்தீர்கள். எல்லோரும் வாங்கிக் கொண்டார்கள். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அதை ஏன் திரும்பப் பெற்றீர்கள்? அதற்கு என்ன காரணம்? நீங்கள் திரும்பப் பெறவில்லையா? நீங்கள் திரும்பப் பெற்றதற்கு என்ன காரணம்? இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றனவா, இல்லையா?

நான் இன்னொன்றைத் தெரிவிக்க விரும்புகின்றேன். மாவட்டங்களுக்கு, போக்குவரத்துக் கழகங்களுக்குப் பெயர்களைச் சூட்டுவது என்பது காலம் காலமாகத் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. தலைவர்களை, அவர்கள் செய்த தியாகங்களை நினைத்துப் பார்க்கின்ற வகையில், அப்படிப் பெயர்களைச் சூட்டுவது வழக்கமாக இருந்திருக்கிறது. அப்படி, பெயர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் சூட்டப்பட்டிருக்கின்றன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் சூட்டப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய முந்தைய ஆட்சிக் காலத்திலும் சூட்டப்பட்டிருக்கின்றன. அப்படிச் சூட்டப்பட்ட பெயர்களை எல்லாம் ஒரே நேரத்தில், 1996–ல் ஆட்சிக்கு வந்தவுடன், ஒரே உத்தரவில் நீங்கள் திரும்பப் பெற்றீர்களா, இல்லையா? அதற்கு என்ன காரணம் சொல்லப்பட்டது? ஜாதிக் கலவரம் வருகிறது, மதக் கலவரம் வருகிறது, எதிர்க் கட்சிகள், எல்லாக் கட்சிகளும் சொல்கின்றன, நாங்கள் திரும்பப் பெறுகிறோம் என்றார்கள். சரி, நீங்கள் திரும்பப் பெற்றீர்களே 1996–ல், அதற்குப் பிறகு ஜாதிக் கலவரத்தை உங்கள் ஆட்சியிலே ஒழிக்க முடிந்ததா? ஜாதிக் கலவரம் உங்கள் ஆட்சியிலே நின்றதா? நீங்கள் திரும்பப் பெற்றதற்குப் பிறகுதான் ஜாதிக் கலவரமே அதிகமானது. உங்கள் ஆட்சி 1996–லிருந்து 2001, உங்கள் காலத்தில்தான் ஜாதி, மத, இனக் கலவரங்கள் இந்தத் தமிழ்நாட்டில் மிகக் கடுமையாக இருந்தன. அது காரணமல்ல. அவருடைய பெயர் எதிலும் இடம் பெறாது என்று



அவருக்குத் தெரியும். அதனால், அதைத் தந்திரமாக, மறைத்துவிட்டு, பெயர்களை எல்லாம் நீக்கிவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் நீக்கவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) கருணாநிதி அவர்கள் அதைத் திரும்பப் பெறவில்லையா? எனவே, ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதும், திரும்பப் பெறுவதும் என்பது பஞ்சமா பாதகம் இல்லை என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அவர் சொல்கிறார், நேற்று ஒரு பாட்டை அவர் சொல்கிறார். அந்தச் சட்டத்தை நாம் திரும்பப் பெற்றுக் கொண்டோமாம், withdraw பண்ணிவிட்டோமாம். அவர் என்ன சொல்கிறார் என்றால்,

'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்,
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!'

பாரதிதாசன் பாட்டைச் சொல்கிறார். அதாவது, அவர்கள், அந்தக் கட்சிகள் பூராவும் ஒன்று சேர்ந்துவிட்டார்களாம். ஒன்று சேர்ந்து சபையிலிருந்து வெளியே வந்ததினாலே, நாம் சட்டத்தை withdraw பண்ணிவிட்டோமாம். அவர் சொல்கிறார். எழுதியிருக்கிறார், தினகரனில் வந்திருக்கிறது.

'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்,
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!'

என்று சொல்கிறார். என்ன பகைவர், எங்கோ மறைந்தார்? எல்லோரும் சேர்ந்துதானே வந்தீர்கள், காஞ்சிபுரத்திற்கும், கும்மிடிப்பூண்டிக்கும்! (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் தனித் தனியாக வரவில்லையே! (மேசையைத் தட்டும் ஒலி) என்ன ஆனது உங்கள் கணக்கு? அந்தத் தேர்தல் முடிவதற்கு முன்னால், 14 ஆம் தேதி வாக்குப்பதிவுகள் முடிந்தன. ஓட்டுக்கள் எல்லாம் போட்டாகிவிட்டன. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி அவர்கள் பேட்டி கொடுக்கிறார்.

பிற்பகல் 12–35

'இப்படிப்பட்ட ஓர் அமைதியான, நேர்மையான தேர்தலை நான் என் வாழ்க்கையில் பார்த்ததில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தேர்தல் பார்வையாளரை நான் பாராட்டுகின்றேன். அவர் எவ்வளவு அருமையாக நடவடிக்கை எடுத்திருக்கின்றார், ஒரு சிறு சம்பவம்கூட நடக்காமல் இந்தத் தேர்தலில் வாக்குப் பதிவு முடிந்திருக்கின்றது' என்று அவர் பேட்டி கொடுக்கின்றார்.

வழக்கம்போல வாக்குப் பதிவிற்கு முன்பே லயோலா கல்லூரியில் அந்தப் பையன்களிடம் சொல்லி, கருத்துக் கணிப்பெல்லாம் போடுவார்கள். அதெல்லாம் போட்டாயிற்று. எலக்ஷனுக்கு முன்னாலேயே போட்டு, எல்லாம் செய்து முடித்துவிட்டு, தேர்தலும் வந்தது, தேர்தல் முடிவும் அறிவித்தார்கள். முடிவை அறிவிக்கின்றபோது என்ன சொல்கின்றார்? ஆகா! பணத்தைக் கொடுத்து விலைக்கு வாங்கிவிட்டார்கள் என்கின்றார். பணத்தைக் கொடுத்து விலைக்கு வாங்கிவிட்டோமாம். அதற்கு அடுத்த நாள் கொஞ்சம் அறிவு வேலை செய்தது. அதற்கு அடுத்த நாள் சொல்கின்றார், இதில் எங்களுக்குத் தோல்வியும் இல்லை, அவர்களுக்கு வெற்றியும் இல்லை. இது என்ன? ஒன்றுமே புரியவில்லை என்று நிருபர்கள் கேட்கின்றார்கள். அதற்கு அவர் சொல்கின்றார், அவர்களுடைய இடத்தை அவர்கள் தக்க வைத்துக்கொண்டார்கள். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இடத்தை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தக்க வைத்துக்கொண்டதாம். சரி, நான் ஒப்புக்கொள்கின்றேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களே, நான் ஒப்புக்கொள்கின்றேன். அப்படியானால் என்ன பொருள்? இந்த மன்றத்தில் எங்களுக்கு 141 இடம் இருக்கின்றது. இந்த இடத்தை வருகின்ற தேர்தலிலும் நாங்கள் தக்க வைத்துக்கொள்வோம் என்றுதானே பொருள்? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதை நீங்கள் ஒப்புக்கொள்கின்றீர்கள் என்றுதானே பொருள்? அப்புறம் எதற்கு கூட்டணி கட்சிகளெல்லாம் அந்தப் பக்கம் இருக்கின்றார்கள்? எஸ்.ஆர்.பி. காங்கிரஸ், எல்லாம் அந்தப் பக்கம் இருக்கிறார்கள்?

உண்மை என்னவென்றால், கிட்டத்தட்ட ஆயிரம் கிலோ மீட்டர் பயணம். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆயிரம் கிலோ மீட்டர் பயணம் செய்திருக்கின்றார்கள். ஆறு நாட்கள் சுற்றுப்பயணம் செய்திருக்கின்றார்கள். ஏராளமான கூட்டங்களிலே, மக்கள் மன்றங்களிலே பேசியிருக்கின்றார்கள். ஏராளமான குழந்தைகளுக்குப் பெயர் வைத்திருக்கின்றார்கள். மக்கள் வெள்ளத்திலே மிதந்து வந்திருக்கின்றார்கள். எளிமையாக, மக்களைத் தன்னுடைய பேச்சாற்றலால் கவர்ந்திருக்கின்றார்கள். அதுதான் அந்த வெற்றிக்குக் காரணம். வெற்றி பெற்றதற்குப் பிறகு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த வெற்றியைப் பற்றிக் கூறுகின்றபோது, மூன்றே மூன்று வரிகள்தான் சொன்னார்கள். இந்த வெற்றி, மக்கள் வெற்றி. ஒன்று. இந்த வெற்றி மக்கள் வெற்றி. வாக்காளர்களுக்கு என்னுடைய நன்றி.



இந்த வெற்றி வரப்போகின்ற சட்டப் பேரவைத் தேர்தலுக்கு அச்சாரம். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு இந்த மூன்றைத்தான் சொன்னார்கள். டாக்டர் புரட்சித் தலைவி அம்மா எந்தக் கருத்தையும் நம்முடைய அவர்கள் சொல்லவில்லை.

நான் இங்கு ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகின்றேன். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்காளர் பட்டியலிலே ஏற்பட்ட குளறுபடி காரணமாக ஒரு பின்னடைவு நமக்கு இருந்தது உண்மைதான். ஆனால், நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததற்குப் பிறகு, இந்த இடைத் தேர்தல் நடப்பதற்கு முன்பு, அந்த இடைப்பட்ட காலத்தில், இந்தத் தமிழகத்தில் நடைபெற்ற அத்தனை உள்ளாட்சித் தேர்தல்களிலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்த ஏழு கட்சிக் கூட்டணியையும் குழி தோண்டிப் புதைத்திருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருமங்கலம் நகர மன்றத் தலைவர் தேர்தல், அண்ணா தி.மு.க. வெற்றி. இராமநாதபுரம் நகரசபைத் தலைவர் தேர்தல், அண்ணா தி.மு.க. வெற்றி. இந்த இரண்டு வெற்றிகளுக்குப் பிறகு, கடந்த 19–4–2005-ல் அதாவது, காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி தேர்தல் நடைபெறுவதற்குச் சரியாக ஒரு மாதத்திற்கு முன்பு நடைபெற்ற நாடு தழுவிய உள்ளாட்சித் தேர்தல். தமிழகத்தில் இருக்கின்ற எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்ற உள்ளாட்சித் தேர்தல். அந்த உள்ளாட்சித் தேர்தல் முழுவதிலும் இதே ஏழு கட்சிக் கூட்டணிதான் சேர்ந்து வந்தார்கள். இவர்கள்தான் அனைவரும் சேர்ந்து வந்தார்கள். இவர்களையெல்லாம் நாங்கள் தோற்கடித்திருக்கிறோமா, இல்லையா? சென்னையிலே மூன்று மாநகர மன்றங்களுக்கு நடைபெற்ற தேர்தல். மூன்றிலும் அண்ணா தி.மு.க. வெற்றி. இரண்டு. திருச்சியிலே ஒன்று. நடைபெற்ற தேர்தல். மாநிலம் தழுவிய 4 மாவட்டக் கவுன்சிலர்களுக்கு நடைபெற்ற தேர்தல். நான்கிலும் அண்ணா தி.மு.க. வெற்றி. 24 ஒன்றியக் கவுன்சிலர்களுக்கு தமிழ்நாடு முழுவதிலும் நடைபெற்ற தேர்தல். 24–ல், 13–அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், 7–திராவிட முன்னேற்றக் கழகம், 2–பாட்டாளி மக்கள் கட்சி, 2–சுயேட்சைகள். 20 நகர மன்ற உறுப்பினர்களுக்கு நடைபெற்ற தேர்தல்–10–அண்ணா தி.மு.க., 7–தி.மு.க., 3–சுயேட்சைகள். இரண்டு நகர மன்றத் தலைவர்களுக்கு நடைபெற்ற தேர்தல். மேலூரில் அண்ணா தி.மு.க. வென்றது. கோவை, குறிச்சியில் தி.மு.க. வென்றது. இதுதானே முடிவு? ஆக, அந்த இடைத் தேர்தலுக்கு முன்பு மக்கள் அம்மா அவர்களை ஆதரிக்கத் தயாராகிவிட்டார்கள். இந்த ஏழு கட்சிக் கூட்டணியைத் தோற்கடித்துத் தீருவது என்று மக்கள் முடிவெடுத்துவிட்டார்கள். அந்த

முடிவைத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய சுற்றுப் பயணத்திற்குப் பிறகு இடைத்தேர்தலில் மக்கள் ஊர்ஜிதம் செய்திருக்கிறார்கள் என்பதை நான் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12–40

நான் இன்னொரு கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலுக்காகப் பயந்த கட்சி அல்ல. ஒரு மிகப் பெரிய வரலாறு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. கடந்த தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட்ட இடங்கள் 141. அதிலே இரட்டை இலைச் சின்னத்தில் போட்டியிட்ட இடங்களை மட்டும் எடுத்துக்கொண்டால் 140. சகோதரர் அருள் அவர்களையும் சேர்த்து 141. 141–க்குத்தான் கணக்கு. இதிலே அண்ணா தி.மு.க. இழந்த இடங்கள் என்றால் எட்டு இடங்கள். 8 இடங்களை இழந்து 133 இடங்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்றது. அண்ணா தி.மு.க. போட்டியிட்ட இடங்கள் எத்தனை? 141. இழந்த இடங்கள் 8. வெற்றிபெற்றது 133. இதை அப்படியே மனதில் வைத்துக்கொள்ளுங்கள். இப்போது அண்ணா தி.மு.க.வுக்கு இந்த சட்டசபையிலே இருக்கிற பலம் என்ன? 141. மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை இடங்கள் ஒரு கட்சி – அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட்டதோ அதே இடங்களை, அதே எண்ணிக்கையுள்ள சட்டமன்ற உறுப்பினர்களை இந்தச் சட்டமன்றத்தில் நாம் பெற்றிருக்கிறோம் என்பதே ஒரு மிகப் பெரிய வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி)

இதற்கு முன்னால் இந்தத் தமிழகத்திலே வேறு எந்தக் காலத்திலும் எந்தக் கட்சியும் வைத்திராத record அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டது. எட்டு பேர், சகோதரர் ஆஸ்டின், சகோதரர் டாக்டர் குமாரதாஸ், சகோதரர் ஈஸ்வரன், சகோதரர் ஹக்கீம், சகோதரர் ராதா ரவி, சகோதரர் வடிவேலு, சகோதரர் பூவராகமூர்த்தி, சகோதரர் நீலமேகவர்ணம். இந்த எட்டு இடங்கள் கூடுதலாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்திருக்கின்றன. எனவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஓர் அருமையான இயக்கம். இதைத்தான் நம்முடைய பத்திரிகையாளர் சோ இந்த வாரம் – துக்ளக் வாங்கிவிட்டீர்களா? வாங்கவில்லை என்றால் வாங்கிவிடுங்கள். நான் வாங்கி என்னுடைய பட்டப்படிப்புச் சான்றிதழக்குப் பக்கத்திலே அதை வைத்திருக்கிறேன். போன வாரம்



21 ஆம் தேதியிட்ட துக்ளக் வந்தது--அதிலே அவர் சொல்கிறார். முதலில் துக்ளக் ஆசிரியர் சோ அவர்கள் ஒரு மிகப் பெரிய விமர்சகர் என்பது நம் அனைவருக்கும் தெரியும், அவர் விமர்சிக்காத ஆளே இருக்கிறார்களா? இல்லவே இல்லை. இந்தக் கேள்வியை அவரிடமே கேட்டால் இல்லவே இல்லையென்றுதான் பதில் சொல்வார். அவரை M.P. ஆக்கினார்கள் நம்முடைய வாஜ்பாய் அவர்களும், நம்முடைய அத்வானி அவர்களும். அவர்களையே எதிர்த்து மிகக் கடுமையான கருத்துகளைச் சொன்னவர். Prosecution தரப்பில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுமானால் நம்முடைய அத்வானி அவர்கள் பதவியிலிருந்து விலகியே தீர வேண்டும் என்ற கடுமையான கருத்தைச் சொன்னவர் நம்முடைய துக்ளக் ஆசிரியர் சோ அவர்கள். அவர் சொல்கிறார் – புரட்சித் தலைவி – டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையைப் பற்றிச் சொல்கிறார் – அவர் சொல்கிறார் – ஏற்கெனவே நான் கொடுத்திருக்கிற விமர்சனங்கள் அப்படியே இருக்கின்றன. அது வேறு. ஆனால் உண்மையை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். “தன் தலைமையின்கீழ் வந்த கட்சியைத் தனது கட்டுப்பாட்டில் அவர் வைத்திருப்பதைப்போல, இந்திய அரசியலில் வேறு ஒரு தலைவரையாவது காட்ட முடியுமா? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அப்படிப் பார்க்கிறபோது, இன்று அண்ணா தி.மு.க.வைப்போல கட்டுப்பாடுள்ள கட்சி வேறு எதுவுமே கிடையாது. ஒரு பெரும் கூட்டத்தையே தன்னையே நம்பி ஏற்கும்படி செய்யக்கூடிய தன்மை, அதாவது charisma அவரிடம் இருக்கிறது” என்று டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) Best administrator என்கிற வகையில் இன்னொரு கருத்தை அவர் அடுத்த பாராவில் சொல்கிறார். சோ அவர்கள் சொல்கிறார்கள், “மழைநீர் சேகரிப்பில் தமிழகம் கண்ட வெற்றி தேசத்திற்கே உதாரணமாக அமைந்தது”. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு அவர் காரணத்தைச் சொல்கிறார். இவர் தீவிர நடவடிக்கை எடுத்துவிடுவார் என்ற எண்ணத்தின் காரணமாக எல்லோருமே அரசு உத்தரவை ஏற்று மழைநீர் சேகரிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டனர். இது ஒரு நிர்வாக வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) நிர்வாகத்திலே எவ்வளவு பெரிய வெற்றி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு சோ சொல்கிறார்.

அடுத்து, சட்டப் பேரவையைப் பற்றி சொல்கிறார். இரண்டே வரிகளில் சொல்கிறார். “சட்டப் பேரவையில் பல சமயங்களில் முதல்வர் அடுக்குகின்ற விவாதங்களும் அவருடைய குறுக்கீடுகளிலுள்ள

[திரு. அ. அன்வர் ராஜா] [2005 செப்டம்பர் 27

விவரங்களும் அனுபவம் வாய்ந்த தி.மு.க. உறுப்பினர்களைத் திக்குமுக்காட வைக்கின்றன." (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கருத்தைச் சொல்லிவிட்டு, இதில் அடுத்து ஒரு மிக முக்கியமான கருத்தைச் சொல்கிறார்.

*பிற்பகல் 12–45*

அம்மா அவர்களுடைய இயல்புகளை மிகத் தெளிவாகச் சொல்கிறார். அம்மா அவர்கள் டெல்லியிலே கலந்துகொள்கின்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டங்களாக இருந்தாலும் சரி, வேறு இந்த தேசத்தின்மீது அக்கறை கொண்டவர்கள் அனைவரும் கூடி இருக்கின்ற கூட்டமாக இருந்தாலும் சரி அவருடைய குரல் தனியாகவே தெரிகின்றது என்று அவர், சோ சொல்கிறார்.

உத்தராஞ்சல், இமாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்குத் தனியான வரிச் சலுகையை மத்திய அரசு அறிவிக்க முன்வந்தபோது சிங்கம் போல் எழுந்து கர்ஜித்து இது அனைத்து மாநிலங்களையும் பாதிக்கும், முதலீட்டாளர்கள் எங்கள் மாநிலங்களுக்கு வர மறுப்பார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஒத்துக்கொள்ள முடியாது என்று அம்மா அவர்கள் எதிர்த்து கருத்துச் சொன்னதோடு மட்டுமல்ல, அப்படி நீங்கள் சலுகை வழங்க வேண்டுமானால் சுனாமியால் பாதிக்கப்பட்ட எங்களுக்கும் தர வேண்டும் என்று எல்லோருக்கும் கேட்டுவிட்டு நம்முடைய மாநிலத்தின் உரிமையையும் அவர்கள் கேட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல நாடு முழுவதும் நதிகளை இணைக்க வேண்டும், தென் மாநில நதிகளை இணைக்க வேண்டும். நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைக்கு இது ஒன்றுதான் தீர்வு என்று ஆணித்தரமாக அம்மா அவர்கள் டெல்லியிலே பேசி இருக்கிறார்கள் என்பதை எல்லாம் கருத்தில் கொண்டு அவர் தன்னுடைய மதிப்பீட்டைச் சொல்கிறார். தேசிய அளவில் எடுத்துக் கொண்டால் தேசிய ஒருமைப்பாட்டு அமைப்பின் கூட்டங்களிலும், வேறு தேசிய அமைப்பின் கூட்டங்களிலும் நமது முதல்வருக்கும் அவரது கருத்துக்கும் கிடைக்கின்ற வரவேற்பு அவர் அரசியலிலும், நிர்வாகத்திலும் பெற்றுள்ள தேர்ச்சிக்கு அத்தாட்சியாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற கூட்டங்களில் முதல்வர் அவர்கள் வைக்கும் கோரிக்கைகளும், வாதங்களும், யோசனைகளும் தமிழக நலனை மட்டும் கருத்தில் கொண்டவையாக இருந்துவிடுவதில்லை. மற்ற மாநிலங்கள், தேசம்



2005 செப்டம்பர் 27] [திரு. அ. அன்வர் ராஜா]

என்று பார்வையைச் செலுத்தித் தன் கருத்துகளைத் தெரிவிக்கிறார். தேசிய நோக்கம் கொண்ட மாநிலக் கட்சியாக தனது கட்சியை அவர் நடத்திச் செல்வது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு, அந்த 'நினைத்தேன் எழுதுகிறேன்' என்ற பகுதியில் என்னை மிகவும் கவர்ந்த இடம் இப்போது நான் சொல்லப் போகின்ற இடம்தான். அவர் ஒரு மதிப்பீட்டைச் சொல்கிறார். ஒரே நேரத்தில் மத்திய, மாநில அரசுகள் தனக்கு விரோதமாக அமைந்துவிட்டபோது எந்தப் பதவியும் இல்லாமல் அம்மா அவர்கள் சந்தித்த வழக்குகள் பல. அந்த வழக்குகளைச் சந்தித்த அதேநேரத்திலேயே தன்னை எதிர்த்த பத்திரிகைகள், தன்னிடம் பெரும் பகை பாராட்டிய தலைவர்கள், நிரந்தரமாகத் தன்னை முடக்கிவிட நினைத்த மாநில அரசு, அதற்கு எல்லா உதவிகளையும் செய்ய முனைந்த மத்திய அரசு என்று நாற்றிசைப் போரையும் சந்தித்து, அதற்கு இடையில் தன் அரசியல் பிரசாரத்தையும் நடத்தி மக்களிடையே இழந்த செல்வாக்கை மீண்டும் பெற்று ஆட்சியையும் அமைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சியையும் அமைத்தார் என்று சொல்லிவிட்டு அதற்கு அடுத்து இரண்டு word சொல்கிறார். 'அசாத்திய நெஞ்சுரம். அசாத்திய நெஞ்சுரம்' என்று. (மேசையைத் தட்டும் ஒலி) கடைசியாக முடிக்கிறார். 'நெஞ்சுரம் மன உறுதி, தன்னம்பிக்கை, சலியாத உழைப்பு ஆகியவை பொது வாழ்வில் ஒருவரை குறிப்பிடத்தக்க உயர்வுக்கு இட்டுச் செல்லும் என்பதற்கு முதல்வர் அவர்களின் அரசியல் பயணம் (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வர் அவர்களின் அரசியல் பயணம் ஒரு உதாரணம்' என்று அவர் சொல்லி முடிக்கிறார். இதைவிட என்ன வேண்டும்?

ஒரு நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள், நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல, தன்னுடைய குடும்பம் தன்னுடைய மருமகன் அவர்கள் பதவியிலே இருக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே மத்திய அரசை ஒரு தலைவர் பயன்படுத்திக் கொண்டிருக்கிற இந்த நாட்டில், இந்தப் பூமியில் எல்லாவற்றையும் துறந்து அவ்வளவையும் இழந்து நிற்கின்ற நிலையிலேகூட அதை எதிர்த்து நின்று மிகப் பெரிய வெற்றியை ஈட்ட முடியும் என்பதற்கு மிகச் சரியான உதாரணமாக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைவிட என்ன பெருமை நமக்கு வேண்டும்?

'தமக்கென முயலா நோன்றார் பிறருக்கென முயலுனர் உண்மையானே' என்று ஒரு பாடலினுடைய கடைசி வரிகள் இருக்கின்றன. கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி என்ற ஒரு மன்னன்,

நல்ல கவிஞன். அவன் எழுதிய பாடல். ஆக பிறருக்காக வாழ்கின்ற, பிறருக்காகவே தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நாள் ஒன்றுக்கு 18 மணி நேரம் உழைக்கிறார்கள். இந்தத் தேசத்திற்காக, நாட்டிற்காக, ஏழைகளுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12–50

அதோடு மீனவர்களுக்காக, நம்முடைய அரசு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகப்பெரிய நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் மிக அதிகமான மீனவர்கள் வாழ்கிற பகுதி இராமநாதபுரம் மாவட்டம்தான். கடலோர மாவட்டங்கள். அந்தப் பகுதியிலிருந்து வருகின்ற சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு ஒரு சிலவற்றை எடுத்து வைக்க விரும்புகிறேன். மீனவர்களுக்கு டீசல் மானியம் வழங்கியது ஒரு மிகப்பெரிய வரவேற்பை மீனவர்கள் மத்தியிலே ஏற்படுத்தியிருக்கிறது. டீசல் மானியம் வழங்கப்படாவிட்டால் இந்த மீனவர்களெல்லாம் அந்தத் தொழிலைத் துறந்திருப்பார்கள். ஆனால், இப்பொழுது வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஒரு மிகப்பெரிய நன்றிக் கடன்பட்டவர்களாக அந்த மீனவர்களெல்லாம் இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடு இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்குமிடையே பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்ததற்குப் பிறகு, மிகப்பெரிய துன்பத்திற்கு நம்முடைய இராமேஸ்வரம் மீனவர்கள் ஆளாகியிருக்கிறார்கள். இதற்கு என்ன தீர்வு என்றால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். அதுதான் தீர்வு. அதை நம்முடைய மீனவர்கள் மிகவும் எதிர்பார்க்கிறார்கள். எப்படி 'தீன்பிகா' கடல் பகுதியில் மீன் பிடிக்கின்ற உரிமையை வங்காள தேசத்திற்கு நீண்ட நாள் குத்தகைக்கு இந்தியா வழங்கியிருக்கிறதோ, எப்படி 'வாஜ்பேங்' பகுதியில் மீன் பிடிக்கிற உரிமையை இலங்கைக்கு நீண்ட காலக் குத்தகைக்கு இந்தியா வழங்கியிருக்கிறதோ, அதைப்போல கச்சத் தீவைத் திரும்பப் பெறமுடியாவிட்டால்கூட, அதில் மீன் பிடிக்கின்ற உரிமையையாவது நீண்ட காலக் குத்தகைக்கு மத்திய அரசாங்கம் கேட்டு, பெற்றுத் தரவேண்டும் என்பது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியிருப்பது மிக அருமையான யோசனை. இந்த யோசனை மிகச் சரியானது என்று



மீனவப் பெருமக்களெல்லாம் மிகவும் நம்பிக்கையோடு இருக்கிறார்கள். ஆனால், அங்கு என்ன நடக்கிறது என்றால், நான் கவனப்படுத்த விரும்புவது, இராமேஸ்வரம் கடல் பகுதியும் ஓர் எல்லைதான். இலங்கை ஒரு தனி நாடு. இந்தியா ஒரு தனி நாடு. இந்த நாட்டினுடைய கடைசி எல்லை இராமேஸ்வரம் பகுதி. சீனாவிலே, எல்லையிலே சீனாகாரன் சுட்டால், நம்முடைய இராணுவம் திருப்பிச் சுடுகிறது. பாகிஸ்தான் எல்லையிலே, பாகிஸ்தான்காரன் சுட்டால், நம்முடைய இராணுவம் திருப்பிச் சுடுகிறது. ஆனால், இராமேஸ்வரத்தில், இலங்கை இராணுவம் சுட்டால் நம்முடைய கடலோரக் காவல் படை கையைக் கட்டி வேடிக்கை பார்க்கிறது. இது என்ன பொருள்? இது என்ன அர்த்தம்?

நாம் அவர்களிடம் கேட்டால், அவர்கள் சொல்கிறார்கள், நாங்கள் ஒப்பந்தம் போட்டுவிட்டோம். கச்சத் தீவை ஒப்பந்தம் போட்டு இலங்கைக்கு வழங்கிவிட்டோம். இதற்கு யார் காரணம்? திராவிட முன்னேற்றக் கழகம் தானே காரணம். தி.மு.க. தலைவர் கருணாநிதிதானே காரணம். நான் அன்போடு கவனப்படுத்த விரும்புகிறேன். ஒப்பந்தம் போட்டுவிட்டோம் என்பது உண்மைதான், ஒப்புக்கொள்கிறேன். எந்த ஒப்பந்தத்தை இந்தியா அல்லது இந்தியாவோடு ஒப்பந்தம் செய்துகொண்ட நாடுகள் முழுமையாகக் கடைப்பிடித்திருக்கின்றன, சொல்லுங்கள் பார்க்கலாம். சீனாவிற்கும் இந்தியாவிற்கும் ஒப்பந்தம், நேரு காலத்திலே போடப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் condition வைக்கப்பட்டது. என்ன condition வைக்கப்பட்டது? திபெத்தை ஒரு தனி நாடு என்று ஏற்றுக்கொள்ளக்கூடாது. தலாய்லாமாவிற்கு அடைக்கலம் கொடுக்கக்கூடாது என்பது அந்த condition. அந்த condition–ஐ இந்தியா கடைப்பிடித்ததா அல்லது சீனா கடைப்பிடித்ததா? தலாய்லாமா இங்குதானே வந்தார். அவருக்கு இந்தியாதானே அடைக்கலம் கொடுத்தது. தலாய்லாமாவிற்கு மட்டுமல்ல, அவருடைய வாரிசான கர்பமாலாமா அவரும்கூட இந்தியாவிற்குத்தான் வந்தார், பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள் பிரதமராக இருந்தபோது உயிருக்கு பயந்து ஓடி வந்தார். அவருக்கு அடைக்கலம் கொடுத்தோம். அந்த ஒப்பந்தத்தை நாம் கடைப்பிடித்தோமா? சிம்லா ஒப்பந்தம், இந்திரா காந்தியும், Zulfikar Ali Bhutto-வும் செய்துகொண்ட ஒப்பந்தம். அந்த ஒப்பந்தம்கூட கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறதா, இல்லையே. அந்த ஒப்பந்தம் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் இன்றைக்கு இந்த நிலைமை, இந்தக் காஷ்மீர் பிரச்சினை வந்திருக்குமா, வந்திருக்காதே. சரி. அதையெல்லாம் விட்டு விடுங்கள். இந்த ஒப்பந்தத்தை 1974–லே, கச்சத் தீவு ஒப்பந்தத்தைப்

பற்றிச் சொல்லுகிறார்களே, நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், 1987 ஆம் ஆண்டு ராஜிவ் காந்தி அவர்களும், ஜெயவர்த்தனா அவர்களும் செய்துகொண்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் என்ன ஆனது? அந்த ஒப்பந்தத்தை ஏன் தூக்கிக் கீழே போட்டு விட்டார்கள்? அந்த ஒப்பந்தப்படி பார்த்தால் வரதராஜ பெருமாள்தான் தமிழ் province-சினுடைய தலைவராக இருக்க வேண்டும். ஆனால், வரதராஜ பெருமாளே உயிருக்கு பயந்துகொண்டு ஓரிசாவிலே ஒளிந்துகொண்டிருக்கிறார். அந்த ஒப்பந்தம் என்ன ஆனது? ஆக, எந்த ஒப்பந்தமும், ஒப்பந்தம் இருக்கிறது என்று சொல்வதெல்லாம் சரியானதல்ல. சரியான முறையல்ல. அங்கே நாடாளுமன்றத்திலே பேசவேண்டியது, அதை ஏன் இங்கு பேசிக்கொண்டிருக்கிறாய் என்று பலபேர் இங்கு கேட்கலாம். நான் அன்போடு கவனப்படுத்த விரும்புகிறேன். அந்த நாடாளுமன்றத்திற்குத் தலைமை தாங்குகின்ற நாள், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குப் பக்கத்திலே வரப்போகிறது. எனவே, அதைக் கவனப்படுத்த விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அன்வர் ராஜா அவர்கள் பேசுகிறபோது, இங்கே எந்த ஒப்பந்தம் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது? ஆகவே, இந்த ஒப்பந்தங்கள் எல்லாம் கொஞ்சம்கூட மரியாதைத் தரப்பட....

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார். திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துணை நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுதந்திர தினத்தன்று அறிவித்த அறிவிப்பின் அடிப்படையில் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற அறிவிப்பைச் செய்தார்கள். இந்த அறிவிப்பின் மூலமாகத் தமிழகத்திலேயிருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு சலுகைத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பிற்கு இந்திய கம்யூனிஸ்ட்



கட்சியின் சார்பிலே எங்களது மனமார்ந்த பாராட்டுகளையும், வரவேற்பையும் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம் இந்தக் கோரிக்கை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் வைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களது தலைவர் மாண்புமிகு பழனிசாமி அவர்கள் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, இதுகுறித்துப் பல ஆண்டுகளாக இந்தச் செய்திகள் பேசப்பட்டு வந்திருக்கிற நிலைமைகளிலே இது வெளியிடப்பட்டிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்று, பாராட்டக்கூடிய ஒன்று. இந்த உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக விவசாயத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு நலன்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அறிவிப்புகளைப் பெறுவதற்கான முயற்சிகளை எடுக்கிறபோது அவர்கள் உறுப்பினராகச் சேருவதற்குரிய தகுதி அந்த உறுப்பினர் சேருவதற்கான வாய்ப்பு என்ற அடிப்படையிலே அதற்குரிய கட்டணம் என்ற முறையிலே 10 ரூபாயை அரசே செலுத்தும் என்று சொல்லியிருப்பது அதைவிட சிறப்புக்குரியது, பாராட்டுக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில் இந்த உறுப்பினர்கள் சேருகின்ற முறைகளைப் பற்றிச் சொல்கின்றபோது அதைச் செயல்படுத்துவதற்காக வருவாய்த் துறை ஆணையர் அவர்களுடைய தலைமையிலே நிர்வாக அதிகாரிகள் செயல்படுத்தப்படுவார்கள், அதேபோல மாவட்ட ஆட்சியரும், வட்டாட்சியரும் அதைச் செயல்படுத்துவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நிர்வாக ரீதியாகச் செயல்படுத்துவதிலே எங்களுக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்துமில்லை. ஆனால், இப்படிப்பட்ட ஒரு மாபெரும் திட்டத்தை அறிவிக்கிறபோது இதற்குரிய முயற்சியை எடுத்து, காரியங்களைச் செய்கிறபோது அதற்குரிய ஒரு வாரியம் அமைத்து அதைச் செயல்படுத்த வேண்டுமென்பது எங்களுடைய பணிவான கோரிக்கை.

விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியம் ஏற்கெனவே அமைக்கப்பட்டு அதிலே உறுப்பினர்களாக கிட்டத்தட்ட 7 கோடியே 32 இலட்சம் பேர் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) 7 இலட்சத்து 32 ஆயிரம் பேர். 7 கோடியே 32 இலட்சம் ரூபாய் பணம் இருக்கிறது. பணம் செலுத்தப்பட்டிருக்கிறது. 100 ரூபாய் வீதம் 7 கோடியே 32 இலட்சம் ரூபாய் நமது அரசிடத்திலே இருக்கிறது. ஆகவே, இந்த நல வாரியம் என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டு உறுப்பினர்களாகச் சேர்ந்ததற்குப் பின்னால் அதன்மூலமாகச் செயல்படுத்துவதிலே என்ன பிரச்சினையிருக்கிறது என்பது என்னுடைய கேள்வி. பொதுவாக

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு என்று நல வாரியத்தை நம்முடைய அரசு மிகச் சிறப்பாகச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. அதன்மூலம் பலன் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதுதான் ஓர் உத்தரவாதப்படுத்துவதற்குரிய முயற்சியாக இருக்கும். இல்லையென்று சொன்னால், இங்கே நம்முடைய உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, திட்டங்களை மாற்றுகிறார்கள். தேவைப்பட்டால் வேறுவிதமாகச் செயல்படுத்துகிறார்கள் என்று ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்துகிற நிலைகள் இருக்கின்றன. எனக்கும் அந்த அச்சம் இருக்கிறது. ஆகவே, ஒரு திட்டம் ஓர் ஆட்சியிலே வருகிறபோது அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சி எடுக்கப்படுகிறபோது அந்தத் திட்டம் என்பது அந்த ஆட்சியின் முடிவு காலத்திலே வேறுவிதமாக மாறுகிறது. ஆகவேதான், இந்த அறிவிப்பு என்பது ஒரு நல வாரியம் என்ற முறையிலே இருக்குமானால் அதைத் தொடர்வதற்கான வாய்ப்புகளும், ஓர் உத்தரவாதமும் இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்ற என்னுடைய பணிவான வேண்டுகோளையும் அவர்கள் முன்னாலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, விவசாயிகளைப் பொறுத்தவரையிலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலே இந்த அவையிலே பல்வேறு கருத்துகளை முன்வைத்திருக்கிறேன். அதிலே குறிப்பாக, எங்களுடைய வேண்டுகோள் என்பது விவசாயிகள் பட்டிருக்கிற கடன் சுமைகளிலிருந்து அவர்களை மீளச் செய்வதற்குரிய முயற்சி எடுக்க வேண்டுமென்ற எங்களுடைய வேண்டுகோள் நீண்ட காலமாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வேண்டுகோளோடு இணைந்த முறையில் அந்த விவசாயிகள் பட்டிருக்கிற கடனுக்கு வட்டியும், அபராத வட்டியும் என்பதுதான் மிகப் பெரிய சுமையாக இருக்கிறது. அதை நீக்குவதற்குரிய முயற்சி எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வைக்கப்பட்டது. அந்த வேண்டுகோளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு வட்டித் தள்ளுபடி செய்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இது விவசாயிகளுக்குப் பெரிய சுமையைக் குறைப்பதற்குரிய ஒரு நல்ல நடவடிக்கைதான். ஆகவே, இதை நாங்கள் வரவேற்கிறோம். அதேபோல, இந்த அசல் என்பதை எப்படிச் செலுத்துவது என்ற முயற்சிகள் பற்றிச்



சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த வட்டி எப்படி ஈடுகட்டப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு நிலைமைகளிலேயும், திரும்பவும் வட்டி, சுமையாக மாறிவிடாமல், இந்த விவசாயிகளை எப்படிப் பாதுகாக்கலாம் என்று, அரசு யோசிக்கவேண்டுமென்று நான் அன்போடு, பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இந்த வட்டித் தள்ளுபடி மூலமாக விவசாயிகளுக்கு ஒரு பெரிய சுமை குறைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் 4 ஆண்டுகால வறட்சி நிலைமைகளில் இருந்து மீண்டு, இந்த ஆண்டு உற்பத்தி செய்வதற்குரிய முயற்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிற விவசாயிக்கு, காலத்தில் கடன் கிடைப்பதற்குரிய வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. தயவுசெய்து இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதற்காக தஞ்சை...

பிற்பகல் 1-00

*** மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வட்டியைத் தள்ளுபடி செய்ததை பாராட்டியதோடு மட்டுமல்லாமல், அசல் தொகையைப் பரிசீலனை செய்யவேண்டுமென்ற வேண்டுகோளோடு இங்கே பேசிக்கொண்டு இருக்கின்றார். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு சுட்டிக்காட்டுவதெல்லாம், மைய அரசிற்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கின்ற நீங்கள், மைய அரசிலே அசலைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற கோரிக்கையை வைப்பதற்கு நீங்கள் தயாராக இருக்கின்றீர்களா என்று அறிய விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களினுடைய ஆணையின்படி, இந்த ஆண்டு கும்பகோணம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலமாக, 47 கோடி ரூபாய் பயிர்க் கடனை வழங்குவதற்கான உத்தரவை அம்மா அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். அதன்படி, இதுவரை 9,36,19,000 ரூபாய், 3,906 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது என்ற நல்ல செய்தியையும் சொல்லி, தஞ்சாவூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு பயிர்க் கடன் வழங்குவதற்காக, மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்கள், 20 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்குவதற்கான ஆணையிட்டிருக்கிறார்கள். இதுவரையிலே, 106 விவசாயிகள்

42,05,000 ரூபாய் கடனைப் பெற்று இருக்கிறார்கள் என்ற நல்ல தகவலைச் சொல்லி, சென்ற ஆண்டு 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு யாரெல்லாம் பயிர்க்கடனை வாங்கி, தவணை தவறாமல் திருப்பிச் செலுத்தி இருக்கிறார்களோ, அவர்கள் அனைவருக்கும் இந்த ஆண்டு மீண்டும் பயிர்க் கடன் வழங்க வேண்டுமென்கின்ற உத்தரவை, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தெளிவாக இட்டிருக்கிறார்கள் என்ற நல்ல மகிழ்வான செய்தியையும் சொல்லி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் கேட்பது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தஞ்சைக்கு வருகை தந்தபோது அறிவிப்பு செய்தார்கள். அதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. நான் அதை வரவேற்கிறேன். கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு 50 கோடி ரூபாயும், தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு 25 கோடி ரூபாயும், இந்த கடன் வழங்குவதற்கான உதவித் தொகையை அங்கே அறிவித்தார்கள். ஆனால், அது நடைமுறை ரீதியாக, நான் இப்போது பேசிக்கொண்டிருக்கிற இந்தக் காலம் வரையிலும், விவசாயிகளுக்குச் சென்று அடைவதிலே பிரச்சினை இருக்கிறது. இது ஒரு குற்றச்சாட்டோ, குறைபாடோ அல்ல. நடைமுறையிலே இருக்கிற பிரச்சினை இது. ஆகவே, இந்த உண்மையைக் கண்டறிவதற்குரிய முயற்சி எடுக்கப்படவேண்டும். தண்ணீர் வந்து, சாகுபடிப் பணிகள் தொடங்குவதற்குரிய முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறபோது, கையிலே காசு இல்லாமல் விவசாயிகள் அந்தப் பணியைச் செய்ய முடியாத ஓர் இக்கட்டான நிலைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அறிவிக்கப்படுவது என்பதை, நடைமுறைப்படுத்துவதிலே இருக்கிற சிக்கல்களை, விரைவாகத் தீர்ப்பதற்குரிய முயற்சி எடுக்கவேண்டும். இங்கே சொல்லப்படுகிற திட்டத்திற்கும், அங்கே நடைமுறைப்படுத்தி கீழே வந்து செயல்படுத்துவதற்குரிய முயற்சி எடுக்கிறபோது நிரம்ப வித்தியாசங்கள் வருகின்றன. பல்வேறு தடைகளும், காரணங்களும் சொல்லப்படுகின்றன. ஆகவே, விவசாயிகளுக்கு அதிலே பல்வேறு பிரச்சினைகளும், சிரமங்களும் உண்டாகின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதற்குரிய தொகையை ஒதுக்கிக் கொடுத்து



இருக்கிறார்கள். இதுவரை கும்பகோணம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து 3,906 விவசாயிகள் 9,36,19,000 ரூபாய் பயிர்க் கடன் பெற்று இருக்கிறார்கள். அதேபோல தஞ்சாவூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலே இருந்து இதுவரை 42 இலட்சம் ரூபாய் அளவுக்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 2004 மார்ச் 31-க்குப் பிறகு – சென்ற ஆண்டு பயிர்க் கடன் பெற்று, அந்த பயிர்க் கடனை முறையாகத் திருப்பிச் செலுத்திய அனைத்து விவசாயிகளுக்கும், கண்டிப்பாக இந்த ஆண்டும் பயிர்க் கடன் வழங்குவதற்கான ஆணை வழங்கப்பட்டு, அதற்கான பணிகள் துரிதமாக கடந்த 10 நாட்களாக நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன என்ற நல்ல செய்தியைச் சொல்லி அமர்கின்றேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே, இந்த விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் சொல்வது, அமைச்சர் அவர்களுடைய பதிலிலேயே சொல்லப்படுகிறது. தஞ்சை கூட்டுறவு வங்கிக்கு 25 கோடி ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கினார்கள். ஆனால் நீங்கள் இதுவரையில் வினியோகம் செய்து இருப்பதாக நீங்களே ஒப்புக்கொண்டு அறிவிப்பது வெறும் 42 இலட்சம் ரூபாய். அறிவிக்கப்பட்டது ரூ.35 கோடி. (குறுக்கீடு)

பிற்பகல் 1–05

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் நாற்றுப் பருவத்திலே பயிர்கள் இருக்கின்றன. நடவுப் பருவம் வரும்போது விவசாயிகள் அதற்குரிய விண்ணப்பங்களைச் செய்து தேவையான நேரத்திலே கடனைப் பெற்றுக்கொள்வார்கள். ஆக, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்த தொகையை கண்டிப்பாக தஞ்சை மாவட்ட விவசாயிகள் பெறுவார்கள் என்ற உறுதியை இந்த அவையிலே சொல்லி அமைகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவதைப் பார்த்தால் விவசாயிகளே இன்னும் கடன் வாங்க முன்வரவில்லை என்று சொல்வதாகத்தான் இது அர்த்தம்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் இப்போதுதான் நாற்றாங்கால்

நிலையிலே இருக்கிறார்கள். நடவுப் பருவம் வருகிறபோது, அதைக் கண்டிப்பாக பெற்றுக்கொள்வார்கள் என்றுதான் நான் சொல்லி அமர்ந்திருக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தண்ணீர் வந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. மனுக்கள் செய்யப்பட்டு ஒரு மாதம் கடந்துவிட்டது.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** 2004 மார்ச் மாதத்திற்குப் பிறகு வழங்கப்பட்ட கடன்களை திரும்பச் செலுத்தி இதுவரை மனு கொடுத்திருக்கிற விவசாயிகள் அனைவருடைய மனுக்களும் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்குக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது என்கிற செய்தியை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதுவரை பயிர்க் கடன் கொடுப்பதிலே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எவ்வகையான குற்றச்சாட்டும், புகாரும் வரவில்லை என்கின்ற செய்தியையும் இங்கே சபையில் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** சரி. விவசாயிகளுக்கு விரைவாகக் கடன் கிடைத்தால் நல்லது. அதேபோல, நம்முடைய கூட்டுறவுத் துறை நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலும் பொதுவாக பல்வேறு பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. குறிப்பாக கூட்டுறவுத் துறை நட்டத்திலே செயல்படுகிறது. வேறு ஒரு முறையில் பார்க்கிறபோது, நிர்வாகச் சீர்கேடு அடைந்திருக்கிறது. இன்னொரு முறையிலே பேச்சு அடிபடுவது, அரசியல் தலையீடு இருக்கிறது. ஆக, எல்லாவற்றுக்கும் மேலாக தேர்தல் நடத்தாமலேயே நீடித்துக்கொண்டே இருப்பது என்பது அந்த நிர்வாக முறைகளை எப்படிச் சரி செய்ய முடியும்?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தவில்லை என்பதைத் தொடர்ந்து ஒரு குற்றச்சாட்டாகவே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறிக்கொண்டே இருக்கிறார்கள். இதற்கு விளக்கம் கூறுவது அவசியம் என்பதால் இப்போது நான் கூற விரும்புகிறேன்.

பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக்களின் பதவிக் காலம் 25–5–2001 அன்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, மத்திய மற்றும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக குழுக்களின் பதவிக் காலம் 26–5–2001 அன்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு தனி அலுவலர்கள் நிர்வாகப் பொறுப்பில் அமர்த்தப்பட்டார்கள். இவ்வாறு கூட்டுறவுச் சங்கங்களின், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்



பிரிவு 33 உட்பிரிவு 12–ன்கீழ் நியமிக்கப்பட்ட ஆட்சியர்கள் மற்றும் பிரிவு 88 மற்றும் 89-ன்கீழ் நியமிக்கப்பட்ட தனி அலுவலர்கள் ஆகியோருக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்க்க அதிகாரம் வழங்கும் பொருட்டு 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் (திருத்தம்) அவசரச் சட்டம் 2001 (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2001)–ஐ 12–6–2001 அன்று அரசு வெளியிட்டது. மேற்படி புதிய பிரிவு 89(A)–ஐ எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் சில நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மேற்படி நீதிப்பேராணை மனுக்களின் மீதான இறுதி முடிவுக்கு உட்பட்டு தனி அலுவலர்கள் மற்றும் ஆட்சியாளர்களால் புதிதாகச் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களுக்கு கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் வாக்களிக்கவோ, போட்டியிடவோ உரிமை இல்லை என சென்னை உயர் நீதிமன்றம் ஓர் இடைக்கால ஆணை வழங்கியுள்ளது. மேற்படி நீதிப்பேராணை மனுக்களை விசாரித்த நீதிபதி அவற்றை இரு நீதிபதிகளுக்குமேல் அடங்கிய Larger Bench விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று 9–4–2002 அன்று ஆணை பிறப்பித்துள்ளார். அதன்படி 3 நீதிபதிகளைக் கொண்ட ஒரு Larger Bench முன்பு மேற்படி நீதிப்பேராணை மனுக்கள் பரிசீலனையில் உள்ளன. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 26 உட்பிரிவு (1)(c)-ன்படி அச்சட்டம் மற்றும் விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள வழிவகைகளைத் தவிர்த்து எந்த ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் எந்த ஒரு உறுப்பினரையும் அச்சங்க நிர்வாகக் குழுத் தேர்தலில் வாக்களிப்பதிலிருந்து தடுக்க இயலாது. ஆனால், சென்னை உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள இடைக்கால ஆணைப்படி ஆட்சியாளர்களாலும், தனி அலுவலர்களாலும் புதிதாகச் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழுத் தேர்தலில் போட்டியிடவோ, வாக்களிக்கவோ இயலாது. எனவே, சென்னை உயர் நீதிமன்ற Larger Bench-ன் முடிவினை அறிந்த பின்பே கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்த அரசு உத்தேசித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் 2, 3 மணித் துளிகளிலே உரையை முடியுங்கள். அடுத்து திரு. ஜே. ஹேமச்சந்திரன் பேசவேண்டும், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேச வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக நம்முடைய மாநிலத்திலே கூட்டுறவுத் தேர்தல்களை விரைவாக

நடத்துவதற்கான முயற்சிகளை எல்லா வகைகளிலும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. அதன் மூலமாகத்தான் நம்முடைய நிர்வாகச் சீர்கேட்டைச் சரி செய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாக நான் உணருகிறேன். குறிப்பாக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் எவ்வாறு கடன் தொல்லையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். விவசாயிகளுக்கு ஒரு relief கொடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதையும் இங்கே கேட்டார்.

அதாவது, *31-3-2004* வரை கட்ட வேண்டிய அசல் தொகையை *2006-2007* ஆம் ஆண்டு முதல்தான் கட்டலாம், கட்டவேண்டுமென்று அரசு கூறியுள்ளது. ஆகவே, *1-4-2004* முதல் *30-6-2006* வரை எந்தக் கடன் தவணையையும் கட்ட வேண்டியதில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு moratorium கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, *2* ஆண்டு காலத்திற்கு விவசாயிகள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை என்று ஏற்கெனவே அரசு அறிவித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில், இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *1-4-2004* முதல் *30-6-2006* வரை கடன் தவணைகள் கட்ட வேண்டியதில்லை என்று சொன்ன அதே நேரத்தில், அதற்கான எந்த வட்டியையும் அவர்கள் கட்ட வேண்டியதில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அசலைத் திருப்பிச் செலுத்துவதற்கான போதிய கால அவகாசம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே *648* கோடி ரூபாய் அளவுக்கு வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்திருக்கிறோம். தள்ளுபடி என்றால், அந்த amount-ஐ அப்படியே நாம் write off செய்ய முடியாது. கூட்டுறவு வங்கிகளுக்கு அந்தப் பணத்தை அரசாங்கம் செலுத்த வேண்டும். அதை அரசு செலுத்தப் போகிறது. இன்னும், ஆயிரம் கோடிக்கு மேல் அசல் தொகை பாக்கியுள்ளது. அந்த அசல் தொகையையும் விவசாயிகள் கட்ட வேண்டியதில்லை, அரசே செலுத்தும் என்று அறிவிக்க வேண்டும் என்று எனக்கும் ஆசை. ஆனால், மாநில அரசின் நிதி ஆதாரங்கள் மிகவும் குறுகியவை. இதைப்பற்றி ஏற்கெனவே பலமுறை இந்த அவையில் நான் தெளிவுபடுத்தி இருக்கிறேன். மத்திய அரசின் நிதி



ஆதாரங்கள் அளவிட முடியாதவை. அது கடல் போன்றது. மத்திய அரசின் நிதி ஆதாரங்களைக் கடலுக்கு ஒப்பிடலாம். மாநில அரசின் நிதி ஆதாரங்களை ஒரு சிறிய குட்டைக்கு ஒப்பிடலாம், குளம் என்றுகூடச் சொல்லமாட்டேன், குட்டை, சிறிய குட்டை. இந்த நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு, இந்தக் குறுகிய நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு, இந்த அளவுக்கு விவசாயிகளுக்குச் சலுகைகளை எந்த மாநில அரசும் இந்தியாவில் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதுவரை வழங்கியது இல்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எங்கள் சக்திக்கு உட்பட்ட வரையில் விவசாயிகளுக்காக, ஏழை எளிய மக்களுக்காக, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்காக என்னென்ன சலுகைகள் வழங்க முடியுமோ, அவற்றை அள்ளி அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறோம். இன்னும் செய்ய வேண்டுமென்று ஆசைதான். ஆனால், மத்திய அரசு நினைத்தால், ஓரே நொடியில் விவசாயிகளின் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்ய முடியும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதைத்தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்திருக்கிறேன்.

கடந்த *3* ஆண்டுகாலமாக தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி நிலவியது அனைவருக்கும் தெரிந்த விஷயம். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, கிட்டத்தட்ட இந்தியா முழுவதும் கடுமையான வறட்சி நிலவியது. அண்டை மாநிலங்களில் எத்தனையோ விவசாயிகள் கடன் தொல்லை தாங்க முடியாமல், வேறு வழியில்லாமல் தற்கொலையே செய்துகொண்டார்கள். ஆனால், தமிழ்நாட்டில் அப்படி தற்கொலைகள் நிகழக் கூடாது, அவற்றைத் தடுக்க வேண்டும், எப்படியாவது வறட்சிக் காலத்தில்கூட விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக, அவர்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்கினோம். மாதம் 30 கிலோ அரிசி இலவசமாக வழங்கினோம். ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் வழங்கினோம். ஆகவே, மாநில அரசின் குறுகிய நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு, சிறிய நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு, எவ்வளவு தூரம் ஏழை எளிய மக்களுக்கு, குறிப்பாக, விவசாயிகளுக்கு உதவிகள் செய்ய முடியுமோ, சலுகைகள் செய்ய முடியுமோ, செய்துகொண்டிருக்கிறோம். ஆனால், இந்தியா முழுவதும் கடந்த *3* ஆண்டு காலமாக கடும் வறட்சி நிலவியதைக் கருத்தில்கொண்டு, விவசாயிகள் இந்தியா முழுவதிலும் கடன் தொல்லையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் நினைத்துப் பார்த்து, வேறு மாநிலங்களில் எத்தனையோ விவசாயிகள் குடும்பத்தோடு தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்து, மத்திய அரசு கருணை காட்ட வேண்டும். விவசாயிகளுக்கு, இந்தியா முழுவதிலும் உள்ள

விவசாயிகளுக்கு, ஒரு புதிய மறு வாழ்வைக் கொடுப்பதற்காக பழைய கடன் தொல்லைகளிலிருந்து அவர்கள் விடுபட வேண்டும் என்பதற்காக (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அவர்களுக்கு பாக்கியுள்ள வட்டி, அபராத வட்டி, அசல் தொகை அனைத்தையும் மத்திய அரசு தள்ளுபடி செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு நினைத்தால், ஒரு நொடிப் பொழுதில் அதைச் செய்ய முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) தேவையான நிதியாதாரம் மத்திய அரசிடம் இருக்கிறது. மத்திய அரசைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிற கம்யூனிஸ்ட் கட்சிகள் இதை மத்திய அரசிடம் வற்புறுத்தி சாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–15*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை ஏற்று, அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், மத்திய அரசாங்கத்திலே வலியுறுத்த வேண்டுமென்ற கருத்திலே எனக்கும் உடன்பாடு இருக்கின்றது. நாங்கள் ஆதரிக்கிற கொள்கையிலே இருக்கிறோம் என்று சொன்னால்கூட, மத்திய ஆட்சியிலே இருக்கிற தவறான கொள்கைகளை எதிர்த்து வருகிறோம். இன்றையதினம்கூட, பாரதப் பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்கள் ஒரு அறிவிப்பை வெளியிடுகிறபொழுது, இந்தியாவிலே முதன்மைத் துறையாக இருக்கின்ற விவசாயத் துறையினுடைய வளர்ச்சி 25 சதவிகிதம்தான் இருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகவே, இதை முன்னேற்றுவதற்கான முயற்சி எடுப்பதற்கு இந்த அரசு சிந்திக்க வேண்டும். ஆனால், அதற்குரிய முன் முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்பது வருத்தமளிக்கிறது என்று பிரதமர் அவர்களே ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தினாலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிற கருத்து, நூற்றுக்கு நூறு சரியானது, அதிலே நான் உடன்படுகிறேன். ஆகவே, இந்த அடிப்படையிலே மத்திய அரசாங்கமும் இதைப்பற்றி சிந்திக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து. இதிலேகூட அரசியல் பார்க்காமல், இங்கே இருக்கிற நம்முடைய காங்கிரஸ் கட்சி நண்பர்கள்கூட செய்ய வேண்டுமென்பது என்னுடைய பணிவான கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி) காரணம் — இல்லையென்றால், நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கின்ற விவசாயம் என்பது அடிப்படையாக இந்தத் தொழிலை நம்பியிருக்கின்ற அந்த விவசாயிகள், தொழிலாளர்கள், வேறு தொழிலே தெரியாதவர்கள், மாற்றுத் தொழிலைப் பற்றியே அறியாதவர்களாய் இருக்கிறவர்களுடைய



நிலைமை வேறுவிதமாகப் போய்விடும் என்பது ஒன்று. ஆனால், இந்த நாட்டிற்கு அவர்கள்தான் உணவு படைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உணவு படைத்துக்கொண்டிருக்கிற விவசாயிகளைப் பற்றி அக்கறையில்லாமல் இருந்துவிடுவோம் என்று அந்த அச்சம் வந்துவிடும். ஆகவே, மத்திய அரசாங்கம், அந்த காங்கிரஸ் அரசாங்கம் எங்களுடைய ஆதரவோடு இருந்தாலும், இந்த விஷயத்தில் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்திருப்பதை அரசியலுக்கு அப்பாற்பட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன அரசியலுக்கு அப்பாற்பட்டு என்று. அரசியல்தான் அது. (சிரிப்பு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** கூட்டணி. அதே நிலைமையிலே, நம்முடைய மரியாதைக்குரிய வேளாண் விஞ்ஞானி திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பாக, உற்பத்தி என்பது ஒரு சதவிகிதம்தான் இருக்கிறது என்றும் ஆனால், மக்கள் தொகையினுடைய உற்பத்தி இரண்டு சதமாக உயர்ந்து கொண்டே இருக்கிறது என்றும் ஆகவே, இரண்டிற்கும் இடைப்பட்டிருக்கின்ற இந்த வித்தியாசத்தை நிரப்புவதற்கான முயற்சிகளை வேகமாகத் திட்டமிட்டு நிறைவேற்றுவதற்கு மத்திய அரசாங்கம், மாநில அரசுகள் எடுக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே அதைப்பற்றி நாம் சிந்திப்பதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டும். ஆகவே, குறிப்பாக இந்தப் பிரச்சினைகளின் அடிப்படையிலே விவசாயிகளுடைய இந்த விஷயங்களை கவனத்திலே வைத்து, மேலும் விரைவாக செயல்படுத்துவதற்குரிய வாய்ப்புகளை உருவாக்குவதற்கான சந்தர்ப்பங்கள் வரும் என்று நான் நம்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியில் முடித்துக்கொள்ளுங்கள். அடுத்து ஹேமச்சந்திரன் அவர்கள் பேச வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அந்த அடிப்படையிலே குறிப்பாக நமது நிர்வாகச் சீர்திருத்தம் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சீர்திருத்தத்தின் அடிப்படையிலே மற்ற காரியங்களைச் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, ஒருசில செய்திகளை நான் சொல்லி முடிக்க விரும்புகிறேன். குறிப்பிட்ட செய்திகளை இங்கே நமது ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியைப் பற்றி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் வெளியிட்டார்கள். அதிலே கர்நாடக அரசினுடைய நடவடிக்கைகளைப் பொறுத்தவரையிலும் அத்துமீறிய செயல்பாடுகளாக வந்து கொண்டிருக்கின்றன. காவிரி பிரச்சினையானாலும் அப்படித்தான் நடைபெறுகிறது. இந்த நீர்வீழ்ச்சிப் பிரச்சினையிலும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்றன. எனக்கு ஒரு அச்சம் இருக்கிறது. இந்த நீர்வீழ்ச்சியிலே இந்த இடத்தை ஆக்கிரமிப்பதற்கான முயற்சிகளை கர்நாடகம் எடுக்கிறபோது இது எங்களுடைய இடம் என்று சொல்கிற அளவிற்கு வரையிலும் நாம் எப்படி இருந்தோம் என்ற ஒரு பிரச்சினை இருக்கிறது. நம்முடைய எல்லைப் பகுதியில் வந்தவர்கள் தைரியமாக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இதைப்பற்றி இங்கே விளக்கம் அளித்தேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவையில் இல்லையோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. இதுவரை இந்த இடத்தைப் பற்றிய பிரச்சினை எழவேயில்லை. Survey of India, India survey வரைபடங்களில் இந்தப் பகுதி தமிழ்நாட்டில்தான் இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. உபயோகத்திலும் இந்தப் பகுதி தமிழ்நாட்டால்தான் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை இதைப்பற்றி பிரச்சினையே எழவில்லை. அங்கே ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். அவர்களுடைய பாதுகாப்பிற்காக கைப்பிடி கம்பிகள் Railings அங்கே அமைக்க வேண்டும் என்ற பணிகளைத் துவங்கியபோது, பூர்வாங்கப் பணிகளை துவங்கியபோது, திடீரென்று இந்தப் பிரச்சினையை கர்நாடக மாநிலம் கிளப்பிக் கொண்டிருக்கிறது. இதை ஏன் செய்கிறார்கள் என்று புரியவில்லை என்று நேற்றே சொன்னேன். இது நிச்சயமாக தமிழ்நாட்டிற்கு உட்பட்ட பகுதிதான். ஆகவே, இந்தச் சர்ச்சையை இதோடு கர்நாடக அரசு கைவிட வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–20*

**திரு. வை. சிவபுண்ணியம்:** விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவு செய்து இரண்டு கோரிக்கைகளோடு முடித்துவிடுகிறேன். நான் சென்ற முறை பட்ஜெட் கூட்டத்தொடரில் பேசிய போது 2, 3 கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் குறிப்பாக நம்முடைய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது தரமணியிலே. அதிலே பணிபுரிகிற 30 ஊழியர்கள் – எண்ணிக்கை என்பது மிகக் குறைவான எண்ணிக்கையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, இந்த



உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலே பணிபுரிகிற அந்தப் பணியாளர்களுக்கு நமது அரசின் சார்பில் வழங்கப்படுகிற ஓய்வூதியமோ, இதர சலுகைகளோ அவர்களுக்கு மட்டும் கிடையாது. மற்ற இடங்களிலே பணிபுரிகிற ஆசிரியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும், மற்றவர்களுக்கும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த விஷயங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவான பார்வையின் மூலமாக இந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு உரிய அந்தப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் இதர சலுகைகளை வழங்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நம்முடைய பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள், அவர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது.

அதேபோல கணினி ஆசிரியர்களுக்கு ஏற்கெனவே பேசி அவர்களுக்கு ஒரு சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த 6 மாதங்களாக அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை என்ற குறைபாடு சொல்லப்படுகிறது. ஆகவே, அந்த கணினி ஆசிரியர்களுக்கான ஊதியத்தை உடனடியாக வழங்குவதற்கும், தொடர்ந்து வழங்குவதற்குமான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இங்கே மருத்துவர்கள் நியமனம் குறித்து நமது அரசும், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மருத்துவர்கள் நியமனம் என்பதிலே இப்பொழுது அவர்களை 6 மாத காலம் பணியிலே இருந்தவர்களை மேலும் நீட்டிப்பு செய்திருக்கிறீர்கள். நான் வரவேற்கிறேன். அந்த மருத்துவர்களையும் இணைந்த முறையிலே தேர்வாணையத்தின் மூலமாக தேர்வு நடைபெறப் போவதாக ஒரு செய்தி இருக்கிறது. ஆகவே, தேர்வாணையம் மூலமாக மருத்துவர்களை நியமனம் செய்கிறபொழுது இந்த 6 மாத காலம் பணியாற்றி மேலும் நீட்டிப்புச் செய்திருக்கிற இந்த மருத்துவர்களை முன்னுரிமை அடிப்படையில் பணி நிரந்தரம் செய்வதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நான் இங்கே ஒரு செய்தியைப் பதிய வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான்

இப்பொழுது சொன்னேன். இந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலே 30 ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குச் சொல்லவேண்டும். அந்த 30 ஊழியர்களுக்கும் இதுவரையிலே ஓய்வூதியமோ, இதர பயணப்படிகளோ வேறுவிதமான காரியங்களோ நமது அரசு ஊழியர்களுக்குக் கிடைப்பதுபோல அவர்களுக்கு மட்டும் கிடைக்கவில்லை. அவர்கள் மொழியாக்கம் செய்வதிலே மற்ற பணிகளிலே மிகவும் சிறந்த முறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட கால கோரிக்கை அது. ஆகவே, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தரமணியிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த நிறுவனத்திலே பணியாற்றுகிற வெறும் குறைந்த எண்ணிக்கையாக இருக்கிற அந்த 30 ஊழியர்களுக்கு ஓய்வூதியம் போன்ற இதர சலுகைகளை நமது அரசு ஊழியர்களுக்கு வழங்குவதைப்போல வழங்கச் செய்வதற்கான முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவாக எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

நமது மாபெரும் தலைவராக அனைவராலும் அன்போடு அழைக்கப்படுகிற இலக்கிய பேராசான் ஜீவா அவர்களுடைய நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று கேட்டேன். அதிலே பல சிக்கல்கள் இருக்கும் என்றுதான் நான் கருதுகிறேன். நூல்கள் எந்த வகையிலே இருக்கின்றன, எந்த நிலையிலே இருக்கின்றன என்றுகூட நான் பேரவைத் தலைவரிடம் குறிப்பாகப் பேசினேன். இருந்தாலும் அவற்றை ஆய்வு செய்து நாட்டுடைமையாக்குவதற்குரிய வாய்ப்புகள் இருந்தால் அதைச் செய்து தரவேண்டும். அதற்கிடையிலேயே அமரர் பேராசான் ஜீவா அவர்களுடைய குடும்பத்தார்கள் மிக நலிந்த நிலையிலே இருக்கிறார்கள். இப்போது மற்றவர்களுடைய நினைவுச் சின்னங்கள் இங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றன. காரியங்கள் செய்யப்படுகின்றன. அவர்களுடைய குடும்பத்திற்கான உதவி வழங்க முடியுமானால் அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மருத்துவர்கள் நியமனத்திலேயும் அந்தக் காரியத்தைச் செய்யவேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் துணை மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ரூபாய் 1,919.25 கோடிக்கு



அவர் துணை மானியக் கோரிக்கையைத் தருகிற நேரத்திலே அவர் சில விஷயங்களை இங்கே குறிப்பிட்டிருக்கிறார். இதிலே நான் ஒன்றைத் தெள்ளத்தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புவது, இந்த சைக்கிள் கொடுத்த விஷயமானாலும் சரி அல்லது அவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் கொடுத்த விஷயமானாலும் சரி அல்லது Civil Supplies Corporation–ல் ரேஷன் ஏற்பாடுகள் செய்யப்பட்டது சம்பந்தமான விஷயமானாலும் சரி இவையெல்லாம் ஏற்கெனவே அரசு செய்யவேண்டியவற்றைச் செய்யாமல் இருந்து, அதற்குப் பிறகு செய்யப்பட்டிருக்கின்றன. (சிரிப்பு) என்ன? என்ன? என்ன? நான் பேசுவதற்கே விடமாட்டீர்கள் என்றால் என்ன அர்த்தம்? அதாவது நான் ஒன்றை அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசு ஒரு புதிய கலாச்சாரத்தை இந்த நாட்டிலே உருவாக்கியிருக்கிறது. அதாவது collective bargaining என்ற — உழைப்பாளி மக்களுடைய உரிமைகளைப் பெறுவதற்கு அவர்கள் பேரம் பேசுவதற்கான அந்த உரிமையை இந்த அரசு இன்று அறவே நிராகரித்திருக்கிறது என்பது நாடறிந்த உண்மை. இன்றைக்குப் போக்குவரத்துத் தொழிலாளிகளைப் பொறுத்த அளவிலே அவர்களுக்கு 4 ஆண்டு காலம் கொடுக்க வேண்டிய உரிமைகளை மறுத்துவிட்டு, தொள்ளாயிரத்து சொச்சம் கோடி ரூபாய் கொடுக்க வேண்டியதற்குப் பதிலாக முன்னூறு கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு — துணை மானியக் கோரிக்கையினுடைய 6 ஆம் page–லே என்று நினைக்கிறேன்.

பிற்பகல் 1–25

***மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் எந்த முதலமைச்சரும் செய்யாத வகையில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொழிலாளர்கள், நிருவாகிகள் அனைவரையும் நேரடியாக அழைத்துப் பேசி, அவர்களுடைய கருத்துகளை அறிந்து, அதன் அடிப்படையில் தொழிலாளர்கள் அனைவரும் இன்றைக்கு மகிழ்வுறும்வண்ணம், மகிழ்வுற்று நன்றி கூறுகின்ற வகையில் மிகவும் அருமையான ஓர் ஒப்பந்தத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்த அந்த ஒப்பந்தத்தை வரவேற்று, அனைத்துத் தொழிலாளர்களும் நன்றி தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) அதைத்தான் சொன்னேன். இந்தியாவிலே எந்த முதலமைச்சரும் செய்யாத வகையில்,

மாண்புமிகு அம்மா அவர்கள் நேரடியாகத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசிய வரலாறு இதுவரை எங்குமே நடந்தது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்ல. ஒன்றை இந்த நேரத்திலே நான் உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். 3 ஆண்டு காலம் இருந்த ஒப்பந்தத்தை 5 ஆண்டு காலமாக ஆக்கிய ஒரு பிரச்சினையை மட்டும் தொழிற்சங்க உறுப்பினர்கள் (குறுக்கீடு) இல்லை, சிலர், உங்கள் தொழிற்சங்க உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுடைய தொழிற்சங்கத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய திரு. டி.கே. ரங்கராஜன் (குறுக்கீடு) ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Honourable Speaker Sir, நான் பேசாத விஷயத்தை அவர் கற்பனையாக நினைத்துக்கொண்டு சொல்லக்கூடாது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை, வெளியிலே நடக்கிற சம்பவம். இது மட்டுமல்ல. உங்களுடைய தொழிற்சங்கம் (குறுக்கீடு) இல்லை, இல்லை. உங்களுடைய தொழிற்சங்கம் இப்போது ஒப்பந்தத்தில் (குறுக்கீடு) இல்லை, எல்லா தொழிலாளர்களும் இன்றைக்கு இந்த ஒப்பந்தத்தை வரவேற்றுப் பாராட்டி, அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் மாறாக உங்களுடைய தொழிற்சங்கம் மட்டும், அந்தத் தொழிற்சங்க ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. அதற்கு என்று ஒரேயொரு காரணத்தை மட்டும்தான் சொன்னார்கள். இதிலே மூன்றாண்டு காலம் என்பதை ஐந்தாண்டு காலமாக ஆக்கியிருக்கிறீர்கள், அதனால் மற்ற ஷரத்துக்கள் அனைத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், அந்த ஒரு ஷரத்தை மட்டும் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். உங்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்வதெல்லாம் உங்களுடைய தொழிற்சங்கத் தலைவர் மரியாதைக்குரிய திரு. டி.கே. ரங்கராஜன் அவர்கள் மத்திய அரசு நிறுவனமான B.H.E.L. நிறுவனத்தோடு ஏற்பட்ட ஒப்பந்தத்தில், அந்தத் தொழிலாளர் ஒப்பந்தத்தில் இதுவரை 5 ஆண்டு காலத்திற்கொரு முறை ஊதிய ஒப்பந்தம் என்று இருந்த நிலையை மாற்றி, 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய ஒப்பந்தம் போடப்படும் என்று சேர்த்த ஷரத்தினை ஏற்றுக்கொண்டு உங்களுடைய சங்கத் தலைவர் கையெழுத்திட்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய



திரு. சி.கே. குப்புசாமி, எம்.பி. அவர்களும் இதுவரை N.L.C. நிறுவனத்தில் ஐந்தாண்டு காலத்திற்கு ஒரு முறை ஊதிய ஒப்பந்தம் என்று இருந்ததை 10 ஆண்டு காலமாக மாற்றி புதிய ஷரத்தை ஏற்படுத்தியிருக்கிறார்களே அதற்கு திராவிட முன்னேற்றக் கழகமும் ஒப்புதல் அளித்து அவரும் கையெழுத்திட்டிருக்கிறார். அதேபோல மத்திய அரசினுடைய மற்றொரு நிறுவனமான B.H.E.L., Bharat Heavy Electricals Limited அந்த நிறுவனத்தில் B.M.S. சங்கமும் கையெழுத்திட்டிருக்கிறது. I.N.T.U.C. சங்கமும் கையெழுத்திட்டிருக்கிறது. (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடம். முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேச்சை முடித்துவிடட்டும். திரு. ஹேமச்சந்திரன், அமைச்சர் பேச்சை முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அதேபோல மத்திய அரசினுடைய மற்றொரு நிறுவனமான (குறுக்கீடு) இல்லை, இல்லை. பேச்சை முடித்துவிடுகிறேன். மத்திய அரசினுடைய மற்றொரு நிறுவனமான Bharat Heavy Electricals Limited என்ற அந்த நிறுவனத்தில் இருக்கின்ற தொழிலாளர்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய ஒப்பந்தம் என்று இருந்த நிலையை மாற்றி, இப்போது 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய ஒப்பந்தம் போடப்படும் என்ற புதிய ஷரத்தைச் சேர்த்து அப்படி 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய ஒப்பந்தம் போடப்படும் என்பதை ஏற்றுக்கொண்டு, உங்களுடைய தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களும் அங்கு கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** ஆக, 5 ஆண்டு காலத்தை, 10 ஆண்டு காலமாக ஏற்றுக்கொண்டால்தான் நீங்கள் கையெழுத்திடுவீர்கள். 3 ஆண்டு காலமாக . . . (குறுக்கீடுகள்) இதோடு முடித்துக்கொள்கிறேன். அதாவது, தொழிலாளர்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிற நன்மைக்கு (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் சொல்லி முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை நான் கேட்பது, மத்திய அரசு நிறுவனத்தில் மட்டும் நீங்கள் கையெழுத்துப் போடுகிறீர்களே— மத்திய அரசினுடைய நிறுவனம் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்ற ஊதிய ஒப்பந்தத்தை 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை என்று மாற்றுகிறபோது அந்த ஊதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிற நீங்கள் மாநில அரசினுடைய ஊதிய ஒப்பந்தம் தொழிலாளர்களுக்காக மிகப் பெரும் ஒரு அற்புதமான, அருமையான, தொழிலாளர்கள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற இந்த ஊதிய ஒப்பந்தத்தில் நீங்கள் கையெழுத்திட மறுத்தது ஏன் என்பதைத்தான் உங்களிடத்திலே அன்போடு நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது என்.எல்.சி-ல் ஏன் கையெழுத்துப் போட்டீர்கள்? மேற்கு வங்காளத்தில் ஏன் கையெழுத்துப் போட்டீர்கள்? உத்திரப் பிரதேசத்தில் ஏன் கையெழுத்துப் போட்டீர்கள்? அதெல்லாம் இல்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், அதாவது ஒவ்வொரு industry-யிலேயும் இருக்கிற தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளான சங்கங்கள் அங்கேயிருக்கிற நிலைமைக்குத் தகுந்த அளவிலே அவர்களுடைய திருப்திக்கு ஏற்ற முறையிலே அவர்கள் ஒப்பந்தம் போடுவார்கள். அது அமைச்சர் விசுவநாதன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். Majority workers இந்த ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போட வேண்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, majority தொழிற்சங்கங்கள் கையெழுத்திட்டு இருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட 21 தொழிற்சங்கங்களில் 14 தொழிற்சங்கங்கள் கையெழுத்திட்டிருக்கின்றன, 3-ல் 2 பங்கு தொழிற்சங்கங்கள் கையெழுத்திட்டு ஒப்புதல் அளித்திருக்கின்றன. அதிலே மேற்கு வங்கத்தைப் பற்றிச் சொன்னால், மேற்கு வங்காளத்திலே இருக்கிற தகவலை வேண்டுமானால் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேற்கு வங்காளத்தில் ஊதிய ஒப்பந்தம் நடந்து இப்பொழுது 7 ஆண்டுகள் முடிந்திருக்கின்றன. 7 ஆண்டுகளுக்குப் பின்பும் இன்னும் புதிய ஊதிய ஒப்பந்தம் போடப்படவில்லை என்ற செய்தியையும் உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, அங்கே தொடர்பு கொண்டு எப்போது ஊதிய ஒப்பந்தப் பேச்சு நடத்துவீர்கள் என்று கேட்டபோது, இன்னும் 2 ஆண்டு காலம் ஆகலாம் அல்லது 3 ஆண்டு காலம் ஆகலாம் என்றார்கள்.



ஆனால் வழக்கத்தில் மேற்கு வங்காளத்தில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் ஊதிய ஒப்பந்தம் போடப்படுகிறது என்கிற செய்தியையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அங்கே எல்லாம் workers-க்கு பிரச்சினை கிடையாது. Speaker Sir. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மேற்கு வங்கத்திலே இருக்கிற தொழிற்சங்கங்களும் அங்கே போராடிக் கொண்டிருக்கின்றன.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆமாம். எங்களுக்குத் தெரியும். அதாவது Speaker Sir, யானைப் பசிக்கு சோளப்பொரி கொடுத்ததுபோல் போக்குவரத்துத் தொழிலாளிக்கு 4 ஆண்டு காலம் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் கடைசியிலே கொஞ்சம் கொடுத்துவிட்டு, அதேபோன்று . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்றொரு செய்தியையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து கையெழுத்துப் போடாத உங்களுடைய தொழிற்சங்கத்தைச் சேர்ந்த நிருவாகிகள் அனைவரும், தொழிலாளர்கள் அனைவரும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தவுடன் 10,000, 20,000, 30,000 என்று பணத்தைப் பெற்றுக்கொண்டு வெளியே வருகிறபோது அங்கே கேட்டின் வெளியில் நின்று கொண்டு 1,000 ரூபாய் கொடு, 1,000 ரூபாய் கொடு என்று அதிரடி வசூல் செய்கிறீர்கள். ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போடமாட்டீர்கள், வசூல் மட்டும் அதிரடி வசூல் செய்கிறீர்களே, அது நியாயமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்ல, மற்றொரு செய்தியையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்றொரு முக்கியமான செய்தியையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதை இந்த அவைக்குத் தெரிவித்தாக வேண்டும். (குறுக்கீடு) இன்னொரு செய்தியைச் சொல்லி முடித்து விடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லி முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு பணமாகக் கொடுத்தால் அவர்கள் கட்டாயப்படுத்தி வெளியிலே வசூல் செய்து விடுகிறார்கள் என்று

[திரு. இரா. விசுவநாதன்] [2005 செப்டம்பர் 27

தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் பலரும் எங்களிடம் புகார் செய்தார்கள். அதனுடைய அடிப்படையில் இந்தச் தொழிற்சங்க நிருவாகிகளிடமிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள் என்று தொழிலாளர்கள் எல்லாம் எங்களிடம் வேண்டுகோள் வைத்ததன் காரணமாக அவர்களுக்கு பணமாகக் கொடுத்தால் இந்த முறை வெளியிலே அந்த இடத்திலேயே கட்டாய வசூல் செய்து விடுவார்கள், எனவே நீங்கள் செக்காகக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். இந்த முறை அவர்கள் அனைவருக்கும் செக்காக அது வழங்கப்பட்டது. காசோலையாக வழங்கியதற்குப் பின்பு (குறுக்கீடு) நான் மக்களிடம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதுதான் செய்தி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு முக்கியமான செய்தி.

*பிற்பகல் 1–3.5*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை (குறுக்கீடு) இல்லை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தக் காசோலையாகக் கொடுத்ததை இவர்கள் ஏற்றுக்கொள்ளலாம் அல்லவா? நல்ல எண்ணம் இருப்பவர்கள் ஏற்றுக்கொள்ளலாம் அல்லவா? அந்தக் காசோலையாகக் கொடுத்தது தவறு என்று நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இதை (குறுக்கீடு) அதில் உள்நோக்கம் என்ன? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** தங்களுடைய தோழர்கள் என்று சொல்லி தொழிலாளர்களை ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள் யார்? உண்மையான தொழிலாளியினுடைய நண்பர் யார் என்று உழைக்கின்ற தொழிலாளிகள் அடையாளம் கண்டு கொண்டுவிட்டார்கள் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடு) இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், cheque-காகக் கொடுத்தால் cheque-லே கால் பகுதி கிழித்துவிடாமல் இருக்க வேண்டும். (சிரிப்பு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Speaker Sir...



2005 செப்டம்பர் 27]

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இதிலே அவரவர்கள், அந்தத் தொழிலாளர்களுடைய மனைவிமார்கள், அவர்களுடைய துணைவியார்கள்...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லி முடித்துவிடட்டும்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) சொல்லி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இதை...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, உட்காருங்கள். சொல்லி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைய விஷயங்களை அமைச்சர் வைத்திருக்கிறார்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோடு மட்டுமல்ல. இவர்கள், வசூலிலிருந்து காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காக தொழிலாளர்களுடைய துணைவியார்களும் எங்களிடம் கேட்டுக்கொண்டார்கள். அதனுடைய அடிப்படையில் அவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. (குறுக்கீடுகள்) இல்லை. அந்தந்தத் தொழிலாளர்களுடைய வீடுகளுக்கு,

வீட்டு முகவரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள், தொழிலாளர்கள், தங்களுடைய துணைவியார்களுடன் வந்து அந்தப் பணத்தைப் பெற்றுச் சென்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Speaker Sir, அதாவது...

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நில்லுங்கள், (குறுக்கீடு) நில்லுங்கள். (குறுக்கீடு) இருங்கள். (குறுக்கீடு) இருங்கள். Speaker, (குறுக்கீடு) Speaker Sir, (குறுக்கீடு) நில்லுங்கள், அதாவது நாங்கள் (குறுக்கீடு) நான் தெளிவாகச் சொன்னேன். அதாவது தொழிற்சங்க இயக்கத்தை முடமாக்குவது என்பதுதான் . . . (குறுக்கீடுகள்)

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், இதிலே ஆத்திரப்படுவதற்கு எதுவும் இல்லை. அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொல்கிறார்கள். உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். திரு. ஹேமச்சந்திரன்தான் பேசிக்கொண்டிருக்கிறார். அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அமைச்சர் திரு. ஹேமச்சந்திரன் சொல்லட்டும். அதற்கான விளக்கத்தை அதிலே ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் Party fund என்று சொல்கிறார்கள். Party fund என்றால் அவர்கள் விரும்பிக் கொடுக்க வேண்டுமே தவிர, கட்டாயப்படுத்தி ஏன் வசூல் செய்யவேண்டும் என்றுதான் கேட்கிறேன். அதை (குறுக்கீடுகள்) அதிரடி (குறுக்கீடுகள்) அந்தத் தொழிலாளர்கள் விரும்பவில்லை. ஆனால், நீங்கள் கட்டாயப்படுத்தி வசூல் செய்கிறீர்கள். இப்போது அதைத் தடுத்து நிறுத்திவிட்டோம். (குறுக்கீடுகள்) அதுதான் உங்களுக்கு வயிற்றெரிச்சல். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, நான் தெளிவாகச் சொன்னேன். தமிழகத்திலே தொழிற்சங்க இயக்கத்தை முடமாக்குவது என்ற நோக்கத்துடன் இந்த அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதற்குத் திட்டத் தெளிவான எடுத்துக்காட்டுதான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் விசுவநாதன் அவர்களே என்ன சொல்கிறார், தொழிற்சங்கத்திற்கு சந்தா வசூலிக்கக்கூடாது என்பதற்காகத்தான், நான் Cheque கொடுத்தேன் என்று.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Cheque சம்பிரதாயத்தை...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** ஒரு நிமிடம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் அமல்படுத்தினதே, தொழிற்சங்கங்களுக்குச் சந்தா வசூலிப்பதற்கான சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை (குறுக்கீடு) இல்லை. சந்தா இல்லை. (குறுக்கீடு) சந்தா இல்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** என்பதற்காகத்தான் என்று திட்டத் தெளிவாகச் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. சந்தா கொடுப்பதற்கும் Chequeதான்...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தா கொடுப்பது பிரச்சினையே அல்ல. சந்தா பெறுவது பிரச்சினையே அல்ல. சந்தாவை அந்தந்தத் தொழிற்சங்கம் . . .

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். ஒரு விளக்கம் உங்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் (குறுக்கீடு) சந்தா வசூல் செய்வதற்கும், நன்கொடை வசூல் செய்வதற்கும் உள்ள பிரச்சினையைப் போட்டுக் குழப்பிக்கொண்டிருக்கிறார். நான் சொன்னது சந்தாவைப் பெறுவதற்கு நாங்கள் யாரும் தடையாக இல்லை. மாறாக, அந்தந்தத் தொழிற்சங்கத்திற்கு நிர்வாகமே அந்தச்

சந்தாவைப் பெற்று அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தந்தத் தொழிற்சங்கங்கள் பெறவேண்டிய சந்தாவை நிர்வாகமே அவர்களுக்கு வசூல் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறது. அதிலே பிரச்சினையே இல்லை. ஆனால், மாறாக நன்கொடை என்ற பெயரில் அதிரடியாக வசூல் செய்வதிலிருந்து அந்தத் தொழிலில் இருந்த தொழிலாளர்கள், எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று அவர்கள் வைத்த கோரிக்கையின்பேரில்தான் அது Cheque-ஆக வழங்கப்பட்டது என்பதை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சங்க வரலாறு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா, தெரியாதா என்று எனக்குத் தெரியாது. ஏனென்றால், இன்று, நேற்று அல்ல, இந்த நாடு விடுதலைப் போராட்ட காலத்திலேயிருந்து தொழிற்சங்கங்களை வைத்துப் போராடிக்கொண்டிருக்கிறது. அந்தச் சங்கத்தை நடத்தக்கூடியவர்களே அந்தச் சங்கத்தில் இருக்கிற உறுப்பினர்கள்தான். அவர்கள் ஊதியத்திலிருந்துதான் அந்தச் சங்கத்திற்கான, மாதாந்திரமோ அல்லது வருடாந்திர கட்டணங்களையோ அவர்கள் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, இல்லை. இது ஒரு குற்றச்சாட்டு, ஒரு அபாண்டமான குற்றச்சாட்டு. நாங்கள் முதலாளிகளிடத்திலே போய், சமரசம் பண்ணி சங்கம் நடத்துவதும் இல்லை, கட்சி நடத்துவதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** தொழிலாளி, உழைக்கின்ற மக்களிடம் நிதி பெற்றுத்தான் நாங்கள் கட்சி நடத்திக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தாவையும், நன்கொடையையும் சேர்த்துக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)



**திரு. ஜி. பழனிசாமி:** ஆகவே, இந்த இயக்கத்தைப்பற்றி இப்படி அவதூறான குற்றச்சாட்டுக்களைச் சொல்லக்கூடாது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** சந்தா வசூல் செய்யக்கூடாது என்று நாங்கள் சொல்லவேயில்லை. (குறுக்கீடுகள்) ஆனால், நீங்கள் (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் சந்தா வசூல் செய்கின்ற பிரச்சினையைத் திசை திருப்பப் பார்க்கிறார்கள். சந்தா வசூல் செய்வது என்பது வேறு, நன்கொடை வசூல் செய்வது என்பது வேறு. ஊதிய ஒப்பந்தம் போடப்படுகின்றபோது, கட்டாய நன்கொடை வசூல் செய்வதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** ஆதாரம் இருந்தால் சொல்லச் சொல்லுங்கள். ஆதாரபூர்வமாக இதை விவாதிப்போம். அவர் ஏற்றுக்கொள்ளத் தயாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** அமைச்சர் என்றால் எதை வேண்டுமானாலும் பேசலாமா நீங்கள்? எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று முடிவு செய்வதா அது? என்ன அர்த்தம் அது? அமைச்சராக இருந்தால், எதை வேண்டுமானாலும் பேசிவிட்டுப் போகலாமா? நாளைக்கு ஒரு கடுதாசி எழுதிக் கொண்டு வந்து படிப்பீர்கள் நீங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜே. ஹேமச்சந்திரன், பேசலாம். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** ஆதாரம் இருக்கிறதா ஏதாவது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நான் சொன்னதற்கு நான் முழு பொறுப்பு ஏற்றுக்கொண்டு, அந்த ஆதாரங்களைச் சமர்ப்பிக்கத் தயார் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜே. ஹேமச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு விளக்கம். பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடுகள்)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. ஜே. ஹேமச்சந்திரன் பேசட்டும். (குறுக்கீடுகள்) திரு. ஜே. ஹேமச்சந்திரன் பேசட்டும். நீங்கள் சொல்ல வேண்டியதை அவர் சொல்வார், திரு. ஹேமச்சந்திரன் சொல்வார். உட்காருங்கள், உட்காருங்கள். திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, I challenge the Transport Minister. அதாவது நாங்கள் கட்டாயப்படுத்தி, இம்சைப்படுத்தி சந்தா வசூலித்திருக்கிறோம் என்றிருந்தால், அவர் நடவடிக்கை எடுக்கட்டும். அவருக்குத் தைரியம் இருந்தால் அவர் நடவடிக்கை எடுக்கட்டும். I challenge it. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா தி.மு.க. தொழிற்சங்கத்தில்...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** புகார்கள் வந்தால், புகார்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** தொழிற்சங்க ரீதியாக அண்ணா தி.மு.க. என்ன நடைமுறையைக் கையாளுகிறது என்பதை விளக்கவேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சரி. இந்த அரசைப் பொறுத்தளவிலே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் நன்கொடை வசூல் செய்வதில்லை, சந்தா மட்டும் வசூல்



செய்கிறார்கள். சந்தா வசூல் செய்வதிலே, எந்தத் தொழிற்சங்கத்திற்கும் நாங்கள் இடையூறாக இல்லை. குறிப்பாக, இன்னும் சொல்லப்போனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின் பேரில், நிர்வாகமே அந்தச் சந்தாவை வசூல் செய்து உங்களுக்குத் தந்து கொண்டிருக்கிறது. அதுதான் இப்போதும் நடைமுறையில் இருக்கிறது. அதிலே நாங்கள் யாரும் குறுக்கிடவில்லை. அதைப் பெற்றுக்கொண்டுதான் இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அடுத்து, பள்ளிக்கூடங்களைப் பொறுத்தளவிலே, இன்றைக்கு இருக்கிற நிலைமை என்னவென்றால், நம்முடைய பள்ளிக்கூடங்களைப் பொறுத்தளவிலே, social control என்பது, அதாவது அரசினுடைய admission policy–ஆனாலும் சரி, fees structure–ஆனாலும் சரி, சில contents of the syllabus-ஆனாலும் சரி, இந்த மூன்றும் இன்றைக்கு அரசினுடைய control–லிலே கிடையாது. இன்றைக்குத் தனியார்களுடைய சொத்தாக இது மாற்றப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், எஞ்சிய பேச்சை நாளைக்குத் தொடரலாம். நாளைக்குத் தொடருங்கள்.

## 9. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை (28–09–2005) அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ 28–09–2005 அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (28–09–2005) வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28–09–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

30. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

31. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

30. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தி எட்டாவது அறிக்கை. (2003–2006)

31. மனுக்கள் குழுவின் நூற்றி இருபத்தி மூன்றாவது அறிக்கை. (2003–2006)

32. மனுக்கள் குழுவின் நூற்றி இருபத்தி நான்காவது அறிக்கை. (2003–2006)

33. மனுக்கள் குழுவின் நூற்றி இருபத்தி ஐந்தாவது அறிக்கை. (2003–2006)

❖❖❖❖

ஆவணக் காப்பகம்
186243
சென்னை-600 008

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.